ALKI 9.12.90 ரூ. 2.50

கல்கி



இசையுலகின் இரு சிகரங்கள்



தமிழக பி.ஜே.பி. வட்டாரங்களில் உற்சாகம் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கிறது. காரணம், 'ரதயாத்திரை வீரர்' அத்வானி இரண்டு நாட்கள் தமிழ்நாட்டில் பயணம் செய்த போது கிடைத்த வரவேற்பு தான். ''நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கோயமுத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் போகும் வழியில் கிராம மக்கள் கூட ''அத்வானி, அத்வானி'' என்று காரை நோக்கிக் கையை நீட்டி ஆர்ப்பரித்தது ஒரு புதிய அனுபவம்'' என்றார் தமிழக பி.ஜே.பி. தலைவர் விஜயராகவன்.

மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் பேசி முடித்த பின், அத்வானி, சேரன் எக்ஸ்பிரஸ் மூலம் ஆம்பூர் வந்து சேர்ந்தார். அத்வானி போன மாதம், கைது செய்யப்பட்ட போதும், பின்னர் அயோத்தியில் நடந்த கரசேவையின் போதும் ஆம்பூரில் பி.ஜே.பி. தொண்டர்கள் தடுப்புக் காவலில் உள்ளே வைக்கப்

மலிவான விளம்பரத்தை வெறுக்கும் அத்வானி!



"நம்ம வேலைக்காரிக்கு நாம கறுப்பு—வெள்ளை டி. வி., வைச்சிருக்கறது பிடிக்கலையாம். அதனால..."

"அதனால என்ன?"

"நாம கலர் டி. வி. வாங்குவதற்கு அவளே லோன் தர்றேங்குறா!"

— குடந்தை எல். ராம்பிரபு.

பட்டார்கள். அப்போது போலீஸ் தாக்குதலில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்டவர்களை மேடையில் ஏற்றிப் பொதுக் கூட்ட மக்களுக்குக் காயங்களைக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களும் மேடைக்கு வந்து விட்டார்கள். அவர்களைப் பார்த்து 'என்ன விஷயம்?' என்று கேட்டுத் தெரிந்து கொண்ட அத்வானி, "நோ... சட்டையெல்லாம் கழற்றி காயங்களைக் காட்ட வேண்டாம். சொன்னதே போதும்" என்று அவர்களை மேடையிலிருந்து இறங்கச் சொன்னார். ஆவேசமான உள்ளூர் பி. ஜே. பி. தொண்டர்களுக்குக் கொஞ்சம் வருத்தம் தான். 'தமிழ் நாட்டில் விலை போகும் பாலிடிக்ஸ் பண்ணத் தெரியாத மனிதராக இருக்கிறாரே' என்று முணுமுணுத்தனர்.

"இதுபோன்ற மலிவான விளம்பரங்களை அத்வானிஜி வெறுக்கிறார். அவர் கைது செய்யப்பட்ட போது தேனியில் ஒருவர் தீக்குளித்து இறந்தார். மண்டல் போராட்டத்தில் எங்கள் கட்சித் தோழர் ஒருவர் நெய்வேலியில் இறந்தார். இருவருக்கும் நிதி திரட்டிக் கொடுக்க வேண்டும் என்று தலைவரிடம் சொன்னோம். அவர் ஒரேயடியாக வேண்டாமென்று தலையாட்டி மறுத்தது மட்டுமல்ல, "தற்கொலைகள் செய்து கொள்வது கொஞ்சமும் சரியல்ல; இதுபோன்ற செயல்களை நாம் ஊக்குவிக்கக் கூடாது" என்று அறிவுரை வழங்க ஆரம்பித்து விட்டார்" என்றார் விஜயராகவன்.

ஆம்பூர் கூட்டத்தில் அத்வானிக்குப் பித்தளையால் செய்யப்பட்ட அழகான வில்லும், அம்பும் பரிசளிக்கப்பட்டன. ஆம்பூரிலிருந்து சென்னைக்குக் காரில் பயணம். பாபு விஸ்வநாதன் என்ற தொண்டர், முறுக்கு, சீடை, எள்ளுருண்டை போன்ற நொறுக்குத் தீனிகளை அத்வானியிடம் கொடுக்க, பயண நேரத்தில் அவற்றை அளவோடு நொறுக்கிக் கொண்டிருந்தார் அத்வானி. சென்னைக்கு வந்து சேர்ந்ததும் பத்திரிகையாளர்கள் சந்திப்புக்குப் பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது நகரப் பிரமுகர்களோடு உரையாடினார். அந்தக் கூட்டத்தில் ஒருவர் அத்வானியிடம், "பாபர் மசூதியை அப்படியே பெயர்த்து எடுத்து, பாகிஸ்தானுக்கு அனுப்பி விட்டால் என்ன?" என்று கேட்க, அத்வானி, "அது மாதிரியெல்லாம் பேசக் கூடாது. யாரையும் புண்படுத்துவது நமது நோக்கமல்ல. முஸ்லீம்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நாம் நடத்தக் கூடாது" என்று சாந்தமாகப் பதிலளித்தார்.

மாலையில் சவுகார்பேட்டையில் பொதுக் கூட்டம். மழையால் அந்தப் பகுதியே சேறும் சகதியுமாகக் காட்சியளித்தது. குறுகலான ஜனசந்தடி மிகுந்த பகுதி வேறு. "இந்தப் பகுதியில் கூட்டம் ஏற்பாடு செய்ததன் காரணம் என்னவென்றால், இந்தப் பகுதி தோழர்கள் மீது போலீஸ் பல பொய் வழக்குகளைப் போட்டிருக்கிறது. பலரைக் 'கைது செய்யப் போகிறோம்' என்று மிரட்டி, பணம் வசூலிக்கவும் முயன்றிருக்கிறார்கள். அந்தத் தொண்டர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதற்காகத்தான் இங்கே பொதுக் கூட்டம் போடப்பட்டுள்ளது" என்று விளக்கினார் பி. ஜே. பி. பிரமுகர். அங்கு அத்வானி ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்த போது கூட்டத்தில் ஒரு பகுதியினர், "இந்தியில் பேசுங்கள்" என்று குரல் கொடுக்க, "எனக்கு யாரும் உத்தரவு போட முடியாது" என்று பட்டென்று கூறி ஆங்கிலத்தில் தொடர்ந்தார். "தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஆட்சியையும் கவிழ்க்கக் கூடாது. தி. மு. க. ஆட்சியும் விதிவிலக்கல்ல; அதைக் கலைக்கக் கூடாது. ஆனால் தி. மு. க. அரசு தனிமனித உரிமைகளை நசுக்கும்விதமாக நடந்து கொண்டிருக்கிறது. அயோத்தியில் கைது செய்யப்பட்டவர்களே விடுதலையாகி விட்ட போது தமிழ் நாட்டில் கைதான எங்கள் தொண்டர்களை விடுதலை செய்யாமல் இருப்பது ஏன்?" என்று காட்டமாகக் கேட்டார் அத்வானி.

— திருப்பர்.

படம் : சுபா




இசையுலகின் இரு சிகரங்கள்

"நீங்கள் பாடகர் ஆனது எப்படி?" என்று லதா மங்கேஷ்கரை ஒருமுறை கேட்டார்கள். "எனக்குப் பேசத் தெரியாது; அதனால் பாடுகிறேன்" என்றார் லதா. ஆனால், அண்மையில் தமக்கு மிக அழகாகப் பேசவும் தெரியும் என்பதை நிரூபித்தார் லதா மங்கேஷ்கர்.

சங்கர நேத்ராலயா நிறுவனத்துக்கு நிதி திரட்டுவதற்காக எம். எஸ். நான்காவது முறையாக வழங்கிய இசை நிகழ்ச்சி, சென்னை மியூசிக் அகாடமி அரங்கில்நடைபெற்றது. அந் நிகழ்ச்சியில் எம். எஸ். பற்றிய பாராட்டுரை நிகழ்த்துவதற்காக வந்திருந்த லதா கையில் ஒரு சிறு குறிப்பு கூட இல்லாமல் நேர்த்தியாகப் பேசினார்:

"இளம் வயதிலேயே நான் சுபலக்ஷ்மிஜியின் விசிறியானேன். மீரா படத்தில் அவர் பாடி, நடித்ததைக் கண்ட நான் மீரா பக்தையானேன். அன்று முதல் எனக்கு சுபலக்ஷ்மிஜி மீது ஏற்பட்ட பக்தி கலந்த மரியாதை இது நாள் வரை தொடர்ந்திருக்கிறது; வளர்ந்திருக்கிறது.

"நான் வணங்கிப் போற்றும் சுபலக்ஷ்மிஜியின் அண்மையில் நான் மிகவும் சிறியவள். அவர் இசையில் — பாடும் ஒவ்வொரு பாடலிலும் — தெய்வீகம் இருக்கிறது; அவை ஒவ்வொன்றும் இறைவனுக்கே அர்ப்பணம் ஆகின்றன. அந்த உயரிய இசை அவருக்குப் பெற்றுத் தரும் செல்வத்தின் பெரும் பகுதியை அவர் மானுடத்தின் மேன்மைக்கும் நன்மைக்கும் அர்ப்பணம் செய்து வருகிறார். இந்திய மக்களின் நன்மைக்காக இசை வேள்வி நடத்தும் ஒரு தபஸ்வினியைப் போல் ஒளிர்கிறார்!



எஸ். பி. பி. கூறுகிறார்: லதா அவர்களுடன் நான் பாடிய முதல் பாட்டு ஏக் துஜே கே லியே படத்தில் 'தேரே மேரே பீச்கமே' என்ற பாடல்தான். இன்னும் சொல்லப் போனால் அதில் நான் பாடக்கூட இல்லை; வெறுமே பேசத்தான் செய்தேன். கதாநாயகன் கமலுக்காக நானும், கதாநாயகி ரதி அக்னி ஹோத்ரிக்காக லதாவும் குரல் கொடுத்தோம். முதல் சரணத்துக்கு முன்பு, 'பரவால்லியே! நீ நன்னாப் பாடறியே!' என்ற 'டயலாக்'கை, (கதாநாயகியை நோக்கிக் கமல் சொல்வது) நான் பேச வேண்டும்! ஒரு மூத்த கலைஞரான லதாவின் பாட்டை ஒரு வளரும் கலைஞனான நான் விமர்சிக்க வேண்டிய விந்தையான சூழ்நிலையைச் சுட்டிக் காட்டிய போது பெருந்தன்மையுடன் புன்னகை செய்தார் அவர்.

— சலன்

"'வயதாகி விட்டது. சோர்வாக உள்ளது. உடல்நலக் குறைவு' என்றெல்லாம் கூறினால் கூட சுபலக்ஷ்மிஜி மேடையேறிப் பாட ஆரம்பித்தால் அவை எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போகின்றன. அற்புதமான இசை மட்டுமே அங்கே பிரத்யட்சமாகிறது. சரஸ்வதி தேவியின் பூரணமான அருள்பார்வை அவர் பேரில் இருப்பதால்தான் இது சாத்தியமாகிறது.

"இவ்வளவு பெரிய வித்வாம்ஸினியைப் பற்றிச் சிறியவளான நான் என்ன சொல்ல முடியும்...? அவர் நூறாண்டுகள் வாழ்ந்து, தமது இசை வேள்வியைத் தொடர வேண்டும். நாம் எல்லோரும் அதனால் பயன்பெற வேண்டும் — இதையே நான் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.'"

ஓர் அற்புதமான கச்சேரியைக் கேட்டதோடு, இசையுலகின் இரு சிகரங்களையும் ஒருசேரக் காணும் பாக்கியம் அன்று எம். எஸ். கச்சேரிக்கு வந்திருந்தவர்களுக்குக் கிடைத்தது. அந்த பாக்கியத்தைக் கல்கி வாசகர்கள் அனைவருக்குமே இவ்விதழ் மேலட்டை மூலம் கிடைக்கச் செய்திருக்கிறோம்.

மிக அதிகமான இசைப் பதிவுகள் கொடுத்துள்ள பாடகர் என்ற முறையில் கின்னஸில் இடம்பெற்றுள்ள லதா மங்கேஷ்கர் இந்தோரில் பிறந்தார். இவர் தந்தை தினாநாத் மங்கேஷ்கர் கோவாவில் உள்ள மங்கேஷ் என்ற இடத்தைச் சேர்ந்தவர். நடிகரும் பாடகருமான தந்தை காலமான போது லதாவுக்குப் பன்னிரண்டே வயது! குடும்பப் பொறுப்பைப் பிஞ்சுத் தோள்களில் சுமந்து போராடினார். போராட்டத்தின் முடிவில் தம்மை ஹிந்திப் படவுலகின் ஈடு இணையற்றப் பின்னணிப் பாடகராக நிலைநிறுத்திக் கொண்டார். அதற்கான தகுதியுடன் மன உறுதியும் அவருக்கு வாய்த்திருந்தது.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பல இந்திய மொழிகளில் பின்னணிப் பாடல்கள் வழங்கி வரும் லதாதான் திரைப்பட இசைத் தட்டுகளுக்கான ராயல்டி, பாடகருக்கும் தரப்பட வேண்டும் என்று போராடி, முதன் முதலில் பெற்றவர். மிக அதிகமான சதவிகிதத்தில் ராயல்டி தொகை பெற்றவரும் இவரே.

லதாவின் உறுதியும் வைராக்கியமும் முன்னணி இசையமைப்பாளர்களுடன் மோதல்களை ஏற்படுத்தின. அவருடைய மிகப் பிரபலமான பாடல்களுக்கு இசையமைத்த பல இசையமைப்பாளர்களுக்கு அவர் பாடாமலே இருந்த காலம் உண்டு!

வஸந்த் தேசாய், எஸ். டி. பர்மன், மதன் மோகன் சி. ராமச்சந்திரா போன்ற இசையமைப்பாளர்களின் மறைவு ஹிந்தி திரைப் பாடல்களின் தரத்தில் ஒரு சரிவையே ஏற்படுத்தியது. இதற்குப் பிறகு லதாவும் ஹிந்தி திரைப்படங்களுக்குப் பாடுவதைக் குறைத்துக் கொண்டுள்ளார். மதன் மோகன் இசையமைத்துப் பாடல்களை பல நாட்கள் ரிஹர்சல் செய்து பக்குவப்படுத்திப் பதிவு செய்ததை நினைவுகூறும் லதா, இப்போதைய இசையமைப்பாளர்களுள் பெரும்பாலோர் மேற்கத்திய மெட்டுகளை இறக்குமதி செய்து கொஞ்சம் மாற்றியமைத்து வருகிறார்கள் என்று வருத்தம் தெரிவித்துள்ளார். 'இந்தப் பாடல்களில், சவால் இல்லை; மன நிறைவை இவை

தருவதில்லை என்கிறார்.

கடுமையான உழைப்பினாலும் மனப்பூர்வமான ஈடுபாட்டினாலும் முன்னுக்கு வந்து உச்ச நிலையை அடைந்துள்ள லதா, இப்போது வரும் புதுப் பாடகர்களுக்கு அந்த அளவிற்கு உழைக்க உற்சாகம் இருப்பதில்லை என்று ஒரு சந்தர்ப்பத்தில் வருத்தம் தெரிவித்ததுண்டு.

இந்த மோதிரக் கையால் குட்டுப் படாத ஒரு கலைஞர் எஸ்.பி.பி. சமீபத்திய சென்னை வருகையின் போது சென்னை வானொலிக்கு ஹிந்தியில் அளித்த பேட்டியில் எஸ். பி. பி. யை மனப்பூர்வமாகப் பாராட்டினார் லதா:

"இப்போது பாட வரும் இளைஞர்களுள் தமக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டு பாடுபவர் எஸ். பி. பாலசுப்ரமணியம்தான். இவருக்குக் கர்நாடக இசையின் பலமான அஸ்திவாரம் இருக்கிறது. பளிச்சென்று கிரஹித்துக் கொண்டு திரும்பப் பாடும் திறமை இருப்பதால் சீக்கிரமாக வேலைகளை முடித்து விடுகிறார்."

இதே பேட்டியில் சுஷ்மா அஹுஜாவின் வேறு பல கேள்விகளுக்குப் பதிலளித்தார் லதா. அவற்றுள் சில:

● ஹிந்தி, மராத்தி இதர இந்திய மொழிகள் தவிர வேறு எந்த மொழிகளில் பாடியிருக்கிறீர்கள்?

●● ஆங்கிலம், ஸ்வாஹிலி, ஃபிஜி போன்ற அயல்நாட்டு மொழிகளில் நான் பாடியிருக்கிறேன். ஆனால் அப் பாடல்கள் ரிகார்டுகளாகப் பதிவாகவில்லை.

● நீங்கள் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்...?

●● அடிக்கடி புகைப்படங்கள் எடுப்பது இயலாத காரியம். ஓரிடத்தில் காமெராவுடன் போய் நின்றால் உடனே என்னைச் சுற்றிக் கூட்டம் சேர்ந்து விடுகிறதே...

● உங்களுக்கு ஓய்வு நேரம் கிடைப்பது அரிதுதான். எனினும், அபூர்வமாகக் கிடைக்கும் போது என்ன செய்வீர்கள்?

●● எனக்குச் சமைக்கப் பிடிக்கும். சமையலறையில் புகுந்து கொள்வேன். பம்பாயில் இருப்பதைத் தவிர்த்து எங்கேனும் தனிமையான இடத்துக்குப் பிரயாணம் சென்று வர விரும்புவேன்.

● பலவிதமான ரிகார்டுகளைப் பதிவு செய்துள்ள நீங்கள் கர்நாடக இசையில் இசைத் தட்டு வழங்குவது பற்றி யோசித்ததுண்டா...?

●● யோசித்திருக்கிறேன். அப்படியொரு திட்டம் இருக்கிறது.

● நமது நாட்டின் முன்னேற்றம் இன்றையக் குழந்தைகளின் கையில்தான் உள்ளது. இவர்களுக்காக உங்கள் கலை மூலம் ஏதேனும் செய்யலாமே?

●● குழந்தைகளுக்காகப் பாடல்கள் பதிவு செய்யும் திட்டம் ஒன்று வைத்துள்ளேன். வீர சிவாஜி, ராணா பிரதாப் போன்றோரின் கதைகளைச் சொல்லி இடை இடையே பாடல்களையும் புகுத்தும் ஒரு வித்தியாசமான யுக்தியைக் கையாள எண்ணியிருக்கிறேன். அதற்கான material தான் கிடைக்கவில்லை...

● இவ்வளவு வருடங்களாக உங்கள் குரலை மெருகு குறையாமல் பாதுகாத்து வருகிறீர்களே.. அதன் ரகசியம் என்ன..?

●● அதற்காக நான் எந்தவிதமான சிறப்பு முயற்சிகளும் எடுத்துக் கொள்வதில்லை. ஈஸ்வரனின் கிருபைதான் எனக்கு இந்த வரத்தைக் கொடுத்திருக்கிறது.

தொகுப்பு: **சிஷ்யா**

மேலட்டை வண்ணப்படமும், படமும்: **யோகா**



மகன்: அப்பா உங்களுக்குப் பதினெட்டு வயசிலேயே கல்யாணம் ஆயிடுச்சாமே?

தந்தை: ஆமா, அதுக்கென்ன இப்போ?

மகன்: ஒண்ணுமில்லே. எனக்கு இருபது வயசாகுதுன்னு சொல்ல வந்தேன்.

— திருவள்ளூர் மதன்மோகன்.

பூட்டிய அறைக்குள்
35 நாட்கள்!

அடைத்து வைப்பதும் ஓர் ஆராய்ச்சியா?

மனித உடம்பில் ஏற்படும் மாறுதல்களைக் கண்டறிய பூட்டிய அறைக்குள், இரவு — பகல் தெரியாத விதத்தில் ஒரு பெண்ணை, 35 நாட்கள் வைத்துச் சோதனை நடத்துகிறார்கள் மதுரை பல்கலைக் கழக விலங்கியல் துறை பேராசிரியர்கள். இத்தகைய ஆராய்ச்சிகள் அவசியம் தானா? அவை வேறு விபரீதங்களுக்கு வழி வகுக்காதா...?



பேராசிரியர் வி. ஏ. மூர்த்தி: (தலைவர், விலங்கியல் துறை, லயோலா கல்லூரி)

''இத்தகைய ஆராய்ச்சியில் மனிதர்களை ஈடுபடுத்துவது உயிருக்கும், உடலுக்கும் இழைக்கும் அவமதிப்பு என்பது சரியல்ல. இந்த குறிப்பிட்ட ஆராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் செல்வி என்ற பெண்மணியின் முழுச் சம்மதத்தோடுதான் இது நடத்தப்படுகிறது. அவரால் இரவு பகல் தெரிந்து கொள்ள முடியாதே தவிர அவருக்கு மற்ற எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இண்டர்காமில் வெளியில் உள்ளவருடன் தொடர்பு கொள்ள முடியும். டேப்ரிகார்டரில் பாட்டுக் கேட்க முடியும். புத்தகங்கள் படித்துக் கொண்டிருக்கலாம்.

''சூரிய ஒளியானது, மனிதர்கள், பிராணிகள், மற்றும் தாவரங்களின் இயக்கங்களில் மகத்தான பங்கு வகிக்கிறது. கண்கள் பெறும் ஒளியால் மனித மூளை செயல்படும் ஆற்றல் அதிகரிக்கிறது. சூரியனைப் பார்த்து மலர்கள் மலர்கின்றன. இந்த இயக்கங்களை Circadian Rhythms என்று சொல்கிறோம்.

''சூரிய ஒளி பல மாறுதல்களை ஏற்படுத்தும் என்பது தெரிந்தபடியால், அந்த ஒளி படாத சூழ்நிலையில், மனித உடம்பில் என்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன என்று கண்டறிவதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். இரவு பகல் தெரியாத நிலையில் கண்கள், மூளை, ஜீரண உறுப்புக்கள் முதலியவற்றின் செயல்பாடு எவ்வாறு மாறுபடுகிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். இரவு பகல் தெரியாமல் வேலை செய்பவர்கள், ராணுவத்தில் நேரம் காலம் தெரியாமல் பணிபுரிகிறவர்கள், ஆகியோருக்கு, உடல் நிலையில் ஏதாவது மாறுதல்கள், கோளாறுகள், ஏற்படுமேயானால் அவற்றைச் சரி செய்வதற்கு இந்த ஆராய்ச்சியின் துணையுடன் வழிகள் கண்டறியலாம். 'நடத்தை' (Behaviour) பற்றிய இந்தப் படிப்புக்குப் பெயர் ஈதாலஜி (ethology) இதில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் சந்திரசேகரன் உலகப் புகழ் பெற்றவர்.

''டாக்டர் சந்திரசேகர் செய்யும் இந்த ஆராய்ச்சிக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டுள்ள செல்விக்கு எந்த பாதிப்பும் உண்டாகாது. ஏற்கெனவே இதுபோன்ற

ஆராய்ச்சிக்குப் பயன்பட்டோர் நலமாகவே இருக்கிறார்கள்.''



டாக்டர் ஆர். பொன்னு துரை: (மன இயல் நிபுணர், ஸ்டான்லி மருத்துவமனை)

''இதுபோன்று தனிமையாக இருப்பவர்களை மனநோய் பற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. மேலும் இயற்கை ஒலி, ஒளியாகியவை உண்டாக்கும் உணர்வுகளுக்குப் பழக்கப்பட்டுப் போன நம் உடல், அவை இல்லாத சூழ்நிலையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்.

''டயாபடிஸ், ரத்த அழுத்தம் போன்ற நோய்கள் பரம்பரையாக வருவது போல், முன்னோர்களில் யாருக்காவது மனநோய் இருந்திருந்தால், வாரிசுகளுக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. மாறுதலான சூழ்நிலையில், மனநோய் வெடிக்கும் வாய்ப்புக்கள் அதிகம்.

''இந்த ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள பெண்மணிக்கு இது போன்று எல்லா விஷயங்களையும் சொல்லி விளக்கினார்களா என்று தெரியவில்லை. ஆபரேஷன் செய்யும் போது டாக்டர்கள் விளைவுகளைச் சொல்லி, கையெழுத்து வாங்குவது போல, ஆராய்ச்சிக்குட்படுபவரிடமும் செய்ய வேண்டும்.

''சம்மதம் பெற்ற பின்னரே செய்யப்படுவதானால் கூட இத்தகைய ஆராய்ச்சிகள் தொழில் பண்பாட்டுக்கு (Ethics) விரோதமானவை என்பது என் கருத்து.''

பேட்டி: **ப்ரியன்.**

இப்போது வெளியாகியிருப்பது இரண்டாம் பாகம். முதல் பாகத்தைப் பார்த்திராதவர்களுக்கு மட்டும் முன் கதைச் சுருக்கம்: வெளியுலகையோ, நாகரிக மனிதர்களையோ, நவீன தொழில் நுட்பங்களையோ அறிந்திராத ஆதிவாசிக் கூட்டம். அதில் ஒருவன் ஜிஜோ. விமானத்திலிருந்து தவறிக் கீழே அந்த வனப் பகுதியில் விழுந்து விட்ட காலியான கோகோ கோலா பாட்டிலைக் கடவுளுக்குச் சொந்தமான

THE GODS MUST BE CRAZY



பொருள் என்று எண்ணி அதை அவரிடம் திருப்பித் தருவதற்குச் சென்ற ஜிஜோ மிக வேடிக்கையான அனுபவங்களைப் பெறுகிறான்...

இந்த இரண்டாவது பாகத்தில் ஜிஜோ தன் இரு மகன்களுடன் பூமியின் மறு முனையைக் காணப் புறப்படுகிறான். வழியில் தண்ணீர் டாங்கர் ஒன்றைக் காணும் குழந்தைகள் இருவரும் அந்தப் புதுமைப் பொருளை அருகில் பார்க்கும் ஆவலில் அதனுள் ஏறி விட, டாங்கர் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றுவிடுகிறது. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க ஓடுகிறான்... ஓடுகிறான்... நாள்கணக்கில் ஓடுகிறான் ஜிஜோ. நமக்குக் கிடைப்பவை ஏகப்பட்ட நகைச்சுவை நிகழ்ச்சிகள். வெவ்வேறு காரணங்களுக்காக அவனுடைய பாதையில் குறுக்கிடும் வேறு சிலரும் இந்தச் சிரிப்புப் பட்டியலுக்குத் துணை போகிறார்கள். இவர்கள் அனைவரும் ஒன்று சேருவதும் பிரிவதுமாக ஆயிரம் திரில்கள்.

பல நாட்களுக்குப் பின்னரும் நினைத்து நினைத்துச் சிரிக்க வைப்பதோடு மனம் நெகிழவும் செய்யும்.

— சி. ஆர். கே.

மதுக்கடை மறியலும் மேலிடத்து உத்தரவும்

கேள்வி: மலிவு விலை மதுவை எதிர்த்துச் 'சாத்வீகமான சத்யாக்கிரஹத்தில் ஈடுபட்ட உங்களைப் போலீஸ் 'உள்ளே' தள்ளியது ஏன்?

தியாகி தளவாய்: எங்கள் மேல் 'சட்டவிரோதமாகக் கூட்டம் கூட்டியதாக வழக்கு போடப்பட்டு, ஜாமீனில் விடக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டது. எங்களைக் கைது செய்து திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றவுடன் துணைக் கமிஷனர் மாணிக்கம், 'இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களை விட்டு விடுவோம்' என்றுதான் சொன்னார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. என்னவென்று விசாரித்த போது, ஜாமீனில் விட முடியாத விதத்தில் வழக்குகளைப் பதிவு செய்யும்படியும் ரிமாண்டில் தள்ளும்படியும், 'மேலிடத்திலிருந்து' தொலைபேசியில் 'கட்டளைகள்' வந்ததாகப் போலீஸ் நண்பர் தெரிவித்தார். இதற்கெல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை. எல்லாவற்றையும் எதிர்பார்த்துத்தானே இதில் குதித்தோம். இரவு பன்னிரண்டரை மணி வாக்கில் மாஜிஸ்திரேட் வீட்டுக்கு என்னைக் கொண்டு சென்றார்கள். எங்களைப் பார்க்காமலேயே, படுக்கை அறையிலிருந்தே 'ரிமாண்ட்' செய்யும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்!

கே: சுதந்திரப் போராட்டக் காலத்தில் பலமுறை சிறைக்குச் சென்றிருக்கிறீர்கள். அப்போதைய ஜெயில் வாசத்தையும் இப்போதைய ஜெயில் வாசத்தையும் பற்றி...!

பதில்: வெள்ளைக்காரன் ஆட்சியின் போது ஜெயிலில் எனக்குக் கொடுமைகள் எதுவும் இழைக்கப்படவில்லை. ஆனால் சாப்பாடு படுமோசம். இப்போது சென்னை ஜெயில் வாசம் சாப்பாட்டைப் பொறுத்த வரையில் குறைசொல்ல முடியாத வகையில் இருந்தது! காலையில் அரிசிக் கஞ்சி அல்லது பொங்கல், மதியம் சாம்பார் சாதம், காரட், வேர்க்கடலை என்று உணவு. மாலையும் அதே மெனுதான். சாம்பார் மிகநன்றாகவே இருந்தது. தண்ணீர்ப் பிரச்னை எங்களைப் பொறுத்தவரை இல்லை. ஆனால், மற்ற கைதிகள் வாரத்துக்கு ஒருமுறைதான் குளிக்கிறார்கள். ஜெயிலில் நுழைந்த அடுத்த நாள் காலை இரு கன்விக்ட் வார்டர்கள் எங்களிடம் 'அறையைப் பெருக்குங்கள்; தண்ணீர் எடுங்கள்' என்று கட்டளையிட்டனர். நாங்கள் அந்த வேலையைச் செய்யத் தயாரான போது, அந்தப் பக்கமாக வந்த துணை வார்டன், 'யோவ், யாரிட்டதான் வேலை சொல்றதுன்னு முறையே இல்லையாதா? போங்கப்பா' என்று அவர்களை விரட்டி விட்டார். எங்களுக்குக் கட்டுப்பாடு ஏதும் இல்லை. ஜெயிலில் சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருந்தோம்.

பேட்டி: **இல்லப்பா.**

• தளவாய்



சிரிக்க வையுங்கள்:
சிங்கப்பூர் செல்லுங்கள்! 50

'அம் அஹா' என்று சொன்னால்...

●● தம்பதி சமேதராக நாலும் நண்பரும் ஊட்டக்குச் சென்றிருந்தோம். அவர் மனைவி, "அப்பாடா! என்றாவது ஒரு நாள் இப்படி ஊட்டிக்கு வருவது எவ்வளவு நன்றாயிருக்கு! என்ன வேண்டியிருக்கு. தினசரி சமையல் வேலை? என்னைக் கேட்டால் 'மாயா பஜார்' படத்தில் வருவது போல் 'அம், அஹா!' என்று மந்திரத்தைச் சொன்னால் சாப்பாடு முன்னால் வந்து நிற்க வேண்டும்" என்று அலுத்துக் கொண்டார். உடனே, நண்பர் இடைமறித்து, "அப்படி மந்திர சக்தி வந்தாலும், தினசரி மந்திரத்தை நானேதான் சொல்லணுமா? ஒரு நாளாவது நீங்க சொல்லக் கூடாதான்னு கேட்பாள்!" என்றாரே, பார்க்கலாம்! சிரிப்புக்குக் கேட்பானேன்?

— ஆர். பாலசுப்பிரமணியன், விசாகப்பட்டினம்.



●● இராணுவ அதிகாரி காட்டுப்



பகுதியில் நடந்து சென்ற போது உடன் வந்த சிப்பாயிடம் கேட்டார்: "இப்போது ஒரு சிங்கம் உன் முன்னால் பாய்ந்து வந்தால் என்ன செய்வாய்?"

"நான் என்ன சார் செய்ய இருக்கு? சிங்கமேதான் எல்லாத்தையும் செய்துட்டுப் போயிடுமே!" என்று பதில் கிடைத்தது!

— கே. சாந்தகுமாரி, பாலக்காடு.

●● பொட்டல்வெளியில் அமைந்திருக்கிற அந்தக் கல்லூரியில் நாம் ஒன்று வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு கத்த ஆரம்பித்தது. சப்தம் அதிகமாக இருக்கவே ஆசிரியர் பாடம் நடத்துவதை நிறுத்தி விட்டார். சிறிது நேரத்தில் நாய் கத்தி ஓய்ந்தது. மாணவன் ஒருவன் ஆசிரியரை நோக்கி, 'சார் அது நிறுத்திவிட்டது. நீங்க ஆரம்பிங்க' என்றானே பார்க்கலாம்! மிக இயல்பாக அவன் கூறியது ஆசிரியரையும் சேர்த்துச் சிரிக்க வைத்தது.

— த. சித்தார்த்தன், சென்னை — 33.



●● என் வகுப்பில் ஆசிரியர், சில கணக்குகளைக் கொடுத்து, "இது எல்லாம் உங்களுக்கு ஹோம்வொர்க். இதையெல்லாம் போட்டு நாளைக்குக் காண்பிக்க வேண்டும்" என்றார்.

ஒரு மாணவன் உடனே எழுந்து, "சார், நான் ஹாஸ்டல்" என்றவுடன் வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது!

— க. இராதாகிருஷ்ணன், திருவாரூர்.

●● வகுப்பு ஆசிரியர் அன்று வரவில்லை. அவருக்குப் பதிலாக வேறோர் ஆசிரியர் வந்து பொது

விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது. "உங்கள் முன் கடவுள் தோன்றினால் நீங்கள் என்ன கேட்பீர்கள்?" என்றார்.

பெண்கள்வரிசையில்கேட்டபோது,ஒருமாணவி. "ஒரு நல்ல வீடும், உ. வி. யும் கேட்பேன்!" என்றாள்.

ஆசிரியர் மாணவர் பக்கம் திரும்ப, "'எனக்கு நல்ல அறிவைக் கொடு' என்று கேட்பேன்" என்றான் ஒருவன். உடனே, ஒரு குறும்புக்கார மாணவி. "இல்லாததைத்தானே சார் கேட்க முடியும்?" என்றாளே பார்க்கலாம்!

— என். ஜோதிலட்சுமி, இலந்தப்பட்டி.

●● ஓட்டல் திறப்பு விழா ஒன்றுக்குத் தலைமையேற்க மாவட்டக் கலெக்டரை அழைத்திருந்தனர். கலெக்டரின் முகம் வரவேற்பு பேனரைக் கண்டதும் அஷ்டகோணலாகிவிட்டது.

"மாவாட்ட கலெக்டர் அவர்களே, வருக! வருக!" என்று பேனர் வரவேற்றால், பார்க்கப் பரிதாபமாகத்தானே இருக்கும்!

— தக்கோலம் புகாரி, சென்னை — 13.

●● ஊரிலிருந்து வந்திருந்த என் சகோதரர், உயரக் குறைவான முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்த்துவிட்டு, என்னிடம், "ஏண்டா, நல்லதா ஒரு ஆளுயரக் கண்ணாடி வாங்கக் கூடாதோ?" என்றார். என் மகன் உடனே, "பெரியப்பா, இதுவே ஆளுயரக் கண்ணாடிதான். நானும், தம்பியும் தினம் தினம் கண்ணாடி எட்டாமல் எம்பி எம்பித் தலை வாருவதால் சீக்கிரமாக உயரமாகி விடுவோம்; அதனால் இது ஆளுயரக் கண்ணாடிதானே?" என்றான்!

— பி. ப. சுந்தர், சென்னை — 33.

"மாப்பிள்ளை! இது உங்களுக்கே நல்லா இருக்கா? இருபது லிட்டர் பெட்ரோல், இருபது லிட்டர் டீசல், பத்து லிட்டர் கெரோசின், ரெண்டு எல். பி. ஜி. சிலிண்டர் இத்தனையும் கொடுத்தாத்தான் தாலி கட்டுவேன்னு அடம் பிடிக்கிறீங்களே!"


— பலராமன், திருவள்ளூர்.

●● ஒரு முறை பஸ்ஸில் நெருப்பாக இருந்த ஓர் இளம் பெண்ணை, பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஓர் இளைஞன் உரசிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த ஒரு பெரியவர் அவனிடம் சண்டைக்குப் போகாமல், "நீ என்னதான் அவங்களை உரசினாலும், உன் நெருப்பு உடனேலே அவங்க நெருப்பு ஒட்டாதுப்பா!" என்று நெண்டலாகக் கூறியதும், பஸ்ஸே சிரிப்பில் அதிர்ந்தது!

— எஸ். சுந்தரி, சென்னை — 35.



— வே. பரமசிவம், சென்னை — 64


சந்திரசேகர்
வி.பி.சிங்
பயப்படாதீங்க பிரதர்... விட்டுற மாட்டேன்!
பத்திரமா திரும்பி வந்திருங்க பிரதர்!
கருணாநிதி
செய்தி-வி.பி.சிங் தமிழகம் வருகை. பிரதமரைப் பார்க்க கருணாநிதி டெல்லி செல்கிறார்.
ஆதரவு வேணும்னா போபர்ஸை கண்டிக்கக் கூடாது... ஹி...ஹி...
போபர்ஸை கண்டிக்கக் கூடாதுன்னா ஆதரவு நீடிக்கணும்... ஹி...ஹி...
ஆதரவு ரத்து
ராஜீவ்
சந்திரசேகர்
போபர்ஸ்
அரசியல்னா ஒரு தில்லு வேணாமா? தாட்சராவது, மேஜராவது... இன்னா சாதிச்சாங்க? ஒரு கட்சிக்கு தாவறது, கட்சியை உடைக்கறது, பணம் பண்றது, எதிரிங்க காலில விழுறது, முதுகில குத்தறது... இதெல்லாம் இல்லாம ஒரு அரசியலா? தெரியலைன்னா என்கிட்ட வா... நான் கத்துத் தர்றேன்...



கல்கி

1990 டிசம்பர் 9

மலர் : 49 இதழ் : 19

பிரமோதூத கார்த்திகை 23



மேஜர் — சந்திரசேகர்!

மார்கரெட் தாட்சரின் சில கொள்கைகள் தமக்கு ஒப்புதலாக இல்லை என்று கூறுகிறார் பிரிட்டிஷ் துணைப் பிரதமர். சில நாட்கள் சென்று தாட்சரின் கொள்கையில் மாற்றமில்லை என உணர்ந்து, கொள்கை மாறுபாடு காரணமாகத் தாம் ராஜினாமா செய்வதாகக் கூறுகிறார். அமைச்சரவையிலிருந்து வெளியேறுகிறார்; கட்சியிலிருந்தே அல்ல. கோஷ்டி சேர்த்துக் கொண்டு கட்சியைப் பிளக்கவோ, உடைக்கவோ அவர் முயற்சி மேற்கொள்ளவில்லை.

கட்சியில் கருத்து மாறுபாடுகள் தலைகாட்டிய நிலையில், நாடாளுமன்றக் கட்சித் தலைவருக்கான தேர்தல் நடக்கிறது. மார்கரெட் தாட்சர்தான் பெரும்பான்மை வாக்குப் பெற்று வெற்றி பெறுகிறார். ஆயினும் நாடாளுமன்றக் கட்சித் தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் அளவுக்கு அறுதிப் பெரும்பான்மை பெற முடியவில்லை. எனவே, இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இரண்டாவது, மூன்றாவது சுற்றுக்களில் தாட்சருக்கு அவருக்குத் தேவைப்படும் அறுதிப் பெரும்பான்மை கிடைப்பது உறுதி. காரணம், அவருக்குத்தான் மெஜாரிட்டி ஆதரவு என்பதால், அடுத்தடுத்த வாக்கெடுப்புகளில் தாட்சருக்கே வோட்டுக்கள் கூடுதலாகி வரும் என்று நம்பலாம். ஆயினும் தாட்சர் என்ன சொல்கிறார்? "என்னை விடக் கட்சி முக்கியமானது; அதன் ஒற்றுமையைக் காப்பது அவசியம்; எனவே, நான் தலைமைப் பதவிப் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன். பிரதமர் பதவியையும் ராஜினாமா செய்கிறேன். ஒற்றுமையாக வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்போம்" என்கிறார்! புதிய பிரதமர் பதவி ஏற்கும் வரை தாற்காலிகப் பிரதமராக நீடிக்கிறார்.

இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடக்கிறது. இதிலும் போட்டியில்லாமல் இல்லை! மும்முனைப் போட்டியில் ஜான் மேஜருக்கே அதிகபட்ச வாக்குகள் கிடைக்கின்றன. ஆனால் அவருக்கும் தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் அளவில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 'சரி, மூன்றாவது சுற்று வோட்டெடுப்பு நடத்த வேண்டியதுதான்' என்று அனைவரும் தயாராகும் போது, 'வேண்டாம், நாங்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறோம்' என்று ஜான் மேஜரை எதிர்த்த இருவரும் கூறுகிறார்கள்! தாட்சரின் தியாகத்தை நினைவு கூர்ந்து, இவர்களும் இவ்வாறு பெருந்தன்மையுடன் ஒதுங்க, மூன்றாவது சுற்று வோட்டெடுப்பு ரத்து செய்யப்படுகிறது. ஜான் மேஜர், அறுதிப் பெரும்பான்மை பெறா விட்டாலும், அதிகபட்ச வாக்குப் பெற்றவர் என்ற முறையிலும், அவருடன் போட்டியிட வேறு யாரும் இல்லாத நிலையிலும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் ஆகிறார். மறுநாள் நாட்டின் பிரதமராகவும் பொறுப்பேற்கிறார்; உடனே மந்திரி சபை அமைக்கிறார்.

இந்தக் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும், கடமை உணர்வையும் பார்க்கும் போது நமக்கு நெஞ்சு நிறைவது மட்டுமா? நமது நாட்டின் நிலையை ஒப்பு நோக்கி மனம் வேதனைப்படவும்தான் செய்கிறது! வி. பி. சிங் ஆட்சியில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடிவிடவில்லைதான். பல தவறுகள் நடந்துள்ளனதான். இதனை ஒப்புக்கொள்ளும் முதல் மனிதர் வி. பி. சிங்கேதான். எவ்வாறேனும் பதவியில் ஒட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதியதில்லை. அவரைப் பதவி இறக்கம் செய்வதிலும் குற்றமில்லை. ஆனால் அதை எப்படிச் செய்வது? நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்துக்கு வந்து, வாக்கெடுப்பு நடத்தி, கௌரவமான முறையில் வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாதா? கோஷ்டி சேர்த்து, கட்சியை உடைத்து, யாரை எதிர்த்துத் தேர்தலில் பிரசாரம் செய்யும் போட்டியிட்டும் வெற்றி பெற்றார்களோ அவரிடமே சரணாகதி அடைந்து பெறுகிற பதவியில் என்ன பெருமை இருக்க முடியும்? இப்படிக் கோஷ்டி சேர ஒவ்வோர் எம்.பி.க்கும் தரப்பட்ட தொகை 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி வரை என்று டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற தேசிய நாளிதழ்களே கணிக்கின்றன. இவ்வாறு பதவியை விலைக்கு வாங்குவோரிடம் என்ன நேர்மையை எதிர்பார்க்க முடியும்?

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரிய தினத்தில், "தேசத்தின் பொருளாதாரம் அதள பாதாளத்தில் சரிந்து விழுந்து கொண்டிருக்கிறது" என்று குற்றம் சாட்டிய சந்திரசேகர், அதே வாயால் இன்று "சிரமம்தான்; ஆனால் சமாளிக்க முடியாத பொருளாதாரக் கஷ்டம் இல்லை" என்கிறார்! பத்து நாட்களுக்குள் நிலைமை எப்படி மாறியது? எவ்வாறு சமாளிக்கப் போகிறார்? அவருக்கேனும் விடை தெரிந்தால் சரி!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

சிறு சேமிப்புத் துறை



இ.வி.பி.வில் மாதந்தோறும் செலுத்தும் தொகை	5 ஆண்டுகளில் முதிர்வுபெறும் தொகை	ஆறாவது ஆண்டு துவக்கம் முதல் மாதாந்திர பென்ஷனாகக் கிடைக்கும் தொகை	முதிர்வுத் தொகையிலிருந்து இ.வி.பி.வில் மறுமுதலீடு செய்ய ஒதுக்கும் தொகை
ரூ.	ரூ.	ரூ.	ரூ.
250	500	250	250
500	1,000	500	500
750	1,500	750	750
1,000	2,000	1,000	1,000

நீங்கள் ஓய்வுபெறும் வயதுவரை காத்திராமல் இன்றே சேமியுங்கள்

நீங்கள் மாதந்தோறும் இந்திரா விகாஸ் பத்திரத்தில் ரூ. 500/- வீதம் செலுத்தும் தொகை எவ்வாறு உயர்கிறது என்பதை கவனியுங்கள்.

நீங்கள் மாதந்தோறும் ரூ. 500/- வீதம் செலுத்தும் தொகை இருமடங்காக 5 வருடத்தில் ரூ. 1,000/- ஆக உயருகிறது. ஓய்வூதியமாக ரூ. 500/- நீங்கள் பெறுவதுடன் மீதியுள்ள தொகையை இந்திரா விகாஸ் பத்திரத்தில் முதலீடு செய்யலாம். இதே போல் தொடர்ந்து முதலீடு செய்து அதனை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் ஆயுட்காலம் வரை அட்சய பாத்திரம் போல் தொடர்ந்து பென்ஷன் பெறலாம்.

பணியில் இருக்கும்போதே கூடுதல் வருமானம் இதுவே வாழ்நாள் முழுவதும் பென்ஷன் பெறும் தந்திரம்.



* ரஜினி: புதுமையான ரிகார்ட்!

காக்கி உடுப்புக்கு வந்த கிராக்கி!

● வாரத்தில் இரண்டு தினங்கள் தன்னுடன் போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வருகின்ற ரசிகர்களைத் திருப்திப்படுத்துகிறார் ரஜினி! மூன்று மூன்று பேர்களாகக் கூட நிற்க வைத்துப் படம் எடுத்துக் கொள்ள அனுமதிக்கின்றார். ஒரு மணி நேரத்தில் ஆயிரத்தி ஐந்நூறு பேர்களுடன் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்! இன்னலில் சான்ஸ் இருக்கா ரஜினி சார்...!



* ராதா: ''டூப் வேண்டாம்!''

● ''வைஜயந்தி ஐ. பி. எஸ். படம் பார்ப்பவர்களுக்குத் தங்களின் பெண்களையும் போலீஸில் சேர்க்க வேண்டும் என்ற ஆர்வம் வரும்'' என்றார் பெண் போலீஸ் அதிகாரி இரண்பேடி. அப்படி நேர்ந்ததோ இல்லையோ; நம்ம ஊர்க் கதாநாயகிகளுக்குக் காக்கி உடுப்பு ஆசை வந்து விட்டது! எத்தனை நாளைக்குத்தான் ஹீரோ பின்னாடியே மரத்தைச் சுற்றி வருவது? நாங்களும் ஜீப்பிலிருந்து குதித்து, மலை மீது தாவி, வில்லன்களை அடித்து நொறுக்க வேண்டும் என்று தயாரிப்பாளர்களிடம் கேட்கத் தொடங்கி விட்டார்கள்! விளைவு: தாசரி நாராயணராவ் டைரக்ஷனில் தெலுங்கில் 'ராமுடுகாது ராட்ஷசுலு' என்ற படத்தில் ஒரு பெண் போலீஸ் அதிகாரி. தமிழில் 'பாஞ்சாலி சபதம்' படத்திலும் பெண் போலீஸ் அதிகாரி. தற்போது 'சீதா கீதா' என்ற படத்தில் துடுக்கான பெண் போலீஸ் அதிகாரியாக நடித்துக் கொண்டிருப்பவர் — ராதா. இந்தப் படத்தில் சண்டைக் காட்சிகளில் டூப் போடாமல் தாமே நடிப்பதாகக் கூறி விட்டாராம்! ராதாவைப் போல் கௌதமியும், ஐஸ்வர்யாவும் தலா ஒரு படத்தில் பெண் போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார்கள். காக்கி உடுப்புக்கு வந்த கிராக்கியைப் பார்த்தீர்களா!

● டைரக்டர் பி. வாசு 'வேலை கிடைச்சுடுச்சு' படத்திற்குப் பின்பு கையில் ஆறு படங்களை வைத்துக்கொண்டு பிஸியாக இருக்கின்றார். தற்போது சற்று சரிந்துள்ள பிரபுவின் 'மார்க்கெட்'டைத் தூக்கி நிறுத்த வேண்டும் என்பதற்காக 'சின்ன தம்பி' என்று ஒரு படம். முழுக்க முழுக்கப் பிரபுவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற விதமாகக் கதையை அமைத்துள்ளார் வாசு: பிரபுவுக்கு ஜோடியாக யாரைப் போடலாம் என்று யோசித்தார்கள்... தற்போது பீல்டில் 'ராசியானவர்' என்று பெயர் எடுத்துள்ள குஷ்புவையே ஒப்பந்தம் செய்து விட்டார்கள்! அது சரி பிரபுவின் இப்போதைய ராசி இவரையும் இழுத்து விட்டால் என்ன பண்ணுவது?



* பிரபு – குஷ்பூ: ராசி பலன்!

● கமல்ஹாசன் தமது சகாக்களுடன் தமது அடுத்த 'சினிமா அவதாரம்' பற்றித் தீவிரமாக டிஸ்கஷன் செய்து வருகின்றார். ராஜ்கமல் பிலிம்ஸ் அலுவலகத்தில் தனியறையில் உட்கார்ந்து கொண்டு மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிறாராம். சமீப காலமாகக் கமலுக்கு ஒரே குறி 'ஆஸ்கார்' அவார்டுதான் என்கிறார்கள். தங்கத்துக்கு முயன்றால்தானே வெள்ளியாவது கிடைக்கும்!

— எஸ். பாலு.



COUNT DOWN — 5

களவுபோன நிலவு!

லிஸ்டில் போனவர்கள் பட்டியலை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்?

மணிமாறன் ஒவ்வொரு கோணமாக மோதிப் பார்த்தான்.

இந்தியாவில் சம்பளம் வாங்கிக் கொண்டு இந்தியாவுக்கெதிராகச் செயல்படுபவர்களின் முக்கிய முகவரிகள் எல்லாம் அவன் மூளையின் நினைவு செல்களில் பதிவாகியிருக்கும் என்ற தைரியத்துடன், அவன் எப்படியும் சென்னையில் ஒரு டபிள் ஏஜண்ட்டைத் தேடிப் போவான் என்று யூகிக்க முடிந்த அதே நாஸர்தான் லிஸ்டில் இருப்பவர்கள் பெயரையெல்லாம் தரச் சொல்லியிருக்கிறார் என்றால்... அதில் அவனுக்கு ஏதோ செய்தி புதைந்து இருக்க வேண்டும்.

மணிமாறனுக்கு மிகப் பளீரென அந்த காரணம் புரிந்தது.

''அந்த லிஸ்ட் எனக்கு எப்போது கிடைக்கும், ஹக்கிம்?''

''நாளை மாலை கிடைத்து விடும்.''

''அதுவரை நான் தங்கியிருக்க எனக்கு ஒரு பாதுகாப்பான இடம் வேண்டும்.''

''வீட்டில் என்னால் வைத்துக் கொள்ள முடியாது என் கடையின் கோடவுனில் தங்கிக் கொள்கிறாயா?''

''தாராளமாக... எங்கே இருக்கிறது கோடவுன்?''

''மண்ணடியில்...''

''ஹக்கிம், எனக்கொரு கார் ஏற்பாடு செய்து தர முடியுமா?''

''எப்போது வேண்டும்?''

''இப்போதே. நீயும் என்னுடன் வருகிறாய்.''

''எங்கே?''

''சாந்தினியைப் பார்க்க...'' என்றான் மணிமாறன், தொடையில் வந்து உட்கார்ந்த ஆரோக்கியமான பயில்வான் போன்ற கொசுவை அறைந்து.

மேகங்களற்ற ஆகாயத்தில் நிலா தன்னைச் சுற்றிப் பனிக்கோடு போட்டிருந்தது. காற்றில் எழுந்து அடங்கும் கருநீல வெல்வெட் போல் கடலலைகள் கரையில் இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன. நிலா வெளிச்சம், மூடிய இமைகளுக்குள் குளுமையான ஒத்தடம் கொடுத்தது. சாந்தினி ஆரோக்கியமான காற்றை நெஞ்சு நிறைய இழுத்துக் கொண்டாள்.

''அச்சுதன்...'' என்று அழைத்த போது குரலில் மன்மத மயக்கம் இருந்தது.

''என்ன சாந்தினி?'' ஒற்றைச் சங்கிலியில் தொங்கிய பிரம்பு ஊஞ்சலில் அச்சுதன் உட்கார்ந்திருந்தான். ''என்னைப் போல் உனக்கும் குழப்பமா?''

''உங்களுக்கு என்ன குழப்பம்?''

''அந்த நிலாவை ரசிப்பதா, இல்லை உன்னை ரசிப்பதா என்று...''

''காதலிக்க ஆரம்பித்து விட்டால் எல்லோருமே இது போல் உளற ஆரம்பித்து விடுவார்களா அச்சுதன்?''

''ஏய்!''

''என்னையும் சேர்த்துத் தான் சொல்கிறேன், அச்சுதன். தூக்கம் வராமல் நேற்றைக்கு ஓர் உருதுக் கவிதை எழுதக் கூட ஆரம்பித்தேன் தெரியுமா?''

''கவிதையா! எங்கே காட்டு?''

''முதல் வரியிலேயே தடுமாறிக் கொண்டிருக்கிறேன்.''

''சொல்லேன்!''

''கனவுகளின் கதவுகளைத் திறந்திருக்கிறேன், மன்னவா, நீ கண்களின் சுரங்கத்தில் இறங்கி வா...''

''அட்டகாசம்!''

''கேலி செய்கிறீர்கள்..''

''இல்லை, சத்தியமாகத் தான் சொல்கிறேன். நீ என்னை இருபத்தி நாலு மணி நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி என்னால் எப்போதும் உன்னையே நினைக்க முடியவில்லையே என்று வெட்கமாய்க் கூட இருக்கிறது, சாந்தினி...''

''ஏன்?''

''மணிமாறனைப் பிடிக்கிற வரை எனக்கு நிம்மதியில்லை. எத்தனை முறை

அஞ்சனா மைக்கேல்ராஜ்

> நம் கதவுகளுக்குள்ளேயே ஒரு துரோகி இருப்பதை நாம் எதிர்பார்ப்பதில்லை. நல்லவர்கள் என்று நினைத்தவர்களது மனத்தில் விஷமேற்றி மாற்ற முடியும். பணமோ, பலுகவோ அவர்களது நாணயத்தை விலைபேச முடியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.
>
> — W.W. நார்ட்டன்.

விரலிடுக்கு வழியே நழுவ விட்டு விட்டேன்! என் மேல் நம்பிக்கையில்லாதபடி நடந்து கொண்டதால் தானே கர்னலே நேரடியாக இப்போது மெட்ராஸ் வந்திருக்கிறார்?''

''இல்லை அச்சுதன். நிச்சயமாக இல்லை. கர்னலோடு நான் செஸ் விளையாடும் போதும், கேரம் விளையாடும் போதும், சாப்பிடும் போதும், அவர் உங்களைப் பற்றிப் பேசாமல் இருந்ததில்லை. அச்சுதன், அச்சுதன், அச்சுதன் என்று மூச்சுக்கு மூச்சு உங்களுடைய நேர்மையைப் பாராட்டுவார். உங்கள் பேரில் அவர் வைத்திருக்கும் நம்பிக்கை பற்றி உங்களுக்கு தெரியவில்லை.''

அச்சுதன் நிலா நனைத்த அவளுடைய பாதி முகத்தைப் பார்த்தான். அவள் இது நாள் வரை இழந்த சந்தோஷத்தில் ஒரு பகுதி, அவளிடம் மறுபடியும் மகரந்தமாய்ப் படிவதை அவனால் உணர முடிந்தது.

''சாரே!''

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

பால்கனியின் முகப்பில் கொச்சு வேலாயுதம் தன் காவி நிற டவலால் முகத்தை ஒற்றிக் கொண்டு பணிவாக நின்றான். காற்றில் முறுக்கிக் கொள்ளும் அலங்கார ஜிகினா போல் உடம்பை முறுக்கிக் கொண்டு நின்றான்.

''எந்தா வேலாயுதம்?''

''சப்பாத்தி சூடாயிட்டுண்டு சாரே... கர்னல் சார் காத்திருக்குன்னு.''

''இதோ வந்து விட்டோம்.''

ஊஞ்சலிலிருந்து குதித்து இறங்கினான் அச்சுதன்.

கல்லடி பட்டதும் நீர்ப்பரப்பில் காயப்படும் நிலாவைப் போல் சாந்தினியின் முகம் தங்களின் சந்தோஷத் தனிமை கலைக்கப் பட்டதால் சலனப்பட்டது. மனமில்லாமல் எழுந்தாள்.

சாந்தினி கொட்டாவியை மென்றாள்.

''தூக்கம் வந்தால் நீ தூங்க வேண்டியது தானே சாந்தினி?'' கர்னல் அருண் தாஸ் டெலிபோன் டயலில் இருந்து விரலை எடுத்து விட்டுக் கேட்டார்.

''நீங்கள் இரண்டு பேரும் இன்னும் தூங்கப் போகவில்லையே, கர்னல்?''

''எங்களுக்கு இரவு முழுதும் வேலை இருக்கிறது, சாந்தினி... நீ போய்த் தூங்கு...'' அச்சுதன் கர்னலின் அருகே நின்றிருந்தான்.

''இன்னும் என்ன வேலை?''

''ரயில்வே ஸ்டேஷன்களில் பஸ் ஸ்டாண்டுகளில், ஏர்போர்ட்டில் எல்லா இடத்திலும் மணிமாறனுக்கு வலை விரித்திருக்கிறோம், சாந்தினி... லோக்கல் போலீஸின் உதவி இல்லாமல் இதைச் செய்ய முடியாது. அவ்வப்போது அவர்களைத் தொடர்பு கொண்டு ஏதாவது தகவல் கிடைத்ததா என்று விசாரித்துக் கொண்டிருக்கிறேன்.''

''அவ்வளவு தானே? இதைத் தூங்கி விட்டுச் செய்ய முடியாதா?''

''லக்ஷ்மி ரூபா சாப்பிட்டாளா பார் சாந்தினி. அவளுக்கு ஏதாவது வேண்டுமென்றால் கொடுத்து விட்டு நீ தூங்கப்போ... எங்களுக்கு இன்னும் அவளுடைய அப்பா குருசிவகுமாரிடம் வேலை பாக்கியிருக்கிறது.'' என்றார் கர்னல் தொலைபேசியிலிருந்து நகர்ந்து.

கூடற்காற்று காதுகளுக்குள் புகுந்து எலும்பு வரை தொட்டது.

மணிமாறன் காரை நிறுத்தினான். விளக்குகளை அணைத்தான்.

''எந்த வீடு?''

''அதோ அந்த கடைசி வீடு...'' என்றான் ஹக்கிம், தன் சிகரெட்டை அணைத்து விட்டு.

''மாடியில் ஜன்னல் விளக்குகள் எரிகின்றன. விழித்திருக்கிறார்கள் போலிருக்கிறது.''

ஜன்னல் திரையில் இரண்டு பெண்களின் நிழல்கள் படிந்தன. ஒரு நிழல் கையில் தட்டுடன் ஏதோ கேட்க, மற்றது மறுத்துப் பின் வாங்கியது தெரிந்தது.

''லக்ஷ்மி ரூபாவையும் இங்கே தான் பிடித்து வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது.''

மணிமாறன் இருட்டுக் காரில் பொறுமையுடன் காத்திருக்கத் துவங்கினான்.

குருசிவகுமாரின் முகவாய் அவர் மார்பில் ஓய்வெடுத்தது. முகமெங்கும் பூத்திருந்த வியர்வை அங்கங்கே சேர்ந்து கோடுகளாய்க் கீழிறங்கிச் சட்டைக்குள் நனைத்துக் கொண்டிருந்தது.

இமைகளை உயர்த்தி பார்வையை



நிமிர்த்தினார். கர்னலின் சிரித்த முகம் அவர் முகத்துத் தசைகளை இறுக்கமாக்கியது.

''படிக்கிறேன் கேள் சிவா'' என்றார் கர்னல் தம் கையிலிருந்த பேப்பரைத் தட்டி.

''ஒற்று வேலைக்குத் துணை போன கல்லூரி மாணவி பிடிபட்டார்! தேசத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டார்!''

''ஸ்டாப்!'' குருசிவகுமார் கத்தினார்.

''சென்னை மருத்துவக்கல்லூரியில் படிக்கும் மாணவி லக்ஷ்மி ரூபா, ஒரு கலை நிகழ்ச்சிக்காகப் பாகிஸ்தான் செல்லவிருந்தார். இந்தியாவின் ராணுவ ரகசியங்களை வெளிநாட்டில் விற்பதற்கான திட்டம் ஒன்றை வைத்திருந்தார். இந்த மாணவி என்று இப்போது தெரிய வந்துள்ளது. பதினெட்டு வயதே நிரம்பிய இந்த மாணவியின் பெயர் லக்ஷ்மி ரூபா...''

''ஸ்டாப் இட்!''

''இங்கு வெளியாகியிருக்கும் புகைப் படத்தில் நீங்கள் காணும் மாணவி லக்ஷ்மி ரூபா கைது செய்யப்பட்டார். தன் ஒப்புதல் வாக்கு மூலத்தில் அவர் கூறியிருப்பதாவது...''

''கர்னல், தயவு செய்து நிறுத்துங்கள்...'' குருசிவகுமார் தம் கட்டுகளிலிருந்து விடுபடத் துடித்துத் திமிறினார்.

''இன்னும் அரை மணி நேரத்திற்குள் உன்னிடமிருந்து உண்மைகள் வராவிட்டால், இந்த ஸ்டேட்மெண்ட்டை எல்லா நியூஸ் பேப்பர்களுக்கும் கொடுத்து விடுவேன். நீ மட்டுமில்லாமல், உன் பெண்ணும் தேசத்துரோகியாக எல்லா இந்தியர்களாலும் நினைக்கப்படப் போகிறீர்கள்.''

குருசிவகுமாரின் கண்களில் தோல்வியின் கசப்பு இருந்தது.

''கர்னல் உங்களுக்கு என்ன வேண்டும்?''

அந்தமான் அயல்நாடா?

நாமெல்லாம் இத்தனை காலமாக அந்தமான் தீவுகள் என்பது இந்தியாவின் ஒரு பகுதி என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறோம்! அதுதான் இல்லை என்கிறது தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை வெளியிட்டுள்ள "யார் — எவர்?" என்னும் புத்தகம். இதில் தமிழகச் சட்ட மன்ற உறுப்பினர்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அக்குறிப்பில் உறுப்பினர்கள் சென்று வந்த வெளிநாடுகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. அதில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன், திருப்பத்தூர்த் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப. சுந்தரம் ஆகிய இருவரும் மேற்கொண்ட அயல்நாட்டுப் பயணங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவர்கள் அந்தமான் தீவுகளுக்குச் சென்று வந்ததையும் சேர்த்திருக்கிறார்கள்! விஷயம் தெரிந்த தமிழ்க்குடிமகன் கூடவா இதைக் கவனிக்கவில்லை? ஆச்சரியமாக இருக்கிறது.

— எஸ். ஐ.

"மணிமாறன் இருப்பிடம்..."

"அது எனக்கும் தெரியாது. ஆனால்..

"ஆனால்?"

"நான் உங்களிடம் சொல்லாத ஒரு விஷயத்தை இப்போது சொல்கிறேன். லக்ஷ்மி ரூபாவை விட்டு விடுவீர்களா?"

"நீ சொல்லப் போகும் விஷயத்தைப் பொறுத்திருக்கிறது. அது."

"லக்ஷ்மி ரூபாவை அச்சுதன் கைப் பற்றியதுமே எனக்குத் தகவல் வந்து விட்டது. பதறினேன். இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் பாகிஸ்தானைத் தொடர்பு கொண்டேன். மேஜர் நாஸரிடம் நடந்ததைச் சொன்னேன். அவர், காரியம் கெட்டு விட வில்லை, பரவாயில்லை என்றார். மெட்ராஸில் இருக்கும் நண்பர்கள் யாரை யாவது மணிமாறன் எப்படியும் கான்டாக்ட் பண்ணுவான். அப்போது அவனுக்கு ஒரு தகவல் மட்டும் கொடுத்து விடுங்கள் போதும் என்றார் நாஸர்."

நிறுத்தி விட்டு மேலுதட்டைத் தாண்டி வழிந்த வியர்வையை முகத்தை உதறி விலக்கினார். குருசிவகுமார்.

"என்ன மெஸேஜ் கொடுத்தார்?" அச்சுதனின் குரலில் இருந்த பரபரப்பை கர்னல் அருள்தாஸ் அமைதியாக ரசித்தார்.

"இப்போது எல்லைப் பகுதியிலிருந்து லீவில் ஊருக்குப் போயிருக்கும் ராணுவத்தினரின் பெயர்களையெல்லாம் பட்டியல் எடுத்து மணிமாறனிடம் தந்தால் போதும் என்றார். அதற்கு நான் ஏற்பாடு செய்து விட்டேன்."

"அந்த லிஸ்ட் கிடைத்து விட்டதா?"

"நாளைக் காலைக்குள் லிஸ்ட் கிடைத்து விடும்."

"யார் மூலம்?"

"தில்லியில் இருக்கும் இரு ராணுவ நண்பர்கள் மூலம்."

"யார் அது?"

குருசிவகுமார் சற்றுத் தயங்கி விட்டு இரண்டு பெயர்களைச் சொன்னார். அச்சுதன் குறித்துக் கொண்டான்.

"திருப்தியா? இனிமேலாவது என் மகளை வெளியே விடுவீர்களா?"

கர்னல் அருள்தாஸ் தம் கையிலிருந்த பேப்பரைக் கிழித்துப் போட்டார். "நாளைக் காலைப் பேப்பர்களில் நியூஸ் வராது. போதுமா?"

"அச்சுதன்... ஜீப்பை ரெடி பண்ணச் சொல்...."

"வெளியே போகிறோமா, கர்னல்?"

"மணிமாறனுக்கு லீவில் போனவர்களின் பட்டியல் கிடைப்பதற்கு முன்னால் நமக்குக் கிடைக்க வேண்டும். டெலிபோனில் அந்த லிஸ்ட்டை வாங்குவது புத்திசாலித்தனமில்லை. மெட்ராஸ் ஆர்மி ஆபீஸில் இருக்கும் டெலக்ஸைப் பயன்படுத்துகிறோம்... கமான்..."

கர்னலும், அச்சுதனும் ஜீப்பில் விரைவதைக் காருக்குள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்த மணிமாறன் ஹக்கிமிடம் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். இருவரும் இறங்கினார்கள்.

ஒன்றரை மணி நேரம் கழித்து ஜீப் வந்து பிரேக் அடித்து நின்றதும், இறங்கிய அச்சுதன் உடனே அசம்பாவிதத்தை உணர்ந்தான்.

வாசல் கதவு தாளிடப்படாமல் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. உள்ளே ஓடினான். தடுக்கி விழுந்தான்.

தடுக்கியது கொச்சு வேலாயுதத்தின் உடம்பின் மீது.


புரட்டினான். கொச்சு வேலாயுதத்தின் உதட்டோரம் கிழிந்து ரத்தம் கோடாக இறங்கியிருந்தது. அவன் கண்களில் கண்ணீர் திரண்டது. குரல் நடுங்கியது.

"சாரே, ரெண்டு ஆளு வன்னு.."

"வந்து?" அச்சுதன் கொச்சு வேலாயுதத்தை உலுக்கினான்.

"சாந்தினியம்மையைக் கொண்டு போயி."

(தொடரும்)



கசந்து போன காதல்!

கல்லூரிப் பருவத்திலே காதல்வயப்பட்டனர் ராதாவும் சேகரும். மருத்துவம் படித்து டாக்டர்களான பின்னர் பெற்றோரின் முழுச் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர். மருத்துவத்தில் மேல் படிப்புக்காக அயல்நாடு சென்றனர். இருவருமே MRCP படித்துப் பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பி பெங்களூரில் தனிக் குடித்தனம் ஆரம்பித்தனர். ஒரு கிளினிக் திறந்து பிராக்டீஸுக்குப் பிள்ளையார் சுழி போடும் முன்பு ராதா கருவுற்றாள். அவள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், உடல் சிரமம் கூடாது என்று டாக்டர் அறிவுறுத்தியதால் bed rest இல் இருக்க வேண்டியதாயிற்று. சேகர் மட்டும் பிராக்டீஸைத் தொடங்கினான். மளமளவென்று வளர்ந்து, சேகருக்கு நல்ல பெயர், கிளினிக்கில் எப்போதும் சேகருக்காகக் காத்திருந்தார்கள் நோயாளிகள்...

ராதாவுக்குக் குழந்தை பிறந்தது. 'அப்பாடா! இன்னும் சில மாதங்களில் நானும் கிளினிக் போய்வரலாம்' என்று அவள் எண்ணியபொழுதுகுழந்தைக்கு lactose allergy என்று கண்டு பிடிக்கப்பட்டு மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர். ராதா தான் குழந்தையைப் பார்த்துக் கொண்டாள். சேகர் கிளினிக் போய் வந்தான். படு பிஸியாகி விட்டான். சில மாதங்கள் சென்று ராதா கேட்டாள்: "சில சமயங்களிலாவது நீங்கள் குழந்தையைப் பார்த்துக் கொண்டால்நான் கிளினிக் போகலாம் அல்லவா?"

சேகர் சொன்னான்: "எப்படியிருந்தாலும் நீ பிராக்டீஸ் தொடங்கவில்லை. ஆனால் நான் தொடங்கிவிட்டேன். இந்த நிலையில் நான் திடீரென்று ஆஸ்பத்திரி போவதைக் குறைத்துக் கொண்டால் பிராக்டீஸ் பாதிக்கப்படும். அதனால் இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுமையாய் இரு. குழந்தை

வளர்ந்து திட உணவு சாப்பிட ஆரம்பித்தால் போகலாம்.''

இதுவும் நியாயம்தான் என்று ராதாவுக்குத் தோன்றினாலும் 'வஞ்சிக்கப்படுகிறோமோ' என்ற உணர்வும் எழாமல் இல்லை.

இப்படியிருக்கையில் சில நாட்கள் அதிக வேலை செய்து விட்டுத் தாமதமாக வீடு திரும்பிய சேகர், ''எப்படியாவது கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்து கொண்டு கிளினிக் வரக் கூடாதா? எனக்குஎவ்வளவோ உதவியாய் இருக்கும்?'' என்று கேட்க ஆரம்பித்தான். இப்படியே பல முறை நடந்தது.

ராதாவும் சிரமப்பட்டுக் குழந்தையைக் கவனித்துவிட்டுச் சில நாட்கள் கிளினிக் சென்று வந்தாள். ஆனால் அவளுக்கு மன நிறைவு இல்லை. முழுக்கவனத்தையும் தொழில் மீது செலுத்த முடியவில்லை. குழந்தையையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை. இந்த இரண்டுங்கெட்டான் நிலையில் அவள் பிராக்டீஸ் சூடுபிடிக்கவில்லை.

ஒரு நாள் ராதா சேகரிடம் சொன்னாள்: ''இன்னிக்கு எனக்கு ஒரு பேஷண்ட் காத்திருப்பாள். நான் கிளினிக் போய் வந்துவிடுகிறேன். அதுவரை குழந்தையை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று. சேகர் சொன்னான்: ''உனக்கு ஒரே ஒரு பேஷண்ட்தானே. எனக்கு ஒரு டஜன் பேர் காத்திருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து உன் ஒரு பேஷண்டையும்நானே பார்த்துவிடுகிறேன். நீ குழந்தையுடன் இரு.''

இதுவரை உள்ளுக்குள்ளேயே குமைந்து வாடிக் கொண்டிருந்த ராதா வெடித்தாள்: ''உங்களுக்கு ஒரு டஜன் பேஷண்டுகளிருக்கலாம். ஆனால் நானும் உங்களைப் போல் ஒரு MRCP. அதுவும் முதல் முயற்சியில் பாஸ் செய்த MRCP. நீங்கள் இரண்டாவது attempt தான். அப்போதும் நான் உட்கார்ந்து பாடத்தை உங்கள் மண்டையில் ஏற்ற வேண்டியதாக இருந்தது!''

சேகர் ஒரு கணம் அதிர்ந்தாலும் சுதாரித்துக் கொண்டு சொல்லுக்குச் சொல் பதிலடி தந்தான்:

''நீ பெரிய MRCP ஆக இருக்கலாம். ஆனாலும் என்ன பிரயோஜனம்? இவ்வளவு வசதிகள், வேலைக்காரர்கள் இருந்தும் உன்னால் வீட்டு நிர்வாகத்தையும் குழந்தையையும் கவனித்துக்கொண்டு கிளினிக்குக்கும் வர முடியவில்லை. நடைமுறையில் நீ ஒரு படு தோல்வி!''

''என்னை எங்கே கிளினிக் வருவதற்கு அனுமதித்தீர்கள்?'' என்று ராதா ஆத்திரத்துடன் கேட்க,

சேகர், ''நானா குறுக்கே விழுந்து தடுத்தேன்? எனக்கு உதவ வரக் கூடாதா என்று எவ்வளவு முறை கேட்டேன்...?'' என்று பதில் கூறி அவள் வாயை அடைத்துவிட்டான்.

இதற்குப்பிறகுராதா பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிறந்தகம்போய் விட்டாள். ஒருமாதம்கழித்துச் சேகர் அவளைத் தேடிச் சென்றான். இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதை இருவராலும் மறுக்க முடியவில்லை. மணவியல் நிபுணர்களிடம் சென்று அறிவுரை கேட்க முடிவு செய்தனர்.

டாக்டர் விஜயகுமார், டாக்டர் லக்ஷ்மி விஜயகுமார் கூறியவை:

மண வாழ்க்கையில் தம்பதிகள் பரஸ்பரம் ஒருவரிடமிருந்து மற்றவர் திடமும் மன வலிமையும் பெற்று வளர வேண்டும். ஒருவரை ஒருவர் இந்த அளவில், சார்ந்திருந்தாலும், அவர்கள் உணர்வு பூர்வமாக ஐக்கியமாகிவிடக் கூடாது. அது முடியாத காரியமும் கூட. ஒருவரையொருவர் புரிந்து கொண்டாலும் உணர்ந்து கொண்டாலும் தனித்தன்மை இழந்து ஒருவர் ஆளுமையில் மற்றவர் கரைந்து போய்விட முடியாது. இருவரும் தனித்தனி நபர்கள் என்ற மறுக்க முடியாத உண்மை மறக்கப் பட்டதால்தான் ராதா — சேகர் வாழ்க்கையில் பிரச்னை ஏற்பட்டது.

'எனக்கு அதிகம் பேஷண்டுகள்; எப்படியிருந்தாலும் நீ இன்னும் பிராக்டீஸை ஆரம்பிக்கவில்லை' போன்ற சேகரின் வாதங்கள் உண்மையானவை. ஆனால் அவை சந்தர்ப்பத்தைச்சரியாகஎடைபோட்டனவேயொழிய ராதாவின் உணர்வுகளை எடைபோடவில்லை— அவள் சுயகௌரவத்தைத் தகர்த்தன. 'நீ கிளினிக்குக்கு வந்து எனக்கு உதவக் கூடாதா?' என்று அவன் கேட்டது

ஊர்ப் பெயர்களில் ஒரு கல்யாணக் கதை!

- மாப்பிள்ளையூரணி — சிதம்பரனார் மாவட்டம்
- பெண்ணாடம் — செங்கல்பட்டு மாவட்டம்
- திருமணஞ்சேரி — தஞ்சாவூர் மாவட்டம்
- மணவாளக்குறிச்சி — குமரி மாவட்டம்
- நல்ல ஆண் பிள்ளை பெற்றான் — வட ஆற்காடு மாவட்டம்.

— ரமா ராமநாதன்.



அருள்வாக்கு

அவ்வையார் பெரிய பிள்ளையார் பக்தை. அந்தக் குழந்தை ஸ்வாமியை வேண்டிக் கொண்டுதான் அவள் சின்ன வயசிலேயே கிழவியாகி விட்டாள். ஏன் அப்படிச் செய்தாள்? வாலிபமாகவும், நடுத்தர வயதாகவும் இருந்தால் ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்த வேண்டியிருக்கும். பக்திக்குக் குடும்ப வாழ்க்கை இடையூறு என்பதாலேயே, இடையூறுகளை எல்லாம் போக்கும் விக்நேசுவரரை வேண்டிக் கொண்டு கிழவியாகி விட்டாள்.

ஸுப்ரம்மண்ய ஸ்வாமிக்குக் கல்யாணமாகஸஹாயம்பண்ணின பிள்ளையார் இவளைக் கல்யாணமேயில்லாத பாட்டி ஆக்கினார்! யாருக்கு எதைத் தர வேண்டுமோ அதைத்தருவார். இவளைச் சிறு பிராயத்திலேயே கிழவியாக்கி விட்டார். ஆனால் அவர் குழந்தை ஸ்வாமி அல்லவா? அதனால், இவள் தன்னிடம் மட்டும் எப்போது பார்த்தாலும் பக்தியாக இருந்தால் போதாது. இவளால் எல்லாக் குழந்தைகளும் நன்மை பெற வேண்டும் என்று நினைத்தார். ஒரு சின்னக் குடும்பம் வேண்டாம் என்று கிழவி ஆனவளை, அத்தனை குழந்தைகளையும் கொண்ட பெரிய தமிழ் நாட்டுக் குடும்பத்துக்கே உபதேசம் செய்கிற பாட்டியாக்கி விட்டார்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

வெந்த புண்ணில் வேலைத் தான் பாய்ச்சியது.

ராதாவும்சேகரும்ஒருவரிடமிருந்து மற்றவர் வலிமைபெற்று வளர்வதற்குப் பதிலாக ஒருவரையொருவர் சிறுமைப்படுத்திக் கொண்டனர். தன்னை மட்டுமேபெரிதாக்கிக் காட்டிக் கொள்ள இருவருமே முயன்றனர்.

இந்த உண்மைகளைத் தம்பதிக்குச் சுட்டிக் காட்டினோம். 'உங்கள் வெற்றியால் மட்டுமே ராதாவின் வாழ்க்கை நிறைவடையாது' என்று சேகருக்கு எடுத்துச் சொன்னோம். திருமண பந்தத்தை வலுப்படுத்தும்நோக்குடன் ராதா ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறாள்; அதற்காகத் தொழில் முறையில் பெரிய தியாகம் செய்திருக்கிறாள் என்பதைச் சேகருக்கு உணர்த்தினோம். சேகரின் தொழில் பெருக்கத்தைக் கண்டு மனப்பூர்வமாக மகிழ்ச்சி கொள்ள வேண்டும்; எப்போதும் ஒப்பு நோக்கி எடை போடக் கூடாது என்றுராதாவுக்குச் சுட்டிக் காட்டினோம்.

இருவரையும் அமரச் செய்து ஒரு புதிய அட்டவணை தயாரிக்கச் செய்தோம். அதன்படி தினமும் மதிய உணவுக்குச் சேகர் வீடுதிரும்ப வேண்டும்; இருவரும்சேர்ந்து உணவு அருந்திய பிறகு ராதா கிளினிக்குக்குப் போவாள்; மாலை ஐந்து மணிக்கு அவள் வீடு திரும்பும் வரை சேகர் குழந்தையைப் பார்த்துக் கொள்வான் என்று முடிவாகியது.

அட்டவணையைக் கடைப்பிடிக்கும் தம்பதிகள் இப்போது சந்தோஷமாக இருக்கின்றனர்.

— எஸ். ஆர்.

வண்ணப்படம்: உத்ரா.
நடிப்பு: கௌரி, பாஸ்கர்.

அடுத்த இதழில்: பழகப் பழகப் புளித்ததோ?!

வேடபட்டி கிராமத்தில் தண்ணீருக்கு இருக்கும் தரித்திரியத்தைச் சுப்பையா சாமியைச் சொல்லச் சொல்லணும். எத்தனை மணி நேரமானாலும் சரி — மனுஷன் தண்ணி குடிக்காமல் சொல்வார்! ஒருத்தரின் வடிகட்டிய கஞ்சத்தனத்தைப் பற்றிச் சொல்ல வருகிற போது 'அவனா, அவன் சுத்த இந்தப் பயலாச்சே! தவிச்ச வாய்க்குத் தண்ணி கூட தர மாட்டானே' என்று சொல்றது வழக்கம். அதுபடிப் பார்த்தால் வேடபட்டியில் இருக்கிறவர்கள் எல்லாமே சரியான கஞ்சப் பிரபுக்கள்! வீடு தேடி வந்திருப்பவர்களை யாரும் அசந்து மறந்து கூட 'தண்ணி குடிக்கிறீங்களா' என்று கேட்டு விட மாட்டார்கள்.

''அவங்க கேக்க மாட்டாங்க சாமி — தண்ணி குடிக்கிறீங்களான்னு... ஆனா வீடு தேடி வந்திட்டவன் கொஞ்சம் குடிக்கத் தண்ணி தாங்க'ன்னு கேட்டுட்டா — அப்ப என்ன பண்ணுவாங்க?''

''வேற எதையாவது பேசி, தண்ணி காட்டிடுவாங்க!''

''சிரிப்புத்தான் வருது — நீங்க சொல்றதைப் பாத்தா.''

''ராசப்பா! கோவணம் நனையாமே குளிக்கிற அளவுக்குத் தரித்திரியம் அவங்களுக்கு இன்னைக்கித்தான். நாப்பது வருசத்துக்கு முந்தி வேடபட்டிப் பயல்களோட கதையே வேற...''

''கதையே வேறன்னா?''

''நாப்பது வருசத்துக்கு முந்தி' ஒரே ஒரு வேடபட்டிக்காரன் குளிக்கிற தண்ணியில்

வேடபட்டி



ஒரு பெரிய சர்க்கஸ் யானையையே குளிப் பாட்டிடலாம். அப்பிடின்னா பாத்துக்க. அவனுங்க எப்பிடி குளிச்சிருப்பானுங் சன்னு...''

''அப்பிடி அவனுங்க குளிக்கிறதுக்கு அந்த ஊர்ல தண்ணி இருந்திச்சா சாமி — அப்ப?''

''நாப்பது வருசத்துக்கு முந்தி வேடபட்டி மண்ணைச் சும்மா தொட்டாலே போதும்— ஊத்துத் தண்ணி பிச்சிக்கிட்டு வரும்.''

''ஊத்துத் தண்ணி பிச்சிக்கிட்டு வருமா? அப்பாடியோ! அப்படின்னா அந்த ஊர்ல ரொம்பப் பயங்கரமா மழை பேஞ்சிருக் கனுமே சாமி?''

''ஒவ்வொருத்தன் செவுடும் பிஞ்சி போயிரும் — அங்க பேயற மழையில! ராசப்பா; ஐப்பசி மாசம் வந்திட்டுப் போச் சின்னாலே — வேடபட்டியில் பெரிய சமுத் திரம் வந்திட்ட மாதிரி தெரியும். கெணறு எது; கம்மா எது; பூமி எதுன்னு நீ கண்டு பிடிக்கவே முடியாது. செவக்காட்டுத் தண்ணி தான் — எங்க பாத்தாலும் செக்கச் செவேல்னு — ஆராத்தி தண்ணி மாதிரி ஓடும்...''

''நம்பவே முடியலையே... ஆனா ஒண்ணு மட்டும் நெசம் சாமி; வேடபட்டியில் இருக்கிற பழைய நந்தவனங்க மாதிரியோ; கெணறுகள் மாதிரியோ; இல்லை அந்தக் கம்மா கரைங்க மாதிரியோ எந்த ஊர்லே யும் பாத்ததே இல்லை நான்.''

''அதாண்டா வேடபட்டி!''

''சும்மாவே ஊர்ப் பூரா கெணறு. பெற கும் எதுக்கு சாமி நாலா பக்கமும் நந்த

ஸ்டெல்லா புரூஸ்



வனம் வச்சி அதுக்குள்ளயும் கெணறுங்க.''

''எருமை மாடுங்க மாதிரி நல்லா விழுந்து குளிச்சுட்டுக் கெடக்கறதுக்குத்தான்.''

''ஓகோ; அப்பாடிக் குளிச்சி குளிச்சி த் தான் வேடபட்டிப் பயல்கள் பூராவும், வேம்பாத்து கருப்பட்டியாட்டம் கன்னங் கரேல்னு கறுத்துப் போயிருக்கானுங் களா....''

''நாப்பது வருசத்துச் கு முந்தி, குளிச்சே ஒடம்பு கறுத்துப் போன பயல்கள் — இன்னிக்கிக் கட்டியிருக்கிற கோவணம் நனையாமே குளிக்கிறாங்கன்னா பாத்துக்க தலைவிதி எப்பாடியிருக்குன்னு...''

''அதான் சாமி ஆச்சர்யமா இருக்கு. நாப் பது வருசத்துக்கு முந்தி என்னடான்னா — தொட்டாலே ஊத்து வந்த ஊரு இன்னைக் கிப் பொட்டல் காடா கெடக்கு. எந்தக் கெணத்திலேயும் சொட்டுத் தண்ணி யில்லை. ஒரு நந்தவனம் பாக்கியில்லாமே நாசமாப் போயாச்சி — சனங்களுக்குப் பாவம் — குடிக்கத் தண்ணி இல்லை. அதெப் படிங்க சாமி — ஒரு ஊரு இப்பிடித் தலை கீழா மாறிப் போயிரும்?''

''எல்லாம் ஒரு பொம்பளை விட்ட சாபம் ராசப்பா... பந்தல்குடின்னு ஒரு ஊரு இருக்கு. கேள்விப்பட்டிருக்கியா?''

''கேள்விப்பட்டிருக்கேன் சாமி.''

''அந்த பந்தல்குடியில செல்லத்தாயி செல்லத்தாயின்னு ஒருத்தி இருந்தா. பந்தல் குடி அவளைக் கட்டிக் குடுத்த இடம். அவ பொறந்து வளந்த ஊரு வேடபட்டி. வேட பட்டியில கருவேலர்னு ஒருத்தர் இருந்தார். அவரோட மூத்த மவதான் செல்லத்தாயி. இந்தச் செல்லத்தாயிக்கு ஒரே ஒரு மவன் — தம்புராசுன்னு... அந்தப் பயல் அவனோட அம்மாக்காரிக்குப் பயங்கர செல்லம்.''

''ஒரே மவன்னு சொன்னீங்களே — செல்லம் குடுக்கத்தானே செய்வாங்க?''

''மவனைத் தனியா எங்கேயும் போக விட மாட்டா. வர விட மாட்டா. பத்தொம்பது வயசு ஆம்பளையா ஆயிட்டான். அப்பக் கூட தனியா அவனைப் பக்கத்துச் சந்து வரைக்கும் கூட போக விட மாட்டா. அவன் கூடவே ஒரு வேலைக்காரப் பயலையும் அனுப்புவா — மவனைப் பார்த்துக்கச் சொல்லி...''

''கூத்துத்தான்!''

''அந்தா இந்தான்னு அவனுக்கும் இருவது வயசாயிருச்சி ... ஆனா; அந்தத் தம்புராசுப் பயலோட ஒடம்புக்குத்தான் இருபது வயசாச்சே தவிர; அவனோட மனசுக்கு அப்பவும் பத்து வயசுதான் ஆயிருந்தது...''

''அதாவது சின்னப் பயல் மாதிரி இருந் தான்...''

"ஒருதரம் என்ன ஆச்சி, தம்புராசுப் பயலோட தகப்பனுக்குக் கொஞ்சம் ஒடம்பு சரியில்லாமே போயிடுச்சி. அதைப் பாக்கறதுக்கு வேடபட்டியில இருந்து செல்லத்தாயியோட தம்பிக்காரன் கௌம்பி ஒரு நாள் பந்தல் குடிக்குப் போனான்."

"அதாவது மச்சான்காரனைப் பாக்கறதுக்கு மச்சின்ன் போனான்?"

"ஆமா! போன காரியமெல்லாம் ஆச்சி. மச்சினன் வேடபட்டிக்கும் கௌம்பியாச்சி. கௌம்பினவன் சும்மாவிருந்திருக்கக் கூடாது...? நாலு நாளைக்கி மாமா வீட்டுக்கு வந்திட்டு வந்திரலாம்னு சும்மா கெடந்த தம்புராசுவைப் பாத்துக் கூப்பிட்டிருக்கான். அதான் சாக்குன்னு பயல் ஒடனே கௌம்பிட்டான் மாமன்காரன் கூட வேடபட்டிக்கு..."

"செல்லத்தாயி எப்பிடி விட்டா மவனை?"

"அவ எங்க விட்டா? போவாதடா; இன்னொரு தரம் அம்மாவே கூட்டிட்டுப் போறேன்னு சொல்லியிருக்கா. பயல் கேக்கலை. மாமன்காரனும் மருமவனுக்காக ஒத்து ஊதியிருக்கான் — இருபது வயசு ஆம்பளையாயிட்டான் இன்னும் அவனைச் சின்னப்பாப்பா மாதிரி வீட்டுக்குள்ளேயே அடைச்சி அடைச்சி வைக்காதக்கான்னு சொல்லி... என்ன சொல்லியும் செல்லித்தாயிக்குத் தம்புராசுவை 'வேடபட்டிக்கு அனுப்பறதுக்கு மனசே வரலை. ஆனா ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மனசில் யோசிச்சி வச்சிக்கிட்டு மவனை வேடபட்டிக்கு நாலே நாலு நாள் போய் வர்றதுக்கு அனுப்பி வச்சா..."

"மனசில் அவ யோசிச்சி வச்சிருந்த விஷயம் என்னங்க சாமி?"

"வேடபட்டியில செல்லத்தாயியோட தம்பிக்காரனுக்கு — அப்பத்தான் சமைஞ்சி ஒரு பொம்பளைப் பிள்ளை இருந்திச்சி... ரெண்டு வருசம் போச்சின்னா தம்புராசுக்குத் தம்பி மவளையே கட்டி வச்சிரணும்ங்கறது அவளோட மனசுல திட்டம். மாமன்காரன் பிரியமாக் கூப்பிடறான்ங்கிற சாக்குல மவன் நாலு நாள் போயிட்டுத்தான் வரட்டுமே; போய் மாமன் மவளையும் பாத்திட்டுத்தான் திரும்பட்டுமே என்கிற ஒரே பிளானோட சரின்னு சொன்னா... ஆனா ஒரே ஒரு கண்டிஷன் போட்டா... தம்புராசுப் பயலுக்கு நீச்சி தெரியாது — அதனால எந்தக் கெணத்துப் பக்கமும் யாரோடேயும் எதுக்காகவும் அவனை அனுப்பிரவே கூடாதுன்னு பலமான கண்டிசன் போட்டா... 'கவலையே படாதே; எல்லாம் நான் பார்த்துக்கறேன்; கூட்டிட்டுப் போற மாதிரியே பத்திரமா அவனைக் கொண்டாந்து சேர்க்கிறது என் பொறுப்பு'ன்னு தம்பிக்காரனும் அடிச்சிச் சொன்னான்..."

"சரி..."

"பாவம்; பஸ் ஸ்டாண்டுக்குப் போயி தம்புராசு மாமன்காரன் கூட பஸ் ஏறிப் போற வரைக்கும் செல்லத்தாயி 'கெணத்துப் பக்கம் மட்டும் போயிடாதடா தம்பு'ன்னு ஆயிரம் தடவை சொல்லிட்டா. சரி சரின்னு தலையைக் கோயில் மாடு மாதிரி ஆட்டிட்டு அந்தப் பயலும் கௌம்பிப் போயிட்டான். செல்லத்தாயி மவனைக் கடைசியாப் பாத்தது அன்னைக்கித்தான்..."


"அம்மாக்காரி சொல்லை மீறி, கெணத்துப் பக்கம் போய்த் தொலைஞ்சானாக்கும்?"

"இங்கதான் ஒரு ரகசியம் இருக்குடா ராசப்பா... கடைசியில சொல்றேன் அதை. இந்தத் தம்புராசுப்பயல் இருக்கானே — அவன் அப்படியெல்லாம் அம்மாக்காரி சொல்லை மீறிக் கெணத்துப் பக்கம் போறேன்; ஆத்துப் பக்கம் போறேன்னு சொல்லிட்டுப் போற மாதிரியான பயல் கெடையாது. அம்மாக்காரி போட்ட கோட்டைத் தலையே போனாலும் தாண்ட மாட்டான் பயல்... ஆனா வேடபட்டிக்குப் போய்ச் சேர்ந்த நாலாவது நாள் தம்புராசு மாமன் மவகூட திண்ணையில் உக்காந்து பல்லாங்குழி வெளையாடிட்டிருந்தான். அப்ப அந்தத் தெருப் பயல்கள் ஆறேழு பேர் வந்து கிளிக்குஞ்சு பிடிச்சிட்டு வரலாம் வான்னு சொல்லிக் கூப்பிட்டான்கள். சரின்னு இவனும் கௌம்பிப் போனான். போனா — கிளிக்குஞ்சும் இல்லை எலிக்குஞ்சும் இல்லை.. பயல்கள் கிளிக் குஞ்சி பிடிக்கப் போலாம்னு சொன்னதெல்லாம் பொய். இருபது வயசுப் பயல் நீச்சல் தெரியாதுன்னு சொல்லிப் பொம்பளைப் பிள்ளை மாதிரி திண்ணையில் உக்காந்து காலை ஆட்டிக்கிட்டு எங்க மானத்தை எப்

"அவரை ஏன் உயிரெழுத்து மனிதர்னு சொல்றீங்க?"


"'ஆ', 'ஊ'ன்னா, அவர் மனைவி சண்டை போட்டுக்கிட்டு 'ஊ'ருக்குப் போயிடுவா... இவர் போய் 'இ', 'ஈ'ன்னு பல் இளிச்சு அழைச்சுக்கிட்டு வருவார்; அதனாலதான்!"








ஆடுவதும் தேவையில்லை, பாடுவதும் தேவையில்லை



ஓகே கொடுத்தாலே போதும், கறக்கலாமே நிறைய பால்.

ஆம்! டாடா ஓகே
பால் வறட்சியைப்போக்கும்
ஒரு முழுமையான தீவனம்.
மாட்டுத்தீவனம்
வாங்கும் பொழுது
டாடா வின் ஓகே தானா என்று
பார்த்து வாங்குங்கள்.
டாடாவின் ஓகே
ஒரு முழுமையான
கால்நடைத்தீவனம்.



ஓகே.

தயாரிப்பவர்கள்:

டாடா ஆயில் மில்ஸ்

படி வாங்கறதுன்னு மொதல்ல ஒருத்தன் கேட்டான். இன்னைக்கி ஒனக்கு நீச்சலடிக்கச் சொல்லித் தரப் போறோம்னு வேற ஒருத்தன் சொன்னான். வேண்டாம் வேண்டாம்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் தம்புராக. எவனும் கேக்கலை. தப்பிச்சி ஒரே ஓட்டமா ஓடிறலாம்னு கூடப் பாத்தான். பய பிள்ளைகள் விடலை. நீச்சித் தெரியாதுன்னு சொல்றதுக்கு வெக்கமா இல்லையான்னு கேட்டான்கள். எப்படியும் இன்னைக்கி ஒனக்கு நீச்சலடிக்கச் சொல்லிக் குடுக்கத்தான் போறோம்னு சொல்லித் தம்புராகப் பயலை அப்படியே குண்டுக் கட்டாத் தூக்கி ஒரு பெரிய கெணத்துக்குள்ள எறிஞ்சிட்டானுங்க..."

"பாவிப் பயலுங்க!"

"வெறும் நீச்சித் தெரியாத பயலைக் கெணத்துல தள்ளி உட்டுட்டு நீச்சல் சொல்லித் தர்றது வேடபட்டிப் பயல்களுக்கு அல்வா திங்கற மாதிரி! ஆனா தம்புராக வெறும் நீச்சித் தெரியாத கேஸ் மட்டும் இல்லியே."

"என்ன சொல்றீங்க சாமி?"

"அந்தப் பயல் பாவம் காக்கா வலிப்புக்காரன்டா ராசப்பா!"

"அட அநியாயமே!"

"உயிரே போறதா இருந்தாலும் காக்கா வலிப்பு வர்றவன் கெணத்து மேட்டுப் பக்கம் போலாமா?"

"இப்பிடிப் போயிருக்கான் பாருங்க."

"அதான் சிக்கலாயிடுச்சி. நீச்சித் தெரியாத பயலை வேடபட்டிக்காரன் ஒருத்தனே என்ன வந்தாலும் சமாளிச்சிக் காப்பாத்திருவான். இது காக்கா வலிப்பு பாரு — தம்புராக பயல் தண்ணிக்குள்ள விழுந்த நிமிசமே கையையும் காலையும் விக்கிக்கிணு வெட்டி வெட்டி இழுக்க ஆரம்பிச்சிருச்சி. கூடப் போன பயல்கள் அத்தனை பேரும் என்னமோ ஏதோன்னு பயந்துட்டான்க. அஞ்சாவது நிமிசம் தம்புராகப் பயல் தண்ணிக்குள்ள மூழ்கிப் போயிட்டான். கூட்டிட்டுப் போன பயல்களுக்கு உதறல் எடுக்க ஆரம்பிச்சிடுச்சி. என்ன செய்றது ஏது பண்றதுன்னு தெரியாமே பயல்கள் கட்டின கோவணத்தோட எந்திருச்சிக் காட்டுக்குள்ளே ஓடியே போயிட்டானுங்க..."

"குளிக்குறுஞ்சி பிடிச்சிட்டு வரேன்னு சொல்லிட்டுப் போன அத்தை மவனைக் காணோமே காணோமேன்னு அந்தப் பொம்பளைப் பிள்ளையும் காத்துக் காத்துப் பாத்திருந்திட்டு, பயந்து போய்க் களத்து மேட்டில் இருந்த அப்பன்காரன்கிட்டே ஓடிப் போய்ச் சொல்லிடுச்சி. கூட்டிட்டுப் போன பயல்களைக் கேக்கலாம்னு பாத்தா

அவனுங்களையும் காணோம். அதுக்குள்ள பொழுதும் இருட்ட ஆரம்பிச்சிருச்சி. ஒரு பயலும் திரும்பி வர்ற மாதிரி தெரியலை. ராத்திரி பூரா தேடியும் ஒரு சேதியும் தெரியலை. பொழுது விடியற நேரத்திலே தான் ஒரு கெணத்துல தம்புராசுப் பயல் ஒடம்பு ஊதிப் போய் மெதந்திட்டு இருந்ததைப் பார்த்தாங்க... பந்தல்குடியில மவன் இந்தக் கார்ல வந்திருவான்; அந்தக் கார்ல வந்திருவான்னு எதிர்பார்த்து வாசல்லேயே விடிஞ்சதில இருந்து நின்னுக்கிட்டே இருந்தாளாம் செல்லத்தாயி. சேதி போனதும் எப்படி இருந்திருக்கும் அவளுக்கு? நெனச்சிப் பாரு ராசப்பா..."

"என்ன பாடுபட்டதோ அவளோட மனசு — பாவம்!"

"பந்தல்குடியில இருந்து ஓடியே வந்தாளாம்டா ராசப்பா...

"சொல்லாதீங்க சாமி. எனக்கே கண்ணு கலங்குது..."

"கிறுக்குப் பிடிச்சவ மாதிரி ஓடினாளாம்டா... வெறியே பிடிச்சிட்டவ மாதிரி கதறிப் புலம்பினாளாம்.. வேடபட்டி ரோட்ல பொரண்டு பொரண்டு அழுது தீர்த்தாளாம். என்ன அழுது என்ன செய்ய? திரும்பியா வரப் போறான் செத்துப் போன பயல்? ஆறவே இல்லை செல்லத்தாயிக்கு. மவனைப் பிணமாக்கின கெணத்துக்குள்ள மண்ணை வாரி வீசினா ... புழுதியை வாரித் தட்டினா.. அப்படியும் ஆத்திரம் அடங்கலை. தண்ணிக்குள்ள முங்கிச் செத்துப் போனானே ஒத்த மவன் என்கிற வெறியில் 'ஊர் சனங்கள்ளாம் தண்ணியே இல்லாம சாவுங்கடா'ன்னு சபிச்சா. குடிக்கத் தண்ணி இல்லாம நாசமாப் போங்கடா; ஒங்க ஊர்ல இருக்கிற கெணறு ஒண்ணு பாக்கியில்லாமே அழிஞ்சி போகட்டும். ஏரேழு தலைமுறைக்கும் பொட்டு மழை இல்லாமே ஊரெல்லாம் பொட்டல் காடா போகட்டும்னு தலைவிரி கோலமா ஆங்காரம் பிடிச்சிப் போயி குடுத்தா பாரு — சாபம்; அதோட சரி — வேடபட்டியில் மழை... நெசமாவே இன்னைக்கி வரைக்கும் சுத்தமா ஒரு பொட்டு மழை கெடையாது.. குடிக்கிறதுக்கு ஒரு சொம்புத் தண்ணியும் கெடையாது. பாலைவனமாவே மாறிப் போயிருச்சி... "ஊரு". அப்படின்னா பாத்துக்க; எம்புட்டு சக்தியான சாபம்னு..."

"நீங்க சொல்றாப்பல பயங்கரமான சாபம்தான். ஆனா ஒண்ணே ஒண்ணைத் தான் என்னால் ஒத்துக்க முடியலை சாமி."

"என்னத்தை ஒத்துக்க முடியலை?"

"ஏதோ அஞ்சாறு பயல்கள் அவ மவனைக் கெணத்துக்குக் கூட்டிட்டுப் போனான்கள். அதுக்கு என்னத்துக்கு ஒரு ஊரையே போட்டுச் சபிச்சி நாசம் பண்ணணும்?"

"அவசரப்பட்டு ஒரு ராசாக்காரன் செஞ்ச தப்புக்குக் கண்ணகி கூடத்தான் ஒரு ஊரையே போட்டு எரிச்சா."

"இங்க தப்பு செல்லத்தாயி பக்கமும் இருக்கே."

"என்ன தப்பு?"

"மவனுக்குத்தான் அப்பப்ப காக்கா வலிப்பு வருமே — அதனால யாரும் அவனை மறந்து கூட கெணத்துக்கெல்லாம் கூட்டிட்டுப் போயிராமே பாத்துக்கன்னு தம்பிக்காரன்கிட்டே சொல்லி அனுப்பியிருக்கலாமே செல்லத்தாயி... அதைச் செய்யலையே அவ."

"அதைத்தான்டா பெரிய ரகசியமா மறைச்சி வச்சிருந்தா."

"எதுக்கு சாமி அதைப் போய் மறைச்சி வைக்கணும்?"

"தெரிஞ்சி போச்சின்னா தம்பிக்காரன் அவளோட அழகு மவளைத் தன் மவனுக்குக் கட்டிக்குடுக்க மாட்டேன்னு சொல்லிப் போடுவானே..."

"அய்யோடா...! அதுக்காகவா அவ்வளவு பெரிய சங்கதியைப் போய் மறைச்சா கடங்காரி?!"

"அவனும் மறைச்சா. அவ வாய் பூட்டுப் போட்டுப் போட்டுத் தம்புராசுப் பயலும் சுத்தமா மறைச்சிட்டான்.

"நீங்க என்னதான் சொல்லுங்க — செல்லத்தாயி அப்படியொரு சாபம் குடுத்தது சரி கெடையாது சாமி."

"நீ தெரியாமே பேசறேடா ராசப்பா. அவளோட மனசு என்ன பாடுபட்டுச்சின்னு நமக்கென்னடா தெரியும்?"

"ஒரு சந்தேகம் சாமி?"

"கேளு..."

"சாபம் — யாரு குடுத்தாலும் பலிச்சிருமா?"

"பலிக்காது! அதுக்கு வேற ஒரு கதை இருக்கு. இன்னொரு நாளைக்கிச் சொல்றேன் அதை..." சுப்பையாசாமி எழுந்து கொண்டு விட்டார்!

● சினிமாவுக்கான ஆஸ்கார் பரிசை அதிகம் வாங்கியவர் வால்ட் டிஸ்னி. 1931 லிருந்து 1969 வரை அவர் 35 பரிசுகளைப் பெற்றுள்ளார். இதை யாரும் இதுவரை மிஞ்சவில்லை.

தகவல்: தக்கோலம் புகாரி.



சிவகாமியின் சபதம்



முப்பத்தாறாம் அத்தியாயம்

வாகீசரின் ஆசி

அகத்துறைப் பாடல் ஒன்றுக்கு அபிநயம் பிடிக்கும்படி ஆயனர் பணித்ததும், நாவுக்கரசரின் திருவாரூர்த் தாண்டகத்திலிருந்து ஓர் அருமையான பாடலைப் பழம் பஞ்சரம் என்னும் பண்ணிலே அமைத்துச் சிவகாமி பாடினாள்.

ஒரு கன்னிகை முதன் முதலிலே இறைவனுடைய திருநாமத்தைச் செவியுறுகிறாள். அப்போது அவளுடைய உள்ளத்தில் அரும்பும் பக்திக் காதலானது பின்னர் படிப்படியாக வளர்ந்து பெருங்கனலாகிக் கொழுந்து விட்டெரிகிறது. இந்த வரலாற்றை அற்புதமான முறையில் வர்ணிக்கும் அத் திருப்பாடல் பின்வருமாறு:

"முன்னம் அவனுடைய
நாமம்கேட் டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம்கேட் டாள்
பின்னை அவனுடைய
ஆரூர்கேட் டாள்
பெம்மான் அவனுக்கே
பிச்சியா னாள்
அன்னையையும் அத்தனையும்
அன்றேநீத் தாள்
அகன்றான் அகலிடத்தார்
ஆசாரத் தைத்
தன்னை மறந்தான்தன்
நாமங்கெட் டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன்தா ளே!"

பாடலை ஒருமுறை முழுவதும் பாடி விட்டு, மீண்டும் ஆரம்பத்திலிருந்து அபிநயம் பிடிக்கத் தொடங்கினாள் சிவகாமி. அப்போது பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து பெண் உள்ளத்தில் அரும்பி மலர்ந்த காதல் உணர்ச்சியே ஓர் உருக்கொண்டு அவர்கள் முன்னால் நிற்பது போல் தோன்றியது. முதன் முதலில் ஓர் இளம் கன்னிகையின் இதயத்தில் காதல் உதயமாகும் போது அதனுடன் பிறக்கும் நாணங்கலந்த இன்பப் பெருக்கை அவர்கள் கண்முன்னால் பார்த்தார்கள். காதல் வளர்ந்து வரும் ஆரம்ப தினங்களில் காதலனுடைய பெயரைக் கேட்கும்போதும், அவனுடைய இருப்பிடம் முதலிய வரலாறுகளை அறியும் போதும், அவனுடைய குணாதிசயங்கள் வர்ணிக்கப்படும்போதும் பெண் இதயத்தில் பொங்கித் ததும்பும் ஆனந்த குதூகலத்தையும் அதனால் அவளுடைய மேனியில் ஏற்படும் அதிசயமான மாறுதல்களையும் பிரத்தியட்சமாகப் பார்த்தார்கள். நாளடைவில் அந்தக் காதல் முற்றும் போது, எப்படி அது சித்தப்பிரமையின் சுபாவத்தை எய்திக் காதலியைப் பித்துப் பிடித்தவளாக்குகிறது என்பதையும், அந்த நிலையில் காதலுக்காகவும் காதலனுக்காகவும் பெண்ணானவள் எப்பேர்ப்பட்ட தியாகங்களையெல்லாம் செய்யச் சித்தமாகி விடுகிறாள் என்பதையும் கண்டார்கள். பெற்று வளர்த்த அன்னையையும் அப்பனையும் விட்டு விட்டுக் காதலனோடு புறப்படவும், காதலுக்குத் தடையாக நிற்கும் சமூக ஆசாரங்களையெல்லாம் புறக்கணித்து ஒதுக்கவும், ஊராரின் நிந்தனைகளையெல்லாம் பொறுத்துக்

கொள்ளவும் எவ்வாறு அந்தப் பெண் மனந் துணிகிறாள் என்பதையும் நேருக்கு நேரே பார்த்தார்கள்.

வாக்கினால் விவரிக்க முடியாத மேற்சொன்ன உணர்ச்சிகளையெல்லாம் — பெண் உள்ளத்தில் படிப்படியாகக் காதல் முதிர்ந்து வரும் அபூர்வ பாவங்களையெல்லாம் — சிவகாமி அபிநயத்தில் காட்டி வந்த போது, சபையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, "இது சாமானிய மனித வர்க்கத்துக்குரிய காதல் அல்ல; — அண்ட பகிரண்டங்களுக்கெல்லாம் இறைவனாகிய எம்பெருமானுக்கே உரிய தெய்வீகக் காதல்!" என்று தோன்றியது.

அவ்வளவுடன் நின்று விடவில்லை. காதல் பரிபூரணமடைவதற்கு இன்னும் ஒரு படி மேலே போக வேண்டியிருக்கிறது. காதலி தனக்காக இவ்வளவெல்லாம் தியாகங்களைச் செய்ய சித்தமாயிருந்தும், அந்தத் தெய்வக் காதலன் திருப்தியடையவில்லை. மேலும் அவளைச் சோதனைக்குள்ளாக்க விரும்பித் திடீரென்று ஒரு நாள் மறைந்து விடுகிறான். இதனால் சோகக் கடலிலே மூழ்கிய காதலி வெளியுலகை அடியோடு மறந்து விடுகிறாள். தன்னையும் மறந்து விடுகிறாள். தன் பெயரைக் கூட மறந்து விடுகிறாள். "உன் பெயர் என்ன?" என்று யாரேனும் கேட்டால், காதலனின் திருநாமத்தைச் சொல்லுகிறாள்! அத்தகைய மன நிலைமையில் மறுபடியும் தெய்வக் காதலன் அவள் முன்னால் தோன்றும் போது, காதலியானவள் தான் செய்யாத குற்றங்களுக்காகத் தன்னை மன்னித்து விடும்படி கோரி அவனுடைய திருப்பாதங்களில் பணிகிறாள்!

படிப்படியாக மேற்கூறிய உணர்ச்சிகளையெல்லாம் முகபாவத்திலும் கண்களின் தோற்றத்திலும் அங்கங்களின் அசைவிலும் சைகைகளிலும் காட்டிக் கொண்டு வந்த சிவகாமி, கடைசியில்,

"தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே!"

என்ற அடியைப் பாடி விட்டுக் கூப்பிய கரங்களுடன் அடியற்ற மரம் போலத் தரையில் விழுந்தாள்!

உடனே சபையில் "ஹா! ஹா ஹா!" என்ற குரல்கள் எழுந்தன. 'சிவகாமி!' என்று கூவிக்கொண்டு ஆயனர் எழுந்தார். எழுந்து அவள் கிடந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடினார். அவரைப் பின்தொடர்ந்து மாமல்லரும் பரபரப்புடன் சென்றார்.

ஆயனர் சிவகாமி கிடந்த இடத்துக்கு அருகில் தரையில் உட்கார்ந்தார். அவருடைய அங்கங்களெல்லாம் பதறின. அதைப் பார்த்த மாமல்லர், தரையில் உதிர்ந்து கிடக்கும் மென்மையான மலர்களை அடியார் ஒருவர் இறைவனுடைய அர்ச்சனைக்காகப் பொறுக்கும் பாவனையுடனே சிவகாமியைத் தமது இரு கரங்களாலும் மிருதுவாக எடுத்து ஆயனரின் மடியின் மீது இருத்தினார்.

அதற்குள்ளாக அங்கிருந்தவர்களில் பலர் எழுந்து ஓடி வந்து அம் மூவரையும் சுற்றிக் கொண்டார்கள். சிலர் "தண்ணீர்! தண்ணீர்!" என்றார்கள். சிலர் "விசிறி! விசிறி!" என்றார்கள்.

"வழியை விடுங்கள்!" என்று ஒரு குரல் கேட்டது. நாவுக்கரசர் பெருமான் தமது ஆசனத்திலிருந்து எழுந்து சிவகாமியின் அருகில் வந்தார். ஆயனரின் மடியில் தலை வைத்து உணர்வின்றிப் படுத்திருந்த சிவகாமியின் முகத்தை அவர் கருணை ததும்பும் கண்களினால் பார்த்தார். தமது திருக்கரத்தில் கொண்டு வந்திருந்த திருநீற்றை அவளுடைய நெற்றியில் இட்டார்.

சற்று நேரம் அந்த மண்டபத்தில் ஊசி விழும் சப்தம் கேட்கும்படியான மௌனம் குடி கொண்டிருந்தது.

காலை நேரத்தில் கருங்குவளையின் இதழ் விரிவது போல சிவகாமியின் கண்ணிமைகள் மெதுவாகத் திறந்தன.

திறந்த கண்கள் நாவுக்கரசரின் திருமுகத்தை முதலில் தரிசித்தன. தந்தையின் மடியில் படுத்தபடியே சிவகாமி இரு கரங்களைக் கூப்பி அம் மகா புருஷரைக் கும்பிட்டாள்.

"நீ மகராஜியாய் இருக்க வேணும், குழந்தாய்!" என்று வாகீசப் பெருமான் ஆசி கூறினார்.

அந்த ஆசியைக் கேட்ட சிவகாமியின் பவள நிற இதழ்களில் புன்னகையின் ரேகை தோன்றியது. அது தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தில் செவ்வாம்பல் பூவானது வெட்கத்தினால் தயங்கித் தயங்கி மடலவிழ்வது போல் இருந்தது.

பின்னர் அவளுடைய கருவிழிகள் இரண்டும், எதையோ தேடுவதைப் போல் அங்குமிங்கும் அலைந்து, கடைசியில் குமார சக்கரவர்த்தியின் திருமுகத்தைப் பார்த்ததும் அங்கேயே தங்கி விட்டன.

"அடிகள் எனக்குக் கூறிய ஆசி மொழி தங்கள் செவியில் விழுந்ததா?" என்று அக்

அமரர் கல்கி



கண்கள் மாமல்லரைக் கேட்டதுடன், அவருடைய குற்றங்களையெல்லாம் மறந்து மீண்டும் அவருடன் சிநேகமாயிருக்கச் சித்தமாயிருப்பதையும் தெரியப்படுத்தின.

மறுபடியும் நாவுக்கரசரின் திருக்குரல் கேட்கவே, சிவகாமி பூரண சுய உணர்வு வந்தவளாய் சட்டென்று எழுந்து நின்றாள். இவ்வளவு பேருக்கு நடுவில் தான் மூர்ச்சையாகி விழுந்ததை எண்ணி அவளுக்குப் பெரிதும் வெட்கமாயிருந்தது.

வாகீசர் கூறினார்:— "ஆயனரே! பரதக் கலையின் சிறப்பைக் குறித்து நான் படித்தும் கேட்டும் அறிந்திருக்கிறேன். ஆனால் அதனுடைய பூரண மகிமையையும் இன்றுதான் அறிந்தேன். என்னுடைய வாக்கிலே வந்த பாடலில் இவ்வளவு அனுபவமும் இவ்வளவு உணர்ச்சியும் உண்டென்பதை இதற்கு முன்னால் நான் அறியவில்லை. தங்கள் குமாரியினால் பரத சாஸ்திரமே பெருமையடையப் போகிறது. உண்மையாகவே அது தெய்வக் கலையாகப் போகிறது. இல்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் புரியும் இறைவனுக்கே அர்ப்பணமாக வேண்டிய அற்புதக் கலை இது!.....'

இவ்விதம் சுவாமிகளின் திருவாயிலிருந்து வெளியான அருள்மொழிகளை



அனைவரும் ஆவலுடன் பருகிக் கொண்டிருந்த சமயத்தில் வீதியில் குதிரையொன்று விரைவாக வரும் சப்தம் கேட்டது. அந்தச் சப்தம் மடத்தின் வாசலில் வந்து நின்றது. உடனே குமார சக்கரவர்த்தி மடத்தின் வாசற்படியை நோக்கிச் சென்றார்.

வாகீசர் அருகே சூழ்ந்து நின்றவர்களைப் பார்த்து, "நீங்களும் போகலாம்" என்று சமிக்ஞையால் கூற, எல்லாரும் தயக்கத்துடன் அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.

மாமல்லர் வாசற்படியின் அருகில் நின்று ஏவலாளன் ஒருவனுடன் ஏதோ பேசி விட்டு, உள்ளே வந்தார். நாவுக்கரசரை நோக்கிக் கைகூப்பி, "சுவாமி! மதுரையிலிருந்து தூதர்கள் ஏதோ அவசரச் செய்தியுடன் வந்திருக்கிறார்களாம். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்றார்.

"அப்படியே, குமார சக்கரவர்த்தி! தந்தைக்குச் செய்தி அனுப்பினால், அவருடைய அபிப்பிராயப்படியே நான் தென் தேசத்துக்கு யாத்திரை போவதாகத் தெரியப்படுத்தவேணும்!" என்றார்.

"ஆகட்டும் சுவாமி" என்று மாமல்லர் கூறி, ஆயனரைப் பார்த்து, "சிற்பியாரே! துறைமுகம் போய்ச் சேர்ந்ததும், சிவகாமியின் சௌக்கியத்தைப் பற்றிச் செய்தி அனுப்புங்கள். சில காரணங்களினால் நான் கொஞ்ச காலத்துக்குக் காஞ்சியை விட்டு வெளிக்கிளம்ப முடியாமலிருக்கிறது" என்றார்.

இவ்விதம் பேசி வருகையில் மாமல்லர் அடிக்கடி சிவகாமியை நோக்கி அவளிடம் நயன பாஷையினால் விடைபெற்றுக்

கொள்ள விரும்பினார். ஆனால், சிவகாமியோ ஆயனரின் பின்னால் குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தாள்.

எனவே, சிவகாமியிடம் சொல்லிக் கொள்ளாமலே மாமல்லர் புறப்பட வேண்டியதாயிற்று. போகும் போது, நாவுக்கரசர் பெருமான் அங்கிருப்பதைக் கூட அவர் மறந்து 'தட்' 'தட்' என்று அடி வைத்து நடந்து சென்றதானது, ஆத்திரங்கொண்ட அவருடைய மனநிலையை நன்கு பிரதிபலித்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் வாசலில் குதிரைகளின் காலடிச் சப்தமும், ரதத்தின் சக்கரங்கள் கடகடவென்று உருண்டோடும் சப்தமும் கேட்டன.

சிவகாமிக்கு அப்போது தன் உயிரானது தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியில் சென்று ரதத்தின் மேல் ஏறிக் கொண்டு செல்வது போல் தோன்றியது.

நாவுக்கரசரிடம் முடிவாக விடைபெற்றுக் கொண்டு ஆயனரும் சிவகாமியும் புறப்பட வேண்டிய நேரம் வந்த போது, பெருமான் ஆயனருக்குச் சமிக்ஞை செய்து அவரைப் பின்னால் நிறுத்தினார். முன்னால் சென்ற சிவகாமியின் காதில் விழாதபடி மெல்லிய குரலில் பின்வருமாறு கூறினார்:—

"ஆயனரே! உமது புதல்விக்குக் கிடைத்திருக்கும் கலை அற்புதக் கலை; தெய்வீகக் கலை. அதனாலேயே அவளைக் குறித்து என் மனத்தில் கவலை உண்டாகிறது. இத்தகைய அபூர்வமான மேதா விலாசத்தை இறைவன் யாருக்கு அருளுகிறாரோ, அவர்களைக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்குவதும் உண்டு. உமக்குத்தான் தெரியுமே? இந்த எளியேனை ஆட்கொள்வதற்கு முன்னால் இறைவன் எத்தனை எத்தனை சோதனைகளுக்கெல்லாம் ஆளாக்கினார்....."

சற்று முன்பு வரையில் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஆயனர் மேற்கூறிய மொழிகளைக் கேட்டுத் தலையில் இடி விழுந்தவர் போல் பதறி, "சுவாமி! இதென்ன சொல்கிறீர்கள்? மகாபுருஷராகிய தாங்கள் எங்கே? அறியாப் பெண்ணாகிய சிவகாமி எங்கே? அவளுக்கு ஏன் சோதனைகள் வர வேண்டும்? தங்களுடைய திருவாக்கில் இப்படி வந்து விட்டதே!" என்றார்.

"ஆயனரே! இரைந்து பேச வேண்டாம். சிவகாமிக்கு இது தெரிய வேண்டியதில்லை. ஆனால் நீர் முன்ஜாக்கிரதையாக இருப்பது நலம். உமது அருமைக் குமாரியைப் பார்க்கும்போது அவளுக்கு ஏதோ பெரிய துக்கம் நேரப் போகிறது என்று என் உள்ளம் சொல்லுகிறது. ஆஹா! இத்தகைய வருங்கால திருஷ்டியை இறைவன் எதற்காக எனக்கு அளித்தார்!" என்று கூறி வருகையில் நாவுக்கரசரின் கண்களில் கண்ணீர் மல்கிற்று.

"ஆனாலும் நீர் தைரியமாக இருக்க வேண்டும். இந்த உலகில் பணி செய்து கிடப்பதே நமது கடன். நம்மைத் தாங்கும் கடன் கருணை வடிவான இறைவனுடையது. உமது பணியைச் செய்து கொண்டு நீர் நிம்மதியாக இரும். எத்தனை சோதனைகள் நேர்ந்தாலும் மனம் கலங்க வேண்டாம். அன்பர்களுக்கு முதலில் எவ்வளவு துன்பங்களை அளித்தாலும் முடிவில் இறைவன் ஆட்கொள்வார்."

இவ்விதம் கூறி விட்டு நாவுக்கரசர் பெருமான் மடத்துக்குள்ளே சென்றார். அன்று மாலை அந்தத் திருமடத்துக்குள்ளே பிரவேசித்த போது உள்ளம் நிறைந்த குதூகலத்துடன் பிரவேசித்த ஆயனச் சிற்பியாரோ, இப்போது இதயத்திலே பெரியதொரு பாரத்துடன் வெளியேறினார். அபூர்வமான வேலைப்பாடுகளுடன் அவர் சிலை வடிவமாக்கிக் கொண்டிருந்த பெரியதொரு பாறாங்கல்லைத் தூக்கி அவருடைய இதயத்தின் மேலே யாரோ வைத்து விட்டது போலிருந்தது.

(தொடரும்)

பெண்குழந்தை என்றால் சந்தோஷம்!

●● பெண் குழந்தை பிறந்தால் பலரும் வருத்தப்படும் இந்தக் காலத்தில், மாயவரத்துக்கு அருகிலுள்ள கதிராமங்கலம் மட்டும் விதிவிலக்கு. பிறந்தது பெண் என்றால் அவர்களுக்கு ஏக சந்தோஷம். காரணம் என்ன? அங்கு பட்டு நெசவு அதிகம்; அதில் பெண் குழந்தைகளுக்கான வேலை வாய்ப்பும் அதிகம் என்பதுதான். ஆக, உழைக்கிற பெண்களைப் பெற்றோர் பாரமாகக் கருதுவதில்லை!

— செல்லூர் கணேசன், கோவில்பத்து.

வைகாசி பொறந்தாச்சு

கிராமியச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டிருக்கும் பல படங்கள் வெற்றி பெற்றுள்ளன.

எனவே அதே மாதிரியான கிராமியச் சூழ்நிலை.

நாடோடி இசையும், நவீன சங்கீதமும் ஒன்று கலந்து பாடல்கள் அளிக்கப்படும் போது பாமர ரஞ்சகமாகப் பலத்த வரவேற்புப் பெறுகிறது.

இதிலும் அதே வகையான இசையில் பத்து பாடல்கள்!

கதைக்குச் சம்பந்தமில்லாத ஒரு தலைப்பை முடிவு செய்துவிட்டு, அதை நியாயப்படுத்த முயற்சி செய்வது வழக்கமாகிவிட்டது.

ஒரு மஞ்சள் நீராடல் பாடலில் 'வைகாசி பொறந்தாச்சு' என்கிற வரியை இடம் பெறச் செய்து, தலைப்பை நியாயப்படுத்த முயற்சி...

எத்தனை பேர் சூழ்ந்து கொண்டு, எத்தனை வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்கினாலும் அவர்கள் அனைவரையும் புரட்டிப் புரட்டியெடுப்பது கதாநாயகனின் அடிப்படைத் தகுதி.

இதிலும் அத்தகைய சண்டைகள் — ப்ளஸ் டூ மாணவனான கதாநாயகனைத் தாக்க வருகிறவர்கள் உரமேறிப் போன முரட்டு ஆட்கள்! (இப்படி எதிர்பாராத தாக்குதலுக்கு உள்ளாகிவிடும் அந்த இளைஞனின் பார்வையில் எம். ஜி. ஆர். படப் போஸ்டர் ஒன்று தென்பட, உடனே அவன் மனக்கண்ணில் — ஏன், திரையிலும்தான் — எம். ஜி. ஆர். சிலம்பம் சுழற்றிச் சண்டையிடும் காட்சி ஓட, அவன் உத்வேகம் பெற்றுச் சண்டையிட, அதனையடுத்து ரஜினி, கமல் என்று வரிசையாகத் தெரிய, அவன் அந்தந்த பாணிகளில் சண்டையிட, அந்தக் காட்சிகள் அவன் மனக்கண்ணில் தோன்றுவதற்குப் போதிய அவகாசம் அளித்து அடிக்க வந்தவர்கள் காத்திருக்கிறார்கள்!)

பெண்கள் கூட்டம் சூழக் கதாநாயகி அம்மன் கோயில் வாசலில், ''ஆத்தா... ஆத்தா...'' என்று பாடிக் கொண்டு ஆடுவது வெற்றிப் படங்களுக்கு மற்றும் ஒரு முக்கிய அம்சம்!

உச்சகட்டக் காட்சியே அப்படியொரு நடனத்தைத் தொடர்ந்துதான்.

சட்டம், போலீஸ் என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல் அடியாட்களைக் கூப்பிட்டு, ''அவனைத் தீர்த்துக்கட்டிவிட்டு வா'' என்று உத்தரவிடுவதுதான் வில்லனுக்கு இலக்கணம்.

இப்படத்தின் வில்லனும் அதற்கு விலக்கு அல்ல.

முடிவில் அதர்மம் தோற்று தர்மம் ஜெயிக்க வேண்டும்.

ஜெயித்து விடுகிறது!

— சி. ஆர். கே.





லட்சிய

உனக்கு வரன் பார்க்கத் தொடங்குகிறேன். அதற்கு இது உதவும். அதனால்தான் வரவழைத்தேன்...''

''கேள்விப்பட்டிருக்கிறேன்... ஆனால் நீ... நீ... சிரமப்பட வேண்டியிருக்காது என்று நினைக்கிறேன்...''

''திவ்யா!'' பக்கவாட்டில் திரும்பி மகளின் முகத்தைப் பார்த்தாள் அகிலா.

அதில் எந்தவிதமான மாற்றத்தையும் காண முடியவில்லை.

''அப்ப... அப்படியானால்... திவ்யா, நீ யாரையாவது விரும்புகிறாயா?''

''ம்....''

''எவ்வளவு நாட்களாகப் பழக்கம்?''

''பழக்கமாவது...? அப்படியெல்லாம் எதுவும் கிடையாது! ரவி என் ஆபீஸில்தான் வேலை செய்கிறார். ஆபீஸிலும் டிபன் சாப்பிடுகிற இடத்திலும் பொதுவாகப் பேசுவதுடன் சரி. ஒரு வாரத்திற்கு முன்புதான் அவர், என்னிடம் தனிமையில் வந்து உனக்கு உங்களுடைய வீட்டில் திருமணம் செய்ய முற்பட்டால் நான் முதலில் அப்ளிகேஷன் போட விரும்புகிறேன். ஆட்சேபணை எதுவும் உண்டா?'' என்று கேட்டார்.

''நீ அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறியிருப்பாய்...''

''கிட்டத்தட்ட அப்படித்தான்.''

''சரி... அந்தப் பையனின் வீட்டு முகவரியை எழுதிக் கொடு. நான் போய் அவர்களைப் பார்த்துப் பேசி விட்டு ஜாதகம் வாங்கிக் கொண்டு வருகிறேன்.''

''உனக்குக் கண்டிப்பாக ஜாதகம் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று தோன்றுகிறதாம்மா... உன் கல்யாணம் அப்படிப் பார்த்துச் செய்யப்பட்டதுதானே...?''

''ஏன்...? அந்தப் பையனுக்கு ஜாதகம் பார்ப்பதில் நம்பிக்கை இல்லையா?''

''அது எனக்குத் தெரியாது. எனக்குத்தான் நம்பிக்கை இல்லை...'' திவ்யா எழுந்து குளியலறைப் பக்கம் சென்றாள்.

கையிலிருந்த மகாலிங்கபுரம் 'சார்ட்'டை மடித்து மேசையின் மீது போட்டு விட்டு யோசனையிலாழ்ந்தாள் அகிலா.

போட்டிக் கதை — 12

அன்று ஞாயிற்றுக் கிழமை. பகல் உணவை முடித்துக் கொண்டு தாயும் மகளும் முன் ஹாலுக்கு வந்தார்கள்.

மகாலிங்கபுரம் கோவிலிலிருந்து வரவழைத்திருந்த 'சார்ட்'டைக் கையிலெடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள் அகிலா.

''என்னம்மா இது...?'' என்றவாறே திவ்யாவும் தாயின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இதுவா... இது... நீ வேலையில் சேர்ந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டது இல்லையா...? நான் என்னுடைய அடுத்த கடமையைச் செய்யப் போகிறேன். அதாவது

கே. ஜெயலக்ஷ்மி

வேகம்

'உன் கல்யாணம் அப்படிப் பார்த்துச் செய்யப்பட்டதுதானே?' — திவ்யா கேட்ட கேள்வி அவளைப் பழைய நினைவுகளையெல்லாம் அசைபோட வைத்தது.

அகிலாவின் கல்யாணம் ஜாதகப் பொருத்தம் எல்லாம் பார்த்துப் பெரியவர்களால் நடத்தி வைக்கப்பட்டதுதான்.

மளிகைக் கடையில் கணக்கெழுதிக் கொண்டிருந்த கைலாசத்தின் மூத்த மகளாகப் பிறந்து விட்டு வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட ஆசைப்பட முடியுமா? கீழே மூன்று தங்கைகளும் ஒரு தம்பியும் இருந்தார்கள். அங்கே இங்கே உதவி கேட்டுப் பெற்று அகிலாவின் கல்யாணத்தை முடித்து வைத்தார் கைலாசம். அவள் கணவன் கணேசனுக்குச் சின்ன வீடு மட்டுமல்ல, பெரிய வீடும் இருந்த விஷயம் நான்கு வருடங்களுக்குப் பிறகுதான் அகிலாவுக்குத் தெரிந்தது. அதற்குள் திவ்யாவுக்கு மூன்று வயதாகி விட்டது. அடியும் உதையும் வாங்கிக் கொண்டு ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகத் தள்ளிக் கொண்டு வந்தாள். எப்படியோ ஏழு ஆண்டுகளைத் தள்ளி விட்டாள்! அவளால் கணேசனை மாற்றவே முடியவில்லை. இன்னொரு குழந்தைக்குத் தாயாகாமல் மட்டும்தான் சமாளிக்க முடிந்தது.

இதற்குள் கணேசனின் திருவிளையாடல்கள் உச்சக்கட்டத்துக்கு வந்து விட்டன. பெரிய வீட்டையும் சின்ன வீட்டையும் நடு வீட்டுக்கே கொண்டு வந்து விட்டான். மூன்று மனைவிகளை வைத்துக் காப்பாற்ற வருமானம் வேண்டாமா? ஆனால் அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. எல்லோருக்கும் எப்படிச் சோறு போடுவது ...? கையைப் பிசைந்தாள் அகிலா. கணவனிடம் கேட்ட போது 'நீதான் அழகாக இருக்கிறாயே... அதை வச்சுச் சம்பாதியேன். நான் கண்டுகொள்ள மாட்டேன்!' என்று சொல்லிக் கண்ணைச் சிமிட்டினான்.

'கடவுளே.....!' என்று தன் தலையில் அடித்துக் கொண்டாள் அகிலா.

அவளுள் ஒரு வைராக்கியம் உருவாயிற்று. திவ்யாவை அழைத்துக் கொண்டு வீட்டினின்றும் புறப்பட்டு விட்டாள்!

பிறந்த வீட்டில் பாரமாய் இருக்க விருப்பமின்றி பிழைப்பு தேடிச் சென்னைக்கு வந்து விட்டாள். அவளுடைய எஸ். எஸ். எல். சி. படிப்பு நர்ஸரிப் பள்ளி ஆசிரியையாக வேலை வாங்கிக் கொடுத்தது. நூறு ரூபாய் சம்பளம். திவ்யாவின் படிப்பு இலவசம். பள்ளியில் வேலை பார்த்துக் கொண்டே டைப்ரைட்டிங் கற்றுக் கொண்டாள் அகிலா. அதில் தேர்ச்சி பெற்றதும் ஒரு தனியார் கம்பெனியில் டைப்பிஸ்டாக வேலை தேடிக் கொண்டாள். வருமானம் கணிசமாக உயர்ந்தது. திவ்யாவையும் நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைக்கவும் முடிந்தது. தபால் மூலம் படித்துத் தன் தகுதியை உயர்த்திக் கொண்டு பதவி



மிலும் உயர்ந்தான்! வாழ்க்கை நிம்மதியாகக் கழிந்தது.

திவ்யாவும் நன்றாகப் படித்து வங்கி ஒன்றில் வேலைக்கும் சேர்ந்தாள். விவரம் புரிந்த வயதில் தன் தகப்பனாரின் தவறுகளையும் தாயின் துணிச்சலையும் எடை போட்டு மனத்தில் அசைபோட்டாள். தனக்கு ஒரு கௌரவமான வாழ்க்கைப் பாதையை ஏற்படுத்திக் கொடுத்த தாயின் மீது எல்லையற்ற பாசமும் நன்றியறிதலும் ஏற்பட்டன.

“இன்று என்னம்மா டிபன்...?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் திவ்யா.

''உனக்கு ரொம்பப் பிடிச்ச டிபன். உருளைக் கிழங்கு போண்டா!'' என்றாள் அகிலா.

''கொஞ்சம் அதிகமாகப் பண்ணும்மா'' என்றாள் திவ்யா கெஞ்சலாக.

''ஏனாம்...? உன் தோழிகள் யாராவது வருகிறார்களா?''

''ஆமாம்... ஆனால், தோழி அல்ல. தோழர்...''

''யார்... ரவியா...?''

''ஆமாம்மா. நீயே பார்த்துப் பேசிக் கொள்...''

''ரொம்ப நல்லதாப் போச்சு... ஒரு சந்தேகம். அவருடைய வீட்டில் ரொம்ப எதிர்பார்ப்பார்களோ...?'' என்று கவலையாகக் கேட்டாள் அகிலா.

''இருவருக்கும் ஒரே மாதிரி படிப்பு - ஒரே மாதிரி வேலை. சம்பளம் எல்லாம். அவருக்கும் அம்மா மட்டும்தான். எனக்கும் அம்மா மட்டும்தான். இருவருக்குமே வேறு கடமைகள் எதுவும் கிடையாது. அவர்கள் எதற்காகக் கேட்க வேண்டும்? நாம் எதற்காகக் கொடுக்க வேண்டும்? கல்யாணம் மட்டும் செய்து கொடுத்தால் போதும். மற்றதெல்லாம் நான் பேசியாகி விட்டது.''

எதுவுமே பேசத் தோன்றாமல் மகளின் முகத்தையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அகிலா.

படிப்பும் வேலையும்தான் திவ்யாவுக்கு இவ்வளவு தன்னம்பிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்ட போது அவளுக்குப் பெருமிதமாக இருந்தது.

“நமஸ்காரம்!'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள் அகிலா.

திவ்யாவும் ரவியும் நின்று கொண்டிருந்தார்கள்.

''வாப்பா! உட்கார். திவ்யா எல்லாம் சொன்னாள். ரொம்ப சந்தோஷம். ஒரு நாள் உங்கம்மா வந்து திவ்யாவைப் பார்த்து விட்டுமே...!'' என்று கனிவாகப் பேசினாள் அகிலா.

''ஓ! கண்டிப்பாக... அழைத்து வருகிறேன்...'' என்று பணிவாகக் கூறினான் ரவி.

இதற்குள் திவ்யா டிபன் — காப்பி கொண்டு வந்து விடவே மூவரும் டிபன் சாப்பிட்டுக் கொண்டே பேசினார்கள். பேச்சிலிருந்தே ரவியின் குணங்களை ஓரளவுக்குப் புரிந்து கொண்டாள் அகிலா. அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

அடுத்த ஞாயிறு அன்று தன் அம்மாவை அழைத்து வந்தான் ரவி. அந்தம்மாவுக்கும் திவ்யாவைப் பிடித்து விடவே திருமணத்தை நடத்தி விடுவதென்று இரு பெண்மணிகளும் தீர்மானித்தார்கள்.

ஒரு சம்பிரதாயத்திற்காகப் பேச்சை ஆரம்பித்தாள் அகிலா.

''என்னால் முடிந்ததைச் செய்கிறேன். ரொம்ப எதிர்பார்த்தால் என்னால்...''

''எனக்கு இருப்பது ஒரே பிள்ளை. அவனுடைய சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். உங்களுக்கு இருப்பதும் ஒரே பெண். நமக்குப் பிறகு எல்லாம் நம் குழந்தைகளுக்குத்தானே சேரப் போகிறது. அதனால் இப்போது நீங்க எதுவும் செய்ய வேண்டாம். கல்யாணத்தை மட்டும் நடத்திக் கொடுத்தால் போதும். அதில் பாதிச் செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன்...'' என்றார் ரவியின் அம்மா.

''ரொம்ப ஆச்சர்யமாக இருக்கிறது. நீங்கள் ரொம்ப முற்போக்கானவராகத்தான் இருக்கிறீர்கள்...''

''லௌகீக விஷயங்களில் நான் ரொம்ப முற்போக்கானவள்தான். ஆனால் வைதீக

"ஏம்பா ஸர்வர், சாப்பிட்ட பிறகு 'பில்'லுக்குப் பணம் கொடுக்கும் போது ஒவ்வொருத்தரிடமும் முதலாளி என்னமோ சொல்றாரே, என்ன?"

"அடுத்த தெருவுல அவரோட மகன் 'கிளினிக்' வெச்சிருக்கார்; அதைத்தான் சொல்றார்!"

— சீர்காழி வி. ரேவதி.





கேரள அரசின் தலைமைச் செயலாள ராகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் பெயர் பத்மா ராமச்சந்திரன். ஐம்பத்தைந்து வயதான இவர் கேரள அரசின் முதல் பெண் தலைமைச் செய லாளர். இதற்கு முன்பு இந்தியாவில் அசாம் மாநிலத்தில் திரிவேதி என்ற பெண்மணி ஏற்கெனவே பெண் தலை மைச் செயலாளராக இருந்திருக் கிறார். அவருக்கு அடுத்து இரண்டாவது பெண் தலைமைச் செயலாளர் பத்மா தான்! பத்மா நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

— என். ஆர். பாஸ்கரன்.

விஷயத்தில் நான்... நான்... பழைமைவாதி. அதனால் என் ஆசையையும் சொல்லி விடு கிறேன்...''

''சொல்லுங்கோ...!''

''ரவியின் அப்பா போய்ப் பதினைந்து வருடமாச்சு. அவரை என்னால் அழைத்து வர முடியாது. அவருடைய இடம் காலியா கத்தானிருக்க முடியும். ஆனால் திவ்யாவின் அப்பா உயிருடன்தான் இருக்கிறார் என்று ரவி சொன்னான். அவனுக்கு அப்பாதான் இல்லை. மாமனாராவது வரட்டுமே! எப்படி யாவது போய் அவரை அழைத்து வந்து தாரை வார்த்துக் கொடுக்கச் சொல்லுங் கள். புருஷன் — பெஞ்சாதிக்குள் வீம்பும் பிடிவாதமும் எதற்கு...? பெண்ணாகப் பிறந்தவர்கள்தான் பணிந்து போக வேண் டும். ஒரே பெண்ணின் திருமணத்துக்காக ஒரு தாய் இதைக் கூடவா செய்ய முடி யாது...?'' இருக்கையை விட்டு எழுந்து விட்டாள் ரவியைப் பெற்றவள்.

சிலையாக உட்கார்ந்திருந்தாள் அகிலா.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் படுக்கையில் அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டிருந்த அகிலா விடியற்காலையில் கண்ணயர்ந்து விட்டாள்.

ஏழு மணிக்குத் திடுக்கிட்டுக் கண் விழித்து அவசரம் அவசரமாகப் பல் தேய்த்து விட்டு அடுப்பங்கரைக்குள் நுழைந் தாள்.

ஆவி பறக்கும் காப்பியை அவள் முன் நீட்டினாள் திவ்யா.

''நீ சீக்கிரம் எழுந்து விட்டாயா...?'' என்று வினவியபடியே காப்பி டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டாள் அகிலா.

''ஆமாம்மா. சமையலை முடித்து விட்டேன். நீதான் தினமும் முன்னால் எழுந்து சமைக்க வேண்டுமா என்ன...? நானும் செய்யலாமில்லையா...! நீ போய்ச் சீக்கிரம் குளித்து விட்டு வா. சாப்பிட லாம்...'' என்றாள் திவ்யா.

இருவரும் சாப்பிட்டு விட்டுப் புறப்பட் டார்கள்.

''இரவு வண்டிக்கு பெங்களூருக்கு ஒரு டிக்கெட் வாங்கி வந்து விடு திவ்யா'' என் றாள் அகிலா.

''எதற்கு...?''

''உனக்குத் தெரியும். ரவியின் அம்மா சொன்ன போது நீயும் பக்கத்தில்தானே இருந்தாய்...?''

''அதற்கு அவசியமில்லை. இந்தக் கல் யாணத்தில் எனக்கு விருப்பமில்லை...''

''திவ்யா!''

''என்னை வற்புறுத்தாதேம்மா!''

''நீ ரவியை விரும்பவில்லை...?''

''விரும்பினேன்தான்! ஆனால் அதை விட உன் சுயமரியாதையை அதிகமாக விரும்புகிறேனே...! உன் உடம்பை விற்றா வது தன் பெரிய வீட்டையும் சின்ன வீட்டை யும் அவர்கள் பெற்ற பிள்ளைகளையும் நீ காப்பாற்றவேண்டும் என்று சொன்னவரின் கால்களில் நீ போய் விழுவதையோ அவர் கையால் நான் தாரை வார்த்துக் கொடுக்கப் படுவதையோ என்னால் விரும்பவே முடி யாது.''

''உன் எதிர்காலம் எனக்கு முக்கியம் திவ்யா... நான் ஒரு நடை பெங்களூர் போய் அவரைக் கெஞ்சிக் கேட்டுப் பார்க்கி றேன்...''

''எனக்காக நீ அதைச் செய்வதை நான் விரும்பவில்லை. அப்படி நீ போய் அவரை அழைத்து வந்தால் அப்போது நீ என்னை இங்கே பார்க்க முடியாது. பிறகு உன் இஷ்டம்மா...'' என்று சொல்லியபடியே வேகமாக பஸ் நிறுத்தத்தை நோக்கி நடந்தாள் திவ்யா.

அடுத்த தலைமுறையின் கொள்கை வேகத்தின் முன்பு தன் பலவீனங்கள் பொடிப் பொடியாக உதிர்வதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனாள் அகிலா.

அன்று அவள் வேலைக்குப் போக வில்லை!

நீங்கள் மிகவும் விரும்பி அணிந்திடும்

பட்டுச் சேலைகள்

20%

தள்ளுபடியுடன் வாங்கிட வாரீர்!



- தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை,
  350, பாந்தியன் சாலை,
  எழும்பூர், சென்னை-8.
- பட்டு மாளிகை,
  57, தேரடி, சேலம்-1.
- பவளம்,
  147, நேத்தாஜி சாலை,
  ஈரோடு-1.
- தாமரை பட்டு மாளிகை,
  314, 315, ராஜா தெரு,
  கோயம்புத்தூர்-1.
- பட்டு மாளிகை,
  36, வெங்கலக்கடைத் தெரு,
  மதுரை.
- அமுதசுரபி,
  12, 14, தேரடி கடைத்தெரு,
  திருச்சி-2.
- பட்டு மாளிகை,
  59-59-ஏ, வடக்கு ரதவீதி,
  திருநெல்வேலி டவுன்-6.
- ரேஷம் தாரா,
  சபீனா பிளாசா, முதல் மாடி,
  84, 85, இன்பேன்டரி சாலை,
  பெங்களூர்.
- குஷ்பூ,
  16, 17, புது மார்கெட்,
  திலக் சாலை, அபைட்ஸ்,
  ஐதராபாத்-1.

பட்டு இரகங்கள் கோ-ஆப்டெக்ஸின் இதர விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

DIPR/1455/MS/90/ET

அம்மாவைப் போலவே...

நித்யா படுசுட்டிப் பெண். அவளுக்கு மூன்றரை வயது தானாகியிருந்தது. நல்ல வளர்த்தியினால் ஐந்து வயது மதிக்கலாம். அவளது புத்திகூர்மைக்குப் பதினைந்து வயது என்று சொல்லலாம். அத்தனை அதீதமானதொரு கெட்டிக்காரத்தனம் அவளுக்கு. நித்யாவின் பெற்றோர் இருவரும் நிறையப் படித்தவர்கள். பண்பில் ஊறினவர்கள்; தங்கள் அருமைப் பெண்ணைப் புதுமைப் பெண்ணாக வளர்க்க ஆசைப்பட்டனர். அதை ஓரளவு நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அதிலும் பூமாதான் மிகவும் கண்டிப்புக்காரி. பாலாஜி தன் பெண்ணைக் கொஞ்சிக் கொஞ்சியே வளர்த்துக் கொண்டிருந்தான். நித்யாவை மிக உயர்ந்த நர்சரி ஸ்கூலில் சேர்த்திருந்தார்கள். காலையில் அவளுக்கு பியானோ டியூஷன். மதியம் ஒரு மணி வரை பள்ளியில் படிப்பு. பிறகு ஒய்வு — மூன்று மணி வரை தூக்கம்.

மாலை டிபனுக்குப் பிறகு பாட்டு டீச்சர் வந்து அரை மணி நேரம் கற்றுக் கொடுப்பாள். பின்பு பீச்சில் இரண்டு மணி நேரம் விளையாடுவார்கள். இரவு சாப்பிடும்போது காலையிலிருந்து அவள் படித்ததையும், பார்த்ததையும், பாடினதையும், விளையாடியதையும் பற்றிப் பூமா விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வாள்.

''பூமா! குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி சின்னக் குழந்தையின் சின்ன மூளையில் இத்தனை விஷயங்களையும் திணிக்கத்தான் வேணுமா?'' என்று பாலாஜி பூமாவைத் தனிமையில் கேட்பதுண்டு.

''உஸ்! அவள் காதில் படும்படி சொல்லாதீர்கள். இன்னும் ஏதேனும் சொல்லிக் கொடுத்தால் கூட அவள் மூளை ஏற்றுக் கொள்ளும்!'' என்று மெதுவாகச் சொல்வாள் பூமா.

ராமப்ரியா

பூமா நான்கு வருட இடைவெளிக்குப் பிறகு கர்ப்பமானாள். நாலு மாதங்கள் வரை தன் வயிறு முன்னுக்கு வருவதை நித்யாவுக்குத் தெரியாமல்தான் சாமர்த்தியமாக மறைத்து வந்தாள். ஆனால் அம்மாவிடம் ஒரு மரியாதை கலந்த பயமும் அப்பாவிடம் வெகு சுவாதீனமும் கொண்டிருந்த நித்யா, ரகசியமாகத் தன் தந்தையிடம், ''அப்பா! அம்மாவுக்கு டம்மி மட்டும் பெரியதாக இருக்கு! வயத்து வலியோ என்னமோ! டாக்டர்கிட்டே அழைச்சுண்டு போப்பா!'' என்று சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு கவலையுடன் கேட்டாள். குழந்தைக்கு, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தான் பாலாஜி.

''பூமா! உன் பெண் என்னென்னவோ கேட்கிறாள். நீயே பதில் சொல்லு!'' என்று சொல்லி நழுவினான்.

பூமா ஒரு வினாடி திகைத்தாலும் பிறகு சமாளித்துக் கொண்டாள்.

''கண்மணி! அம்மா வயத்திலே ஒரு குட்டிப் பாப்பா இருக்கு! உன்னோடு விளையாடுவதற்குக் கொஞ்ச நாளில் வரும்!'' என்று மட்டும் சொன்னாள்.

குழந்தை அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''ஹைய்யா! ஷீலா, ராணி, ரூபா எல்லாருக்கும் இருக்கிற மாதிரி எனக்கும் தங்கைப் பாப்பாவா?'' என்றாள் மிதமிஞ்சிய மகிழ்ச்சியோடு.

''தங்கைப் பாப்பான்னு சொல்ல முடியாது. தம்பிப் பாப்பாவாகவும் இருக்கலாம்! பிறந்தப்புறம்தான் தெரியும். அதான் குட்டிப் பாப்பான்னு சொன்னேன்!'' என்றாள் பூமா அசடு வழிய.

''எப்படிம்மா தங்கைப் பாப்பாவா தம்பிப் பாப்பாவான்னு கண்டுபிடிப்பே? ஓஹோஹோ! எனக்குத் தெரிஞ்சு போச்சு!'' என்று கேள்வியைக் கேட்டு, பதிலையும் தானே சொல்லிற்று அந்தக் கெட்டிக்காரக் குழந்தை.

பூமாவுக்குத் திக்கென்றது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "என்ன தெரிஞ்சுது!" என்றாள் சற்று கோபத்துடன்.

"நீ சிங்கப்பூர் போன போது எனக்கு வாங்கி வந்திருக்கியே, கிராப் பண்ணி அரை நிஜார் ஷர்ட்டோட பொம்மை, அதைப் போல பிறந்தா தம்பிப் பாப்பா! கவுன் போட்டுண்டு, என்னை மாதிரி வாங்கி வைத்திருக்கயே அந்த மாதிரி பிறந்தா அது தங்கைப் பாப்பா! சரிதானே!"

பூமா தன் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். நாட்கள் மாதங்களாக ஓடின. "வரவர அம்மா டம்மி பயங்கரமா பெரிசா இருக்கு. எங்க ஸ்கூல் ப்ரெண்ட்ஸ்கிட்ட சொன்னேன். 'பயப்படாதே! எங்கம்மாவுக்கும் இப்படித்தான் இருந்துதுன்னு சொன்னா. ஆஸ்பத்திரிக்குப் போய்க் குழந்தையோட வந்துடுவான்னு சொன்னா!" என்று ஒரு நாள் நித்யா சொன்ன போது.

'இந்தக் குழந்தையை வைத்துக் கொண்டு இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாமோ?' என்று கூட பாலாஜியும் பூமாவும் நினைத்துக் கொண்டார்கள்.

குழந்தைக்கு ஸ்கூல் இருந்ததால் பூமாவின் அம்மாவே ஒத்தாசைக்கு வந்திருந்தாள். பூமாவுக்குப் பிரசவ வலி எடுத்த போது நல்ல வேளையாக நித்யா ஸ்கூலுக்குப் போயிருந்தாள். பாலாஜிக்கு போன் பண்ணி விட்டு, தயாராய் வைத்திருந்த சாமான்களை எடுத்துக் கொண்டு பூமா தன் தாயுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்.

பூமாவின் அம்மா ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி, ஸ்கூலிலிருந்து வரும் குழந்தைக்கு பிளாஸ்கில் பால், டிபன், ராத்திரி சாப்பாடு எல்லாம் தயாரித்து விட்டாள்.


பூமாவுக்கு ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்தது. பாலாஜி மகிழ்ச்சியோடு தன் வீட்டுக்கு வந்து, தன் பெண் நித்யாவை அழைத்துக் கொண்டு திரும்பவும் மருத்துவமனைக்குச் சென்றான். ஆரோக்கியமாக எப்பொழுதும் பம்பரமாகச் சுற்றும் சுறுசுறுப்புள்ள தன் அம்மாவை வெளுத்துப் பலஹீனமாக வெள்ளைப் போர்வையில் பார்க்க நித்யாவுக்குக் கஷ்டமாக இருந்தது. பூமா தன் அருமைப் பெண்ணைப் பார்த்துக் கஷ்டப்பட்டுச் சிரித்தாள்.

"நித்யா! வாடி கண்ணே! தம்பிப் பாப்பாவைப் பார்த்தாயா?" என்று தொட்டிலைக் காட்டினாள்.

"நான் ஒண்ணும் பார்க்க வேண்டாம். நாட்டி பாய்! உன்னை எவ்ளோ கஷ்டப்படுத்திட்டான்!" என்று அம்மாவைத் தடவிக் கொடுத்தாள் நித்யா.

"அப்படியெல்லாம் பேசக் கூடாது கண்ணே! அவன் உன்னை அக்கான்னு கூப்பிடுவானே! நீதானே அவனுக்கு டிரஸ் பண்ணி விட்டு, பால் கொடுத்து ஸ்கூலுக்கெல்லாம் அழைச்சுண்டு போகணும்!" என்றாள் பூமா ஹீனமாக.

ஒரு நிமிடம் கர்வம் உண்டாயிற்று. "தம்பிப் பாப்பாவை பார்க்கிறாயா?" என்று நர்ஸ் கேட்டாள். அரை மனதாக 'உம்' என்றாள் நித்யா. தொட்டிலைப் பிடித்துக் கொண்டாள். நர்ஸ் குழந்தையின் போர்வையை





மன்னர்: அமைச்சரே! இவரது புலமையை மெச்சுகிறேன்... இவருக்கு ஏதாவது பரிசு கொடுத்து, சகல மரியாதையுடன் அனுப்பி வையுங்கள்!

அமைச்சர்: மன்னா! இவர் கவிஞர் அல்ல; நமது ஒற்றர் படைத் தலைவர். இவ்வளவு நேரம் நமது பகையரசனின் படை வலிமையைத்தான் அப்படி வர்ணித்துச் சொன்னார்.

— சென்னை. அதிரதன்.

விலக்கி விட்டுக் குழந்தையை எடுக்கப் போனாள். குழந்தை மலஜலம் கழித்திருப்பதைப் பார்த்தவள், 'ச்சு ச்சு ச்சு' என்று சொல்லியபடி கீழே கட்டியிருந்த துணிகளை எடுத்து விட்டு, பஞ்சை ஈரத்தில் நனைத்து, குழந்தையின் காலைத் தூக்கிச் சுத்தம் செய்தாள். நித்யா கண் கொட்டாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'இதுதான் தம்பிப் பாப்பாவா? இந்த ரகசியம் தனக்குத் தெரியவில்லையே.' பூமா பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''அம்மா, அசிங்கம், அசிங்கம்! தம்பிப் பாப்பாவுக்கு...'' என்று ஆரம்பிப்பதற்குள் ''உஸ்!'' என்று தன் சக்தியையெல்லாம் திரட்டிப் பெண்ணை அதட்டினாள்.

''நீங்கள் நித்யாவை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போங்கள். அப்புறம் ஆயிரம் கேள்விகள் கேட்டு விடுவாள். அவளுக்கு விவரமாகப் பதில் சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள்!'' என்றாள் பூமா. பாலாஜி குழந்தையுடன் வெளியேறினான்.

அருகில் நின்ற பூமாவின் தாயார், ''உன் உடம்பு நிலையை மீறி ஏன் கத்தறே? இன்னும் கொஞ்ச நேரம் நித்யாவும் அவள் அப்பாவும் இருந்திருக்கலாம்'' என்றாள்.

''ஆமாம்! இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசத்தைப் பற்றி ஒரு லெக்சரே பண்ணி விடுவாள் உன் பேத்தி. இதுவரை அவள் ஆண் குழந்தைகளை உடைகள் ஒன்றும் போடாமல் பார்த்ததில்லை. அதனால்தான் விபரீதக் கேள்விகள் கேட்காமலிருக்கட்டும்னு அனுப்பி விட்டேன்!'' என்றாள்.

பூமாவின் அம்மா மோவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள். ''அதிசயமாத்தான் நீ வளர்க்கிறே! அரச பரசலா இலை மறைவு காய் மறைவா எல்லாம் தான் குழந்தைக்குத் தெரியணும். குழந்தையை ரிஷ்ய சிருங்கராட்டமா வளர்த்தியானால் பின்னால் கஷ்டப்படுவே. இதென்ன மூடி மறைவு. எல்லாமே புதுமையாகத்தான் இருக்கு!'' என்றாள்.

வீட்டுக்கு வந்த பின்னர் பூமா குழந்தைக்கு இடுப்பின் கீழே ஒட்டகத்தின் முதுகு மாதிரி ஒரு மூட்டையையே கட்டி வைத்திருந்தாள்! நித்யா ஸ்கூலுக்கு போன பிறகு சுத்தம் செய்து குளிப்பாட்டி மீண்டும் ஒட்டகத்தின் முதுகு தயாராகி விடும்.

குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது அறைக் கதவைச் சாத்திக் கொண்டு கொடுத்து விட்டுத்தான் திறப்பாள் பூமா.

பூமா சற்று நடமாட ஆரம்பித்த பிறகு நித்யாவின் அறைக்குள் வந்தாள். ஒரே களேபரம். பொம்மைகள் சிதறிக் கிடந்தன. அவை எல்லாமே விலை உயர்ந்த மேல் நாட்டுப் பொம்மைகள். விலையுயர்ந்த உடைகளில் நிஜக் குழந்தை மாதிரி தோற்றம் அளித்துக் கொண்டிருந்த பொம்மைகளெல்லாம் உடைகளே இல்லாமல் இடுப்புக்குக் கீழே மூட்டையாக வெள்ளைத் துணியுடன் காட்சியளித்தன.

''நித்யா! என்னடி இது உன் அறையை இவ்வளவு களேபரமாக வச்சிண்டு இருக்கே? எவ்வளவு விலையுயர்ந்த பொம்மைகள்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு!'' என்று கத்தினாள் பூமா.

''ஸாரி மம்மி! தம்பிப் பாப்பா மாதிரியே நானும் எல்லாப் பொம்மைகளையும் டெகரேட் பண்ணப் போறேன். ஏன் மம்மி தம்பிப் பாப்பாவுக்கு ஏன் கதவைச் சாத்திண்டு பால் கொடுக்கிறே! என் பொம்மைக்குக்கூட நீ சிங்கப்பூர்லேர்ந்து பீடிங் பாட்டில் வாங்கி வைச்சிருக்கே! பீடிங் பாட்டிலே இல்லாமே எப்படிப் பால் கொடுக்கறே!'' என்று அக்கறையோடு கேட்டாள் அதீத அறிவுள்ள நித்யா.

''அதெல்லாம் உனக்கு இப்பவே தெரிந்து நீ பொம்மைகளைக் குழந்தையா பண்ண வேண்டாம். பாடத்தைப் படி. பாட்டைப் பாடு. விளையாடு!'' என்று திசை திருப்பப் பார்த்தாள் பூமா.

அன்று நித்யாவின் குளியலறையில் எட்டிப் பார்த்தாள் பூமா. குழந்தைக்குத் தேய்க்கிற மாதிரி எண்ணெய்க் கிண்ணம், ஒரு தட்டில் பயத்தம் பொடி. சோப் எல்லாம் அந்தக் குளியலறையில் இறைந்து கிடந்தன. 'இதெல்லாம் என்னடி கூத்து?' என்று அதிசயித்தாள் பூமா.

''பாட்டி தம்பிப் பாப்பாவைக் குளிப்பாட்டும் போது நீ ஜலம் விடுகிறே இல்லை. அதே மாதிரி நானும் என் பொம்மையைக் குளிப்பாட்டுவேன். ஆயா தண்ணி விடுவாள் பார்க்கிறாயா?'' சபக்கென்று குளியலறையில்



ஜலதோஷம் பறந்து போச்சு!
புதிய 15 கிராம்
யூக்கலிப்டஸ் அடங்கிய அமிர்தாஞ்சன் கோல்ட் ரப் குழந்தைகளின் மென்மையான சருமத்திற்கு மிகவும் இதமானது... அன்னையின் அன்பான அரவணைப்பைப் போல...
Amrutanjan's Cold Rub
QUICK RELIEF FROM COLDS
அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
ஜலதோஷத்திலிருந்து துரித நிவாரணம்
HTA 7351



சரியான வகையில் கட்டப்பட்ட ஒரு வீட்டிற்கு சிறந்த முறையில் அமைக்கப்பட்ட ஒரு தண்ணீர்த் தொட்டி தேவை
நம்மடி பாலிமேர்ஸ் தயாரிக்கும் ஜி & பி தண்ணீர்த் தொட்டிகள் மற்றும் மேல் மட்டத் தொட்டிகள்
G&P Good & Proper
நம்மடி பாலிமெர்ஸ் (பி) லிமிடெட்,
G&P தண்ணீர் தொட்டிகள் வற்றாத நீர் ஊற்றுகள்
உங்கள் அருகாமையில் உள்ள அங்கீகாரம் பெற்ற G&P டீலரை அணுகவும்.



"சே! அரசாங்கத்திலே இலவச மின்சாரம் தந்தும் கூட விவசாயம் பண்ண முடியலை!"

"ஏன்?"

"இலவச நிலம், இலவச பம்ப்செட் தரல்லியே!"

— வேதபுரி. எஸ். இரமேஷ்.

காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். பொம்மையைக் குப்புறப் போட்டு, நிமிர்த்திப் போட்டு, கையால் தொப் தொப்பென்று தேய்த்து 'சமர்த்துக் கண்ணு! அழாதேடா! இதோ ஆச்சு' என்று சொல்லி வெகு ஜாக்கிரதையாகப் பொம்மையை டவலில் சுற்றித் தன் கட்டிலில் போட்டாள் நித்யா.

'சமர்த்தா தூங்கு! உனக்குப் பால் இடையாது. எனக்கு எப்படி கொடுக்கிறதுன்னு தெரியலை!' என்று சொல்லி விட்டு, கதவைச் சாத்திக் கொண்டு வந்தாள். பூமாவுக்குப் பிரமிப்பு தாங்கவில்லை.

இந்தப் பெண்ணை எப்படிக் கண்டிப்பாக வளர்த்தாலும் எல்லாம் தானே அதீத அறிவினால் தெரிந்து கொண்டு விடுகிறது. இதில் என்ன மூடுமந்திரம் வேண்டிக் கிடக்கிறது. அந்த நாளில் தம்பி தங்கைகளுடன் வளரவில்லையா? ஆனால் இந்தக் காலத்து குழந்தைகளுக்கு — அதுவும் நித்யாவுக்கு — இருக்கிற ஐக்யூ அப்போ யாருக்கும் இல்லையே!" என்றும் வருந்தினாள்.

அன்று லீவு நாள். சாப்பாடெல்லாம் முடிந்து விட்டது. சின்னக் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. வேலையையெல்லாம் முடித்து விட்டுப் பூமாவின் அம்மா குழந்தையின் அருகில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பூமாவும் பாலாஜியும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

"நித்யா எங்கே பூமா!" என்று கேட்டான் பாலாஜி.

"அவள் அறையில் விளையாடிக் கொண்டிருக்கிறாளோ என்னமோ! சின்னக் குழந்தை பிறந்த பிறகு தன் பொம்மைகளைத் தன் குழந்தையாகக் கற்பனை பண்ணிக் கொண்டு என்னவோ வேண்டாத விளையாட்டெல்லாம் அவள் விளையாடுகிறாள். அவளது மிதமிஞ்சிய கெட்டிக்காரத்தனம் வேதனையைத் தான் கொடுக்கிறது!" என்று அலுத்துக் கொண்டாள் பூமா.

"அவளிடமும் பெண்மைக் குணம் இருக்கிறதல்லவா? அவளுக்கு ஒன்றுமே தெரியக்கூடாதென்று நீ மூடி மூடி மறைக்கிறாய். ஆனால் அவள் தானாகச் சிரமப்பட்டுத் தெரிந்து கொண்டு, பொம்மை உலகில் அவற்றைச் செய்து மகிழ்கிறாள்!"

"பெரிய மனுஷி என்ன பண்ணுகிறாள் பார்ப்போம்!" என்று கூறியபடியே பூமா மெதுவாக, சப்தம் போடாமல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். பாலாஜியும் அவள் தோள்களைப் பிடித்தபடியே எட்டிப் பார்த்தான். ஜட்டியுடன் குழந்தை நித்யா மொழுமொழுவென்று திரும்பி உட்கார்ந்திருந்தாள். காலைச் சப்பணம் கொட்டிக் கொண்டு இருந்தாள். மடியில் ஒரு வயது மதிக்கக்கூடிய வெளிநாட்டுப் பொம்மை. அதன் தலையை இடது கையால் தூக்கி வைத்துக் கொண்டு, தாய்ப்பால் கொடுக்கும் நிலையில் இருந்தாள்!

"சாப்பிடு கண்ணா! தாய்ப் பாலில்தான் புரதச் சத்து இருக்கிறது. கீரை, பழம் கறிகாய்கள் நிறையச் சாப்பிடுவேன், பாலைக் குடிடா ராஜா!"

பூமாவுக்கு மூச்சே நின்று விடும் போல் ஆகி விட்டது! "நித்யா!" என்று மெதுவாகக் கூப்பிட்டாள். துளிக்கூட பயமில்லாமல் "இரும்மா! பாப்பாவுக்குப் பால் கொடுத்துட்டு வருகிறேன்!" என்றாள் நித்யா சாவதானமாக.

"ஏண்டி! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது? இதென்ன கன்றாவி. சட்டை போட்டுக்காமே கவுனையும் கழற்றி எறிந்து விட்டு இருக்கிறாயே!" என்று கத்தினாள் பூமா.

"கவுனைப் போட்டுண்டு எப்படி அம்மா பால் கொடுக்க முடியும்? டீ.வி.யிலே அந்த மாமி அப்படித்தானே பால் கொடுத்தா. அதைப் பார்த்துத்தானே நீயும் தம்பிப் பாப்பாவுக்குக் கொடுக்கிறே!" என்று முகத்திலடித்த மாதிரி நித்யா பதிலளித்தும், தன் பொம்மையிடம், "ஸாரிடா, இந்தம்மா எப்பவும் இப்படித்தான் கோவிச்சுப்பா! நீ குடிடா கண்ணு!" என்றாள்.

பூமாவுக்கு உலகமே சுற்றியது. குழந்தை தானென்று விடவும் முடியவில்லை. போனால் போகிறதென்று நினைக்கவும் முடியவில்லை. பாலாஜி சிரித்தான். "என்ன சிரிப்பு வேண்டியிருக்கு!" என்றாள் பூமா கோபமாக.

"நீ எப்படிக் கண்டிப்பாக வளர்த்தாலும் குழந்தை தன் போக்குப்படிதான் போகும். அந்த அதிசயக் குழந்தைகள் உலகமே தனி! அதைப் பார்த்து சந்தோஷப்படு! பிறகு தானாகச் சரியாகி விடும்!" என்று பூமாவைத் தட்டிக் கொடுத்தான் பாலாஜி.

வேகமாகப் பரவும் டியூஷன் ஜுரம்!

படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் மட்டுமே முன்பு எடுத்துக் கொண்ட டியூஷன், இன்றைக்கு அனேகமாய் எல்லா மாணவர்களுக்கும் 'அவசியத் தேவை' ஆகிவிட்டது. ஏன்?



• ஜனார்த்தனன்



• விஜயகுமாரி

ஆர். ஜனார்த்தனன், தலைமை யாசிரியர் — கலவி ரங்கநாதன் மாண்ட்போர்ட் ஹையர் செகண்டரி பள்ளி; பெரம்பூர்:

நன்கு படித்த பட்டதாரி பெற்றோர்களுக்குக் கூட இன்றையப் பள்ளி பாடத் திட்டங்கள் மிகக் கடினமாக உள்ளன. குழந்தைகளுக்குப் பாடத்தில் உதவ வேண்டுமானால், அவர்களே முதலில் போய்க் கற்றுக் கொண்டு வர வேண்டும்! பெரும்பாலும் இரு பெற்றோரும் வேலைக்குப் போகும் இந் நாளில் அது சாத்தியமா? அதனால்தான் டியூஷன் அவசியத் தேவையாகி விட்டது. வேறு சில பெற்றோர்கள் 'நாங்கள்தான் சரியாகப் படிக்கவில்லை. எங்கள் குழந்தைகளுக்காவது அந்த வாய்ப்புக் கிடைக்கட்டும்' என்று தகுதிக்கு மீறி ஆங்கில மீடிய பள்ளியில் பிள்ளைகளைச் சேர்த்து விடுவதுமுண்டு. குடும்பத்தில் கல்விப் பின்னணி இல்லாததால் இந்தப் பிள்ளைகள் தவித்துப் போவார்கள். அதனால் வசதியில்லாவிட்டாலும் மிகவும் சிரமப்பட்டு இவர்கள் குழந்தைகளை டியூஷன் வகுப்புக்கு வேறு அனுப்பி ஆக வேண்டியுள்ளது. வீட்டில் டி.வி. பார்க்க வேண்டும் என்பதால் பிள்ளைகளை டியூஷனுக்கு அனுப்பி விட்டு 'ஹாய்' யாக இருக்கும் பெற்றோரும் உண்டு! வேறு சில பெற்றோர்கள், தங்களால் குழந்தைகளைக் கண்டித்துக் கட்டுப்பாட்டுடன் வளர்க்க முடியாது என்பதால் டியூஷன் மாஸ்டரிடம் அந்த 'கசப்பான' பணியை விட்டு விடுகிறார்கள்! பள்ளி ஆசிரியர்கள் பெற்றோரைக் கூப்பிட்டு மாணவர்கள் பற்றிப் புகார் செய்தால், உடனேயே 'டியூஷன் வைத்து விடுகிறேன் சார்!' என்று பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுகிறார்கள்!

பெற்றோர்கள் பக்கத்தில் இவ்வளவு



• ப்ரபா ராமசாமி

• சரத்குமார்



● "ஓர் ஆடு சிக்கினால், ராஜதந்திரிகள் அதன் உரோமத்தை மட்டும் கத்தரித்துக் கொள்வர். ஆனால் அரசியல்வாதிகள் அதன் தோலை உரித்து விடுவர்.

சொன்னவர்: ஆஸ்டின் ஓமாலே.
படித்தவர்: "கதா" கிருபாகரன்.

விதமான பிரச்னைகள் என்றால், கல்வித் திட்டத்திலும் நிறையக் குறைகள்! பாடத் திட்டத்தின் சுமை மிகவும் அதிகம். வகுப்பாசிரியரால் ஒரு வருடத்துக்குரிய பாடங்களை நடத்தி முடிக்க இயலுவதில்லை. இருபத்தைந்து சதவிகிதப் பாடங்களை மாணவர்கள் வெளி டியூஷனால்தான் கற்றுத் தெரிகிறார்கள். ஆசிரிய — மாணவ விகிதாச்சாரமும் சிறப்பாகப் பாடம் நடத்த ஏதுவாக இல்லை. ஒரு பள்ளியின் ஒரு வகுப்பில் 110 மாணவர்கள் படிப்பதாகக் கேள்விப்பட்டேன்! ஆசிரியருக்கு அட்டென்டன்ஸ் எடுக்கவே பதினைந்து நிமிடங்களாகி விடும்! ஹோம்வொர்க் செய்தார்களா என்று பார்ப்பதா? பழைய பாடத்தை நினைவுபடுத்துவதா? புதுப் பாடத்தை எடுப்பதா? எதைச் செய்வார் அந்த ஆசிரியர்!? இந்த மாதிரி சூழ்நிலையில் வகுப்பாசிரியரே டியூஷனைச் சிபாரிசு செய்து விடுகிறார்!

எல்லா வகையிலும் டியூஷன் தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதை வேதனையுடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நல்ல கல்விப் பின்னணியுள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பையன் டியூஷனுக்குப் போவதை அறிந்து அவன் பெற்றோரிடம் விசாரித்தேன். அவர்கள் சொன்ன பதில் அதிர்ச்சியூட்டியது:

"ஸார்! நாங்க ஃபார்வர்ட் கம்யூனிட்டி. பையன் எவ்வளவு மார்க் எடுத்தாலும் போதாது. நூத்துக்கு நூறு எடுத்தாத்தானே எதிர்காலமே!" என்றார்கள். இவ்வகையான பயமும் பலரை ஆட்டிப் படைக்கிறது.

டி.சரத்குமார்; பிளஸ்டூ மாணவர்:

என் நண்பர்கள் சிலர் டி.வி. பார்க்காம, விளையாடாம, டியூஷன் கிளாஸ் போறியேன்னு கேட்டாலும் நான் விடாமல் போய்க்கிட்டுத்தான் இருக்கேன். நிறைய மார்க் வாங்கணும்னு ஒரு வெறி! அதுக்கு இந்த வகுப்புக்கள் ரொம்ப உதவியா இருக்கு. அடிக்கடி டெஸ்ட் வைக்கிறாங்க! வீட்டில் உள்ளது போல் தொந்தரவோ, வேறு மன சஞ்சலங்களோ இல்லாமல் இங்கே பாடத்தை முழுக்க கவனிக்க முடிகிறது. பள்ளியில வகுப்பாசிரியர் போர்ஷன் முடிக்கிற அவசரத்தில் சில சமயம் வேகமாகப் பாடம் நடத்தி விடுவார். அப்போது ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முடிகிறது.

என். விஜயகுமாரி, ஆசிரியை:

இந்தக் காலத்தில் டியூஷன் வகுப்பே பள்ளி வகுப்பறை போலத்தான் இருக்கிறது. வெவ்வேறு கிரஹிக்கும் சக்தி படைத்த பல மாணவர்கள் ஒரே ஆசிரியரிடம் ஒரே சமயத்தில் டியூஷன் எடுத்துக் கொள்கிறார்கள். இதில் யாருக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்திச் சொல்லித் தர முடியும்! இந்த லட்சணத்தில் சில பெற்றோர்கள் — குறிப்பாக அதிகம் படிக்காத எளியவர்கள் — டியூஷன் எடுத்துக் கொண்டால் பையன் நிச்சயம் பாஸாகி விடுவான் என்று உறுதியாக நம்புகிறார்கள். மாணவர்களோ எப்போதும் ஓர் ஆசிரியரைச் சார்ந்தே படித்துப் பழகி, சுயமாகப் படித்து, புரிந்து கொண்டு, விடைகளைத் தேடி அறியும் தகுதியை, வளர்த்துக் கொள்ளாமலே வளர்ந்து விடுகிறார்கள். எதிர்காலத்தில் இவர்கள் தன்னிச்சையாக இயங்க முடியுமா என்பது கேள்விக்குறி.

பிரபா ராமசாமி:

காலை ஒன்பது மணிக்கு வேலைக்குப் போனால் இரவு எட்டரை மணிக்கு வீடு திரும்புகிறேன். உடனே குழந்தைகளைப் போட்டு மிரட்டி படிக்க வைக்கறதா அல்லது அன்புடன் பேசி உணவளித்துக் கொஞ்சம் சந்தோஷமாகப் பொழுது கழிப்பதா? சில சமயம் நாம் ஏதாவது பாடம் சொல்லிக் கொடுத்தால் கூட அவர்கள் 'என் மிஸ் இப்படிச் சொல்லித் தரலை' என்று அலட்சியமாய் ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள். அதனால் டியூஷன்தான் அவர்களுக்கு லாயக்கு. என் மகளுக்கு டியூஷன் அவசியமில்லைன்னாலும், அவள் பள்ளியிலிருந்து நாலு மணிக்குத் திரும்பி, ஆறு மணிக்கு அவள் அப்பா வரும்வரை வீட்டில் தனியாக இருக்க வேண்டியுள்ளது என்பதால் அந்த நேரத்தை வீணடிக்காமல் டியூஷன் வகுப்புக்குப் போகச் செய்கிறோம்!

பேட்டி, படங்கள்: **பிரபுசங்கர்**

யோசனை வழங்கிய வாசகர்:
எம். எம். கோபால், பம்பாய்—18.

டாக்டர் பதில்கள்:



நடுத்தலையில் மட்டும் வழுக்கை விழுவது ஏன்?

● **ஷீலா, கோவை – 12:**

● **D and C ஆபரேஷனைக் கருக் கலைப்புக்கும் செய்கிறார்கள்; மெனோபாஸ் சமயத்தில் அதிக உதிரப் போக்கு ஏற்படும் போதும் செய்கிறார்கள். இந்த ஆபரேஷனால் என்ன நன்மை தீமைகள்? அதற்கு ஏன் இந்தப் பெயர்?**

● **டாக்டர் எஸ். மாலதி, சென்னை – 17:**

Dilatation and Curattage என்பதன் சுருக்கம் தான் D and C. Dilatation = விரிவு படுத்துதல். Curattage : சுரண்டி எடுத்தல். கருப்பையின் வாயைச் சற்று விரிவுபடுத்தி உள்சதைப் பகுதியைச் சுரண்டுவதன் மூலம் புதிய சதை வளர உதவுவது.

கருக்கலைப்பு ஆபரேஷனை D and C என்று அழைப்பது தவறு. கருக்கலைப்புக்கு dilatation மூலம் கருப்பையின் வாயைச் சற்றே விரிவடையச் செய்கிறார்கள். பிறகு suction முறையில் கரு வெளியே உறிஞ்சப் படுகிறது.

D and C அறுவைச் சிகிச்சை செய்வதால் மெனோபாஸ் காரணமாக மட்டுமின்றி மற்ற காரணங்களாலும் பெண்களுக்கு ஏற்படக்கூடிய உதிரப்போக்கைக் கட்டுப்படுத்த முடியும்.

கருப்பையில், கருமுட்டை உற்பத்தி செய்யும் உறுப்புக்களில் (ovaries) ஏதேனும் கட்டிகள் இருந்தால் அவற்றின் இயல்பை நிர்ணயித்துச் சிகிச்சை அளிக்க உதவும் இந்த ஆபரேஷன், புற்று நோயின் அறிகுறிகளையும் உணர்த்திவிடும்.

வயதுக்கு வருவது தாமதமாகும் போதும் குழந்தைப்பேறு தாமதப்படும் போதும் D and C செய்து பிரச்னைக்கு தீர்வு காண உதவ முடியும்.

● **டி. சரவணன், சென்னை – 2:**

● **நடுத்தலையில் முடி முழுவதும் கொட்டினாலும் தலையின் மூன்று பக்க ஓரங்களில் மட்டும் முடி கொட்டாமல் இருப்பது ஏன்?**

● **டாக்டர் பி. குமார், சென்னை – 31.**

இது பெரும்பாலும் வம்ச பரம்பரையால் நிர்ணயமாகும் நிலை. சில சமயம் ஹார்மோன்கள் சரியான அளவில் சுரக்காததாலும் ஏற்படக்கூடும். இதனை 'ஆன்ட்ரோஜினிக் அலோபிஷியா' என்று மருத்துவ மொழியில் அழைப்போம்.

தொகுப்பு: **சலன்.**

கார்த்திக் :.பைன் ஆர்ட்ஸ்

(Regd)

39. பீமண்ண கார்டன் தெரு, சென்னை-600 018. போன்: 73388.

16வது ஆண்டு கலைவிழா — '90

(டிச. 15 முதல் டிச. 25 வரை)

பாரதீய வித்யா பவன்

மயிலாப்பூர், சென்னை-600 004.

சனிக்கிழமை டிச. 15. மாலை 6.00 மணி அளவில்

குத்துவிளக்கேற்றி தொடங்கிவைப்பவர்

'பத்மவிபூஷன்' **எம்.எஸ். சுப்புலட்சுமி** அவர்கள்.

மாண்டலின் **யூ. சீனிவாஸ்** அவர்களுக்கு

"**இசைப்பேரொளி**" பட்டம் வழங்கிப் பாராட்டுபவர்

'பத்மஸ்ரீ' **லால்குடி ஜி. ஜெயராமன்** அவர்கள்

விழாத்தலைவர்

'பத்மவிபூஷன்' டாக்டர் **எம்.எஸ். சுவாமிநாதன்** அவர்கள்

திரு. **எம்.பி. நாராயணன்** (சேர்மன், கோல் இந்தியா லிமிடெட்) அவர்கள்

பாராட்டுரை வழங்குவார்கள்

7 மணிக்கு — குமாரி **அலர்மேல் வள்ளி** — பரதநாட்டியம்

இசை விழா நிகழ்ச்சிகள்

16.12.90 (ஞாயிறு)

காலை 8 முதல் 9.30 மணி வரை
சங்கீத நாமகீர்த்தனம் — பக்த ஸ்வர பஜன் மண்டலி.

10 முதல் 12 மணி வரை
பரதநாட்டியம் — குமாரி **சுஜாதா சீனிவாசன்** — பாபநாசம் சிவன் கீர்த்தனைகள்.

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை
குமாரி பி. **ஸ்ரீதேவி** — வீணை
மேலக்காவேரி கே. பாலாஜி — மிருதங்கம்

3.15 முதல் 4.45 மணி வரை
திருமதி **சுதா ரகுநாதன்** — பாட்டு
திரு கே. சிவராமன் — வயலின்
திருவாரூர் வைத்யநாதன் — மிருதங்கம்.

மாலை 5 முதல் 7 மணி வரை
திரு **மகாராஜபுரம் சந்தானம் & திரு மகாராஜபுரம் ராமச்சந்திரன்** — பாட்டு
நாகை திரு முரளிதரன் — வயலின்
திருவாரூர் திரு பக்தவத்சலம் — மிருதங்கம்

7.15 முதல் 9.15 மணி வரை
மாஸ்டர் **யூ. சீனிவாஸ்** — மாண்டலின்
குமாரி கன்யாகுமாரி — வயலின்
திரு கே.வி. பிரசாத் — மிருதங்கம்
திரு டி.எச். விநாயகராம் — கடம்

17.12.90 (திங்கள்)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை
விசலூர் திரு எஸ். **குருமூர்த்தி** — பாட்டு
திரு எஸ். வரதராஜன் — வயலின்
திரு ஜே. சந்தகுமார் — மிருதங்கம்

3.15 முதல் 4.45 மணி வரை
பெங்களூர் **சுமா சுதீந்திரா** — வீணை

மாலை 5 முதல் 7 மணி வரை
திரு **டி.வி. சங்கரநாராயணன்** — பாட்டு
திருச்சி திரு ராமானுஜாச்சார்யலு — வயலின்
வேலூர் திரு ராமபத்ரன் — மிருதங்கம்

7.15 முதல் 9.15 மணி வரை
பம்பாய் சகோதரிகள் சி. சரோஜா & சி. லலிதா & பார்ட்டி — பாட்டு

18.12.90 (செவ்வாய்)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை
வாத்யமாலா
திரு **நரேஷ் புருஷோத்தம்** — வீணை
திரு ஜி. சந்திரமௌலி — வயலின்
திரு முத்ரா பாஸ்கர் — மிருதங்கம்
திரு எஸ். கார்த்திக் — கடம்

3.15 முதல் 4.45 மணி வரை
திருமதி **சுதாகிருஷ்ணன்** — பாட்டு
திருமதி ராதாசந்திரசேகர் — வயலின்
திரு எஸ். பால சங்கர் — மிருதங்கம்

மாலை 5 முதல் 7 மணி வரை
மதுரை
திரு **டி.என். சேஷகோபாலன்** — பாட்டு
மைசூர் திரு நாகராஜ் — வயலின்
தஞ்சாவூர் திரு டி.கே. மூர்த்தி — மிருதங்கம்

7.15 முதல் 9.15 மணி வரை
"**இசைப்பேரொளி**"
திரு **என். ரவிகிரண்** — கோட்டு வாத்தியம்
மைசூர் திரு மஞ்சுநாத் — வயலின்
பாலக்காடு திரு ரகு — மிருதங்கம்
பாலக்காடு திரு சுந்தரம் — கடம்

19.12.90 (புதன்)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை
திருமதி **பிரேமா ராஜசேகர் & திருமதி இந்திரா கௌரிசங்கர்** — பாட்டு
ஆலந்தூர் திரு நடராஜன் — வயலின்
ஜி. விஜயராகவன் — மிருதங்கம்

3.15 முதல் 4.45 மணி வரை	திருமதி கருணு புருஷோத்தமன் — பாட்டு திருமதி கல்பனு கிஷோர் — வயலின் திரு எஸ். திவாகராஜன் — மிருதங்கம்
மாலை 5 முதல் 7 மணி வரை	திருமதி மணி கிருஷ்ணசாமி — பாட்டு குமாரி மீரா நாராயணன் — வயலின் திரு ரமேஷ் — மிருதங்கம்
7.15 முதல் 9.15 மணி வரை	பரதநிர்த்தியம் — டாக்டர் பத்மா சுப்பிரமணியம்.

20.12.90 (வியாழன்)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை	பூஷணி கல்யாணராமன் — பாட்டு கல்யாணி சங்கர் — வயலின் திரு ஏ.எஸ். ரங்கநாதன் — மிருதங்கம்
3.15 முதல் 4.45 மணி வரை	குமாரி ராதிகா முத்துகிருஷ்ணன் — பாட்டு திரு எம். பாலகிருஷ்ணன் — வயலின் திருவிடைமருதூர் திரு சங்கரன் — மிருதங்கம்
மாலை 5 முதல் 7 மணி வரை	திருச்சூர் திரு. ராமச்சந்திரன் — பாட்டு திரு. எம். சந்திரசேகரன் — வயலின் உமையாள்புரம் திரு. சிவராமன் — மிருதங்கம் திரு. வி. நாகராஜன் — கஞ்சிரா.
7.15 முதல் 9.15 மணி வரை	திரு. டி.என். கிருஷ்ணன் திருமதி விஜி கிருஷ்ணன் (நடராஜன்) — வயலின் திரு. டி.வி. கோபாலகிருஷ்ணன் — மிருதங்கம் திரு. வி. சுரேஷ் — கடம்.

21.12.90 (வெள்ளி)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை	திருமதி சந்திரா கிருஷ்ணமூர்த்தி — பாட்டு பரூர் திரு வெங்கடராமன் — வயலின் கும்பகோணம் திரு பாலு — மிருதங்கம்
3.15 முதல் 4.45 மணி வரை	திருமதி நளினி விநாயக் — சிதார் திரு பி. கணேஷ் — தபலா திரு எஸ். திவாகர் — மிருதங்கம்
மாலை 5 முதல் 7 மணி வரை	திரு டி.கே. ஜெயராமன் — பாட்டு திரு எம்.எஸ். கோபாலகிருஷ்ணன் — வயலின் திரு ஜே. வைத்தியநாதன் — மிருதங்கம்
7.15 முதல் 9.15 மணி வரை	திரு என். ரமணி — புல்லாங்குழல் திரு வி.வி. ரவி — வயலின் காரைக்குடி திரு மணி — மிருதங்கம் திரு வாசன் — கடம்

22.12.90 (சனிக்கிழமை)

காலை 8 முதல் 9.30 மணி வரை	பஜன் ஸ்ரீ ரங்க பாதுகா மண்டலி
10 முதல் 12 மணி வரை	சிக்கில் நீலா & குஞ்சுமணி — புல்லாங்குழல் திருமதி ருக்மணி, திரு சுகவரன், திரு எம். சுப்பிரமணியன்.
பிற்பகல் 2 முதல் 3 மணி வரை	குமாரி எஸ். காயத்ரி — பாட்டு திரு ஜெயப்பிரகாஷ் — வயலின் பரூர் திரு கோபாலகிருஷ்ணன் — மிருதங்கம்
3.15 முதல் 4.45 மணி வரை	திரு டி.வி. சுந்தரவல்லி — பாட்டு திரு வி.எஸ். சுதர்சன் — வயலின் திரு ஜி.கே. கணேஷ் — மிருதங்கம்
மாலை 5 முதல் 7 மணி வரை	திரு ராஜீப் சக்கரபர்த்தி — சரோட்
7.15 முதல் 9.15 மணி வரை	திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் — பரதநாட்டியம்

23.12.90 (ஞாயிறு)

10 முதல் 12 மணி வரை	பட்டிமன்றம் — "இன்றைய இளைஞர்களை அதிகம் பாதிப்பது அரசியலா? திரைப்படமா?" (நடுவர் திருக்குறள் திரு முனுசாமி அவர்கள்)
பிற்பகல் 2 முதல் 3 மணி வரை	திருவாரூர் திரு சாமிநாதன் — புல்லாங்குழல் திரு ஜி. சுந்தரராமன் — வயலின் திரு வி. சுவாமிநாதன் — மிருதங்கம்
3.15 முதல் 4.45 மணி வரை	திருமதி அருணு சாயிராம் — பாட்டு விட்டல் திரு ராமமூர்த்தி — வயலின் பாலக்காடு திரு எஸ்.வி. விஸ்வேஸ்வரன் — மிருதங்கம்
மாலை 5 முதல் 7 மணி வரை	டாக்டர் மானபிகா மித்ரா — கதக்
7.15 முதல் 9.15 மணி வரை	லால்குடி திரு ஜி. ஜெயராமன் & ஜே. விஜயலக்ஷ்மி — வயலின் வேலூர் திரு ராமபத்ரன் — மிருதங்கம்

24.12.90 (திங்கள்)

பிற்பகல் 2 முதல் 3 மணி வரை	திருமதி கே.ஆர். ராஜேஸ்வரி — பாட்டு திருமதி டி. ஹேமமாலினி — வயலின் திரு எஸ். ஸ்ரீதர் — மிருதங்கம்
3.15 முதல் 4.45 மணி வரை	ஹைதராபாத் சகோதரர்கள் — பாட்டு மதுரை திரு பாலசுப்பிரமணியன் — வயலின் தஞ்சாவூர் திரு ஆர். ராமதாஸ் — மிருதங்கம் கிருஷ்ணபுரம் திரு கே.வி. ஆர்.எஸ். மணி — கஞ்சிரா
மாலை 5 முதல் 7 மணி வரை	திரு ஆர். விஸ்வேஸ்வரன் — சன்டூர்
7.15 முதல் 9.15 மணி வரை	திருமதி அனிதா & ப்ரீதா ரத்னம் — பரதநாட்டியம்

25.12.90 (செவ்வாய்) (கிறிஸ்துமஸ்)

8.30 மணி	'மதி ஒளி' — புத்தக வெளியீட்டு விழா
10 முதல் 12 மணி வரை	பாலக்காடு திரு கே.வி. நாராயணசாமி — பாட்டு பம்பாய் திரு சிவகுமார் — வயலின் திரு அர்ஜுன் குமார் — மிருதங்கம்

சீசன் டிக்கட்டுகள்: ரூ.300/-, ரூ.200/-, ரூ.100/-
தினசரி டிக்கட்டுகள்: ரூ.50/-, ரூ.25/-, ரூ.15/-.



பரீட்சை முறையில் மாற்றங்கள் தேவையா?

மாணவர் கட்டுரைப் போட்டி!

ரூ. 50 பரிசு பெறும் கட்டுரை!

கல்வித்திட்டத்தை உருவாக்கும் போதே பரீட்சை முறையையும் அமைப்பது தான் நியதி. அதனால் பரீட்சை முறை சரியல்ல எனச்சாடுவது சரியாகாது. பரீட்சை முறையின் குறைகளுக்கு முதல் காரணம் ஒழுங்கற்ற கல்விமுறைதான்.

பாடதிட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடங்கள், நிஜவாழ்க்கைக்கு ஒத்து வராமல் ஒதுங்கி நிற்கின்றன. பொது அறிவை வளர்க்காமல் மாணவர்களைப் பொதி தூக்கும் கழுதைகளாக மாற்றுகின்றன. மாணவர்களின் அறிவுத் திறன் மட்டுமே பாடத்தின் கண்ணோட்டத்தில் ஏற்கப்படுகின்றன. அவர்களது மனநலம் கருதப்படவில்லை. இதனால் மாணவர்கள் பயத்துடன் படிக்கிறார்கள். ஆர்வத்தோடு அல்ல.

மாணவர்களின் யோசிக்கும் திறனை வளர்க்காமல், அவர்களுக்குப் பாடங்கள் ஊட்டப்படுகின்றன. தேவையில்லாதது திணிக்கப்படுகிறதே தவிர, எந்த அளவுக்கு ஒரு மாணவன் அதைப் புரிந்து கொள்வான் என யோசிக்க ஆசிரியர்கள் மறுக்கிறார்கள். ஆசிரியர்கள் என்ன செய்வார்கள், அவர்களுக்குப் பாடதிட்டத்தை ஒரு கால கட்டத்திற்குள் முடிக்க வேண்டும். பிள்ளைகளின் குணங்களைச் சீர்திருத்தம் செய்யாமல், அவர்களைக் குறை கூறித் தண்டிக்கிறார்கள். இதனால் ஒரு மாணவன் பள்ளியென்பதை அனுபவித்தே ஆகவேண்டிய ஒரு நரகமாகக் கருதுகிறான்.

பரீட்சைக்கு 10-15 நாட்களுக்கு முன் தான் மாணவர்கள் பாடங்களைப் படிக்கிறார்கள், புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களை அப்படியே மனப்பாடம் செய்கிறார்கள். யோசிப்பதில்லை. மாணவர்களின் கேள்வி கேட்கும் திறன் குறைகிறது. ஆசிரியர்களுக்கோ புத்தகத்தில் இருப்பதைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் கோபம் வரும். இதனால் மாணவர்கள் — பள்ளியோ, கல்லூரியோ — கேள்வி கேட்காமல், கொடுக்கப்படும் பாடங்களைப் படிக்கிறார்கள், எழுதுகிறார்கள்.

மாணவர்களை மேதைகளாக்க முக்கிய நடவடிக்கை, பரீட்சை முறையை மாற்றி அமைப்பது தான். புத்தகத்தில் கொடுத்திருப்பதை மட்டும் கேட்காமல், பொது அறிவுக் கேள்விகளும் கேட்கப்பட வேண்டும். வருடம் முழுவதும் அவனது திறனைப் பரீட்சித்து அதன் முடிவில் அவனது திறமையைக் கணக்கெடுக்க வேண்டும்.

எழுத்து முறை பரீட்சையைத் தவிர நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

படிக்கும் படிப்பை எவ்வாறு ஒரு மாணவன் நாட்டின் நலத்திற்காக உபயோகப்படுத்து வான் எனப் பரிசோதிக்க வேண்டும். உதாரணத்துக்கு விலங்கியல் படிக்கும் மாணவன், விலங்குகளின் பராமரிப்பைப் பற்றி ஆராய்ந்து நடைமுறையில் செயல் படுத்தி, அதன் தொகுப்பைச் சமர்ப்பிக்க வேண்டும். இப்படிச் செய்வதால், மாண வனுக்கு அனுபவம் கிடைக்கிறது. புது கருத் துகளும், விஷயங்களும் உருவாக்கப்படு கின்றன. அதனால் சமுதாயத்திற்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. புத்தகத்தைத் தவிர அந்த மாணவன் நிஜ வாழ்க்கையில் படிப்பை உபயோகிக்கப் பழக்கப்படுத்தப் படுகிறான். அவன் கற்றதை முழுமையாக உணருகிறான். படித்ததை மறக்காமலும் இருக்கிறான்.

எந்தப் படிப்பாக இருந்தாலும், அதனுடன் அதன் சம்பந்தபட்ட தொழிற் கல்வியும் அளிக்கப்பட வேண்டும். அதில் சமமாகப் பரீட்சிக்கப் படவும் வேண்டும். இதனால் மாணவர்கள் புத்தகப் புழுக் களாக மாறாமல், அறிஞர்களாக, தன்னம் பிக்கையுடன், முழு மனிதர்களாக உருவா கிறார்கள்.

புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கும் விஷ யத்தை மட்டுமே பரீட்சையில் ஏற்பது முறை யல்ல. அதைத் தவிர எது எழுதினாலும் தவறாகக் கருதப்படுகிறது. மாணவனை மனப்பாடம் செய்யும் இயந்திரமாகக் கருது வதுதான் இன்றையப் பரீட்சை முறையின் அடிப்படைத் தவறு.

— எஸ். சித்ரா இராஜன்,
பி. காம், இரண்டாமாண்டு,
எத்திராஜ் கல்லூரி, சென்னை.

அசோகர் ஏன் மரம் நட்டார்?

சில 'தைரியமுள்ள மாணவர்கள் கட உரு அடிப்பதற்குக் கூட நேரம் இல்லாத தால் 'பிட்' கொண்டு வந்து, தேர்வு எழுதி பாஸ் செய்து விடுகின்றனர். இதற்குச் சில ஆசிரியர்களின் பரிபூரண முழு ஆசியும் உண்டு என்பது மிகவும் வேதனையான விஷயம். எனவே இத்தகைய தேர்வு மூலம் ஒரு மாணவனின் அறிவுத்திறனை சோதனை செய்யக்கூடாது. கல்வி என்பது சிந்தனா சக்தியை வளர்ப்பதாக இருக்க வேண்டும். உதாரணமாக அசோகர் மரம் நட்டதைத்தான் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அசோகர் ஏன் மரம் நட்டார் என்று யாராவது சிந்திக் கிறார்களா? இல்லை. காரணங்களை விளக் கினால், மாணவர்கள் 'ஓ!' மரத்தில் இவ் வளவு மகத்துவம் இருக்கிறதா? இனி நாமும் நம் வீட்டில் மரம் வளர்க்க வேண் டும் என்று எண்ணுவார்கள். இன்று மாண வனைத் தான் படிக்கும் பாடம் தொடர் பாக மேலும் சிந்திக்க விடாமல் தடுப்பதற் குக் கண்டுபிடிக்கப்பட்டதே இந்த "நோட்ஸ்" வசுயறாக்கள்!

— என். ஸி. ரமேஷ்,
பி. காம்., முதலாமாண்டு,
அண்ணாமலை (அஞ்சல் வழிப்)
பல்கலைக் கழகம்.

மார்க் வாங்கும் இயந்திரங்கள்!

மாணவர்கள் பரீட்சையில் மார்க் வாங்கும் இயந்திரங்களாகவே வலம் வரு கிறார்கள். ஆசிரியர்களும் பரீட்சைக்கு உரியவற்றை மட்டும் மேலோட்டமாக லெக்சர் அடித்து விட்டுத் தங்கள் கடமை களைச் சுருக்கிக் கொள்கின்றனர். மாண வர்கள் பாட சம்பந்தமான அதிகப்படி விஷயங்களை நூல் நிலையங்களில் தேடும் ஆர்வம் போய்... வெறும் பரீட்சைக் கேள்வி களுக்கு விடை கொடுக்கும் கைடுகளும் கையுமாகவே அலைகிறார்கள்.

ஆய்வுகள், கருத்தரங்கம், கலந்துரை யாடல் போன்றவற்றின் மூலமும் மாணவர் களின் திறனை எடைபோடலாம். 'Open book examination' கூட ஒவ்வொரு கட்டத் தில் நடத்தலாம். இப்படி வருங்காலத் தேர்வு முறைகள் மாணவனின் இயல்பான பொது அறிவுத் திறனைச் சோதனையிடும் கருவி யாக அமைய வேண்டும். குறிப்பிட்ட முக்கிய பகுதிகளை மனப்பாடம் செய்து எழுதி மார்க் வாங்குவதில் அர்த்தமில்லை. பரீட்சை முடிந்ததும் அதைப்பற்றி மறந்தே விடுவார்கள்.

— எம். கிருத்திகா,
பி. ஈ., முதலாண்டு,
அழகப்பா பொறியியல் கல்லூரி,
காரைக்குடி — பசும்பொன் மாவட்டம்.

கட்டாயப் பாடமாக விருப்பத் தொழில்

"என் கையில் துட்டு, அவன் கையில் பிட்டு" இது எஸ்.எஸ்.எல்.ஸி தேர்வில் மேற்பார்வையாளராகச் சென்ற ஓர் ஆசிரி யரின் கூற்று! கசப்பான உண்மை. இந்தப் பார்க்கும் பொழுது தேர்வு முறையில் மாற்றங்கள் செய்வதால் மட்டும் பயன்

விளைந்து விடாது என்பது விளங்கும். தேர்வுக்குக் காரணமான கல்வி முறையிலேயே மாற்றம் தேவை. சட்டியில் உள்ளது நன்றாய் இருந்தால்தான் அகப்பையில் வருவதும் நன்றாய் இருக்கும். பாடத்திட்டம், போதனா முறை, தேர்வு முறை அனைத்திலும் மாற்றம் தேவை.

ரஷ்யாவின் பள்ளிகளுக்குக் கூட அரசு குறிப்பிட்ட பாடத் திட்டத்தை வகுப்பது கிடையாது. பள்ளிகளின் அதிகாரிகளே கூட அந்தந்த சூழ்நிலைக்கேற்ற பாடத் திட்டத்தை வகுத்துக் கொள்கின்றனர். அதைச் சிறந்த முறையில் போதிக்கின்றனர். ஆனால் நம் பாடத் திட்டமோ போதனை முறையோ சிறந்ததாய் இல்லை. தொழில் சாராத கல்வியில் பட்டங்கள் பெற்று வெளியில் வரும் மாணவர்கள், அரசாங்க வேலை தேடியே அலைகின்றனர். வேலை கிடைக்காவிடில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்று தவிக்கின்றனர். சொந்தத் தொழில் தொடங்கவோ அதைச் சரிவர நடத்தவோ தேவையான கல்வி அவர்களுக்குப் போதிக்கப்படவில்லை. கல்வி என்பது ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. தொழில் தொடங்க அளிக்கப்படும் கடனை மட்டும் வைத்துக் கொண்டு தொழில் துறை தெளிவு சுளிவு தெரியாமல் என்ன செய்ய முடியும்?

மேல்நிலைக் கல்வியில் விருப்பப் பாடம் இருப்பது போல உயர்நிலைக் கல்வி முதல் 'விருப்பத் தொழில்' ஒன்று கட்டாயம் கற்றுக் கொள்ள அறிவுறுத்தப்பட வேண்டும். விருப்பத் தொழில் கற்கும் மாணவர் அதை ஏட்டளவில் கற்காமல் முறையாகத் தொழில் செய்ய வேண்டும். தரமான பொருட்கள் உற்பத்தி செய்யவும் கற்றுத் தர வேண்டும். அவ்வாறு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ற விற்பனைச் சந்தையை உருவாக்கித்தர வேண்டும். விருப்பத் தொழிலில் தேர்ச்சி பெற்றால்தான் கல்வியில் முழுத் தேர்ச்சி பெற்றதாய் அறிவிக்க வேண்டும். கல்வியானது வாழ்க்கை முறையுடன் இணைந்ததாய் இருக்க வேண்டும். குறைந்த வெப்பநிலையில் பிளாஸ்டிக் உருகும் எனப் படிப்பவர்கள் நிஜ வாழ்வில் பிளாஸ்டிக் வாளியை அடுப்பில் ஏற்றும் அவலம் மாற வேண்டும்.

— எஸ். சிவானந்தவல்லி,
பி. லிட்., (தமிழ்), முதலாண்டு,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

புள்ளி விவ(கா)ரம்!

ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து "DATA (புள்ளி விவர அறிக்கை) தயார். உடனே வந்து பெற்றுக் கொள்ளவும்" என்று கிளை மானேஜருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. வேலையில் மெத்தனமான அவர், அன்று பிற்பகலே வந்ததும் அனைவருக்கும் ஆச்சரியம். அவர் நேராகக் கேஷியரிடம் சென்று விசாரித்த போதுதான் விஷயம் புரிந்தது.

DATA என்பதை எழுதும் போது சிறிது இடைவெளி விழுந்து விட்டதால், அதை அவர் D. A. (வெளியூர் பயணங்களுக்கான அன்றாடச் செலவுத் தொகை) — T. A. (பயணப்படி) இரண்டும் பட்டுவாடாவுக்குத் தயார் என்று புரிந்து



கொண்டு, அதைப் பெறவே அவ்வளவு அவசரமாக வந்திருக்கிறார்!

"இது ஒரு புதிய DATA தான் என்று கேஷியர் கூற, ஒரே சிரிப்!

— 'பிஸினஸ் இந்தியா'

தகவல்: அ. ஷண்முகசுந்தரம்.



மேனேஜர்:

"இங்கே எல்லாருக்கும் மத்தியான நேரத்தில் கண்ணை அசத்தறது வாஸ்தவம்தான்; அதுக்காக நீங்க ஆபீஸ் வாசல்லேயே இந்த மாதிரி போர்டு வெச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறது நல்லா இல்லே!"

— சீர்காழி. வி. ரேவதி.

வளமான வாழ்வுக்கு வலுவான குறட்டைகள்!

—பா. ரா.

குறட்டை ஒலி இந்த சமூகத்துக்குத் தேவையில்லாத ஒன்று என்ற கருத்து பொதுவாக நிலவி வருகிறது.

இந்த ஒலியை எந்த விஞ்ஞானியாவது மின்சார சக்தியாக மாற்ற முயல வேண்டும்.

மாட்டுச் சாணத்திலிருந்து கோபர் காஸ் உண்டு பண்ணி விடவில்லையா?

அதிகமாகக் குறட்டை விடும் ஆணையோ பெண்ணையோ இப்போது சமூகம் வெறுக்கிறது.

அவர்களுடைய குறட்டை ஒலியால் மின்சாரம் அல்லது காஸ் உண்டாகி இரவெல்லாம் ஒரு பெட்டியில் சார்ஜ் ஆகிச் சேமிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

குறட்டைக்காரர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டு விடும்.

மறுநாள் சமையலுக்கு காஸ் வேண்டுமா? குறட்டைப் பெட்டியில் ஒரு டியூபைச் செருகினால் கிடைத்து விடும்.

குவைத் நாட்டு எண்ணெய்த் தகராறினால் நாம் பாதிக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை.

குறட்டை மாற்று யந்திரம் மட்டும் கண்டு பிடிக்கப்பட்டு விட்டால் —

அரசு விளம்பரங்கள், மக்களை அதிகமாகக் குறட்டை விடும்படி பிரசாரம் செய்யும்.

'உங்கள் குறட்டைகளை நல்ல முறையில் சேமியுங்கள்'

'வளமான வாழ்வுக்கு வலுவான குறட்டைகள்' என்று பஸ்ஸின் பின்புறம் எழுதி விளம்பரப்படுத்துவார்கள்.

மருமகள்கள், தங்கள் மாமியார் விடும் குறட்டைகளைப் புகழ்வார்கள். ''என் மாமியார் குறட்டை விடுகிறாரோ, எங்க வீட்டு அடுப்பு எரிகிறது.''

பெண் பார்க்கச் செல்லும் பையன், ''பெண்ணுக்குக் குறட்டை விடத் தெரியுமா?'' என்று கேட்டுத் தெரிந்து கொள்வான்.

பெண்ணின் அப்பா தயக்கத்தோடு, ''கொஞ்சம் கொஞ்சம் விடுவாள். நல்ல வாத்தியாரைக் கொண்டு சிட்சை சொல்லி



வைத்திருக்கிறோம்.'' என்பார்.

அம்மா பையனிடம், ''எனக்கென்னவோ அந்தப் பொண்ணு சரியாக் குறட்டை விடா துன்னு தோணறது. அதைக் கட்டிண்டு யாராலே செலவு பண்ண முடியும்? குறைந்த பட்சம் அவள் தேவைக்காவது அவள் குறட்டை விட வேண்டாமா? நாளைக்குத் தனிக் குடித்தனம் போனால் நீ மட்டும் தனியாப் பாவம் எவ்வளவு குறட்டைன்னு விடுவே?'' என்பாள்.

எந்த வகையில் பார்த்தாலும் குறட்டை ஒலியைச் சக்தி வடிவாக மாற்ற வேண்டியது உடனடித் தேவை.

குறட்டைச் சக்தியால் வயல் வெளிகளில் பம்ப் செட் கூட ஓடும்.

('குறட்டை எஸ்.ஆர்.ஏ.' மோட்டாரைப் பயன்படுத்தி ஏராள விளைச்சல் பெறுங்கள்— ரேடியோ விளம்பரம்)

ஆனால் —

ஒரு விஷயத்தில் இப்போதே உறுதியாக இருக்க வேண்டும்.

குறட்டை ஒலிகளை எக் காரணத்தை முன்னிட்டும் அழிவுச் சக்தியாகப் பயன்படுத்தக் கூடாது.

சர்வதேச உடன்படிக்கைகள் எல்லா நாடுகளிடையேயும் ஏற்பட வேண்டும்.

தற்போது வல்லரசுகளாக இயங்கி வரும் ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய மேற்கத்திய நாடுகளால் நம் நாட்டளவுக்கு நிச்சயம் குறட்டை ஒலி சக்தி உற்பத்தி பண்ண முடியாது இந்தியா ஒரு வலிமை மிக்க நாடாகும். பொன்னான வாய்ப்பு நமக்கு உள்ளது.

ஆகவே —

இந்தியப் பெருமக்கள் வீணாக்கிக் கொண்டிருக்கும் குறட்டை ஒலிகளைச் சக்தி வடிவமாக மாற்ற புது டில்லியிலோ எங்கோ ஒரு 'அகில இந்தியக் குறட்டை ஒலி மாற்று இன்ஸ்டிட்யூட்டை' உடனடியாக நிறுவ வேண்டும்.

என் மாமியாரை அந்த நிறுவனத்தின் நிரந்தர டோனராக அதாவது குறட்டை ஒலியை இலவசமாக வழங்குபவராக உடனே அனுப்பி வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

திரைமலராக மலரும்
அடுத்த இதழில்......

●● ''அவார்டு மட்டுமே அங்கீகாரம் இல்லை...''
— பானுப்ரியா பேட்டி



●● தமிழ்த் திரையைக் கலக்கிய வில்லன்கள்
— ஓர் அலசல்

●● ''அந்த நாட்கள் பசுமையானவை...''
— அஞ்சலும் மீனாவும் சந்திக்கிறார்கள்.

●● ''கடன் கொடுத்தாலும் வாங்குவோர் இல்லை!''
— தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத் தலைவர் கூறுகிறார்....

●● சினிமா உலகின் மூட நம்பிக்கைகள்...
—வியப்புக் கட்டுரை

சினிமா உலகம் பற்றி இன்னும் எத்தனையெத்தனையோ புதிய செய்திகள்!

மைக் டைசன் விடும் குத்து போல..!

* முழுக்க முழுக்க வி. பி. சிங்கை வீழ்த்தவே பி.ஜே.பி. தனது ஆதரவைத் துண்டித்துக் கொண்டது என்று வாதிடும் 'இந்து' துணை ஆசிரியர் நிலைமையை நன்றாக அலசியிருக்கிறார்... இருந்தும் என்ன பயன் என மலைப்பாக இருக்கிறது நாட்டின் எதிர்காலத்தை நினைக்கையில்...!

வேலூர் — 2, எல். மாறன்.

* மெல்லிய உணர்வுகளைக் கவிதை வடிவத்தில், வாரந்தோறும் எங்கள் பார்வைக்குப் படைத்து வரும் கவிஞர் ,வைரமுத்துவைப் பாராட்ட வார்த்தைகளில்லை! வைரமுத்து சார், மெதுவாகவே சிகரங்களை நோக்கிச் செல்லுங்கள். நாங்களும் தங்கள் 'கவி'த்தடயங்களைப் பின் தொடர்ந்து வருகிறோம்.

கொங்கணாபுரம், வே. செந்தில்குமார்.

* விளையாட்டுத் துறையில், இந்தியா பொன் போன்று மிளிர்ந்து விளங்க, மாணவர்களின் தங்கமான யோசனைகள் ஒவ்வொன்றும் புடம் போடப்பட்ட பொற்காசுகள்!

ஈரோடு, மனோஜ்குமார்.

* 'கருவறைச் சாபங்கள்' கதை பிரமாதம்! மோபட்டில் ஆலயத்திற்குச் செல்லும் குருக்களைக் காண்பது உண்மை. கதையில் வரும் குருக்களும் உண்மை. மற்ற சாதிகளைப் போல இவர்களிலும் பேதம் காணப்படுவது உண்மையிலும் உண்மை! கோயில் பராமரிப்பு மற்றும் குருக்கள் சன்மானம் விஷயத்தில் சமயப் பெரியோர்கள் கவனம் திருப்பப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

புஷ்பா ராஜ்குமாருக்குப் பாராட்டுக்கள்.

ஒடிசத்தூர், கிருஷ்ணன்.

* 'கருவறைச் சாபங்கள்' கதையில் மனைவி கணவனை 'ஏன்னா' என்று கூப்பிடுவதாகப் பிரசுரமாகியுள்ளது. அது 'ஏன்னா' என்று இருக்க வேண்டும். ஏன்னா அர்த்தம் அனர்த்தம் ஆகிவிடக் கூடாது.

சென்னை — 28, எம். தியாகராஜன்.

* பி. ஜே. பி. தனது ஆதரவை வாபஸ் வாங்கி, வி. பி. சிங் தவிர யார் பிரதமர் என்றாலும் ஆதரவு என்று காங்கிரஸ் சொல்லியும், 'பாராளுமன்றத்தில் மெஜாரிட்டியை நிரூபிப்பேன்' என்று பதவியை உதறாமல், ஜனதா தளத்தைக் காப்பாற்றத் தவறிய வி. பி. சிங் மிக உயர்ந்தவர்தான்! ஆரம்பத்திலிருந்தே, 'பிரதமர் பதவிக்கு வெளிப்படையாகப் போட்டியிடப் போகிறேன்' என்று சொன்ன சந்திரசேகர் பதவிப் பித்துப் பிடித்தவர்தான்!

கல்கியின் போக்கு எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.சந்திரசேகர் ஆட்சிக்குவந்துவிட்டார் அவரது ஆட்சி எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்பதை விட்டுவிட்டு...

காரைக்கால், எஸ். அருணகிரி.

* சந்திரசேகர் பதவி ஏற்ற அவசரத்தனத்தைத் தூற்றுங்கள். அதற்குத் துணை போன ராஜீவின் நரித்தனத்தைச் சாடுங்கள் — ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதற்காகப் புதிய பிரதமர், விலைவாசி, லஞ்சம், ஊழல் ஆகியவற்றைச் சமாளிப்பாரா என்ற கேள்வி அர்த்தமற்றது.

இன்றுள்ள சூழலில் யாரைப் பிரதமராக்கினாலும் விலைவாசி குறையப் போவதில்லை! லஞ்சம் ஒழியப் போவதில்லை! ஊழல் மறையப் போவதில்லை!

இருக்கும் வரை ஒழுங்காக இருக்க ஆக்கபூர்வ யோசனைகளைக் கூறுவதை விட்டுவிட்டு ஒரேயடியாய்க் கேலி பேசித் தரம் தாழ்த்திக் கொள்கிறீர்களே!

மதுரை, — 10, நூர்.

* தலையங்கம் கண்டேன். சந்திரசேகராலோ அவரது அமைச்சரவையினாலோ இப்போது உள்ள பிரச்னைகளுக்கு நல்லதீர்வினை ஏற்படுத்த முடியாது என்னும் தங்களது கருத்தினை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளீர்கள். கருத்துக்கள் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போலில்லாமல் ஒவ்வொரு வாசகரும் மைக் டைசன் விடும் குத்து போல் இருந்தது. பாராட்டுக்கள்!

கோவை, — 26, வி. ச. உத்தமராஜ்.

* இவ்வாரக் கல்கியில் எம். எல். ஏ. சந்திரகாசவைப் பற்றிப் படித்த போதே, உணர்ச்சி வசப்பட்ட என் கண்கள் கலங்கின. இப்படிப்பட்டவரை அறிமுகம் செய்ய உதவிய வாசகர் செல்லூர் கணேசனுக்கும், கல்கிக்கும் நன்றி.

குறிப்பு: நம்பவே முடியவில்லை. இச்செய்தி கல்கியில் வந்ததால் மட்டுமே உண்மையென நம்பி மகிழ்கிறேன்.

மன்னார்குடி, எஸ். ராஜேந்திரன்.

* தொகுதி பக்கமே தலைகாட்டாதவர்களையும் அடிதடி அரசியல் பண்ணும் எம். எல். ஏக்களையும் பற்றியே படித்துச் சலித்த வாசகர்களுக்கு, சந்திரகாச போன்ற எம். எல். ஏக்களும் இருக்கிறார்கள் என்று அடையாளம் காட்டியது ஒரு புதிய நம்பிக்கையை மனத்திற்குள் ஏற்படுத்தியுள்ளது.

பொள்ளாச்சி, ஏ. சி. பிரபு.

* சொந்த மாவட்டமான தஞ்சைக்குப் பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் தென்னகத்துக்கே பெருமை சேர்த்த போலீஸ் கமிஷனர் எஸ். ராமமூர்த்தி அவர்களின் பேட்டிக் கட்டுரையைப் படித்த போது உள்ளம் மகிழ்ந்தது!

முத்துப்பேட்டை, தஞ்சைத்தரணியன்.

* சிலிண்டரிலிருந்து காஸ் ரெகுலேட்டர் மூலம் 0. 5 PSI அழுத்தத்தில் வெளிவருகிறது. அப்பொழுது சிலிண்டரில் உள்ள திரவம் ஆவியாவதால் சிலிண்டர் உள்ளே அழுத்தம் மாறாமல் இருக்கிறது. திரவம் காலியானதும் வாயு ஆவதற்கு மேலும் திரவம் இல்லாததால் அழுத்தம் குறைய ஆரம்பிக்கிறது.

சிலிண்டரில் எவ்வளவு திரவம் இருக்கிறது என்பதை நேரடியாக அறிய ஒரு டேப் இருக்கிறது. இது காந்தத்தினால் சிலிண்டரின் வெளிப் பகுதியில் ஒட்டிக் கொள்கிறது. இதன் மேல் வெந்நீரை ஊற்றினால் திரவம் உள்ள வரை ஒரு நிறமாகவும் அதற்கு மேலே ஒரு நிறமாகவும் மாறும்.

சென்னை — 20, வெ. வரதராஜன்.



சிகரங்களை நோக்கி

8

ஓவியா!

உச்சரிக்க உச்சரிக்க உதடு தித்தித்தது.

ஓவியா!

நீ என்ன இந்த ஊரின் தெருக்கள்
வணங்கும்
தேவதையா?
இல்லை; நீ இந்த மூங்கில் காட்டுக்குள்
வீசுகிற
மூலிகைக் காற்றா?

என்ன மாயம் இது?
இந்த ஊரில் —
இலைகள் அசைந்தால் உன் பெயர்.
நதிகள் நகர்ந்தால் உன் பெயர்.
அரும்பு திறந்தால் உன் பெயர்.

மலையில் விழுந்த மழை தரையில் தாவுவது
போல்
ஊரே உன்னிடத்தில் சரிந்து கிடக்கிறதே!

என்ன மந்திரம் இது?

என் கண்களைக் கூச வைத்தது உன்
அழகின்
வெளிச்சம்.
என் நாவினைக் கட்டிப் போட்டது உன்
அறிவின்
கயிறு.

என் காதுகளில் நிறைந்து வழிகிறது
உன் புகழின் சங்கீதம்.

நீ ஓவியம் — சிற்பம் இரண்டின்
கலவையா?

நிலா — வானவில் இரண்டின் சேர்மானமா?

•

இரவு முழுக்க அவள் ஞாபகக் கொசுக்கள்.
திருஞானம் புரண்டு புரண்டு படுத்தான்.
தூக்கமும் புரண்டு புரண்டு படுத்தது.
அவளைப் பார்க்க வேண்டும்.
மனசுக்குள் அரித்தது; ஆனால் எந்த விரல்
கொண்டு
சொறிவது?

•

விடிந்தது.
கிழக்கே ஓர் அடுப்பு மூட்டி மலை குளிர்
காய்ந்தது.

கூட்டைவிட்டு வெளிவந்த குஞ்சுக்குத்
தாய்ப்
பறவையின் சிறகடி
கதகதப்பாய் இருப்பது மாதிரி.
இமைகளின் மேல் உட்கார்ந்த உஷ்ணம்
கண்களுக்குக் கதகதப்பாயிருந்தது.

எழுது.

ஏதாவது எழுது.

கர்ப்பத்தின் கதவை உதைக்கிற குழந்தை
மாதிரி உள்ளேயிருந்து ஓர் உந்துதல்.

உனக்கு அறிமுகமாகாத ஒரு குரல்
எப்போது
உத்தரவிடுகிறதோ அப்போது மட்டுமே
எழுது
என்பதுதான் எழுத்துக்கு அவன் எழுதி
வைத்திருக்கும்
இலக்கணம்.

கவிதை என்பது வாழ்க்கையின் முகவரி.
ஆனால், இங்கே கவிஞனின் முகவரி கூறும்
அடையாள அட்டையாய் மட்டுமே அது
ஆராதிக்கப்
படுகிறது.

கவிதை என்பது பசி.
கவிதை என்பது தாகம்.

பசியை உற்பத்தி செய்யக் கூடாது.
தாகத்தைத் தயாரித்துவிடக் கூடாது.

கவிதை என்பது சுரப்பது; கறப்பதல்ல.

மேகத்தின் காம்புகளில் யார் மழை கறப்பது?

எழுதினான்.
பேனாவின் மை கரையக் கரைய —
மனசின்
பாரம் குறையக் குறைய — அந்த மலைவெளி
யெங்கும்
அவளே பறந்து — அந்தப் பள்ளத்தாக்கு
எங்கும்
அவளே நிறைந்து எழுதினான்; எழுதிக்
கொண்டே
யிருந்தான்.
பிள்ளையை அணைத்துக் கொண்டே
உறங்கிவிடும்

தாயைப் போல — கவிதை ஏட்டைக்
கக்கத்தில் வைத்துக்
கொண்டே உறங்கிப் போனான்.

பசி தெரிந்ததால் விழிப்பு வந்ததா?
விழிப்பு வந்ததால் பசி தெரிந்ததா?

விழித்தான்.

வானம் தொலைந்து போயிருந்தது.
பூமிக்கு இருட்டு பந்தலிட்டிருந்தது.

மேகம் இறந்து கொள்வதற்கான அறிகுறி
தெரிந்தது.

பசியாற வேண்டுமே! போகலாமா
வேண்டாமா
என்று ஒரு மின்னற்பொழுது யோசித்தான்.

போக வேண்டாம் என்று வானம்
எச்சரித்தது.

ஆனால், மனைவியின் தொல்லை
பொறுக்காமல்
தானம் கேட்கப் போகும் ஒரு மானமுள்ள
புலவனைப் போல் பசியின் இம்சை
பொறுக்காமல்
அவன் புறப்பட்டான்.

துளிகள்; அங்கங்கே மழைத்துளிகள்.

ஒரு துளி உச்சந்தலையில் விழுந்து
உள்ளங்கால்
தொட்டது.

ரொட்டிக்கடை விசாரித்து அவன்
வலப்பக்கம்
திரும்பிய போது சமூகக் கூடத்திலிருந்து
ஒரு
சங்கீதக் குரல்.

கேட்ட குரல்.

நினைவுகளில் தேன் தடவிக் கொண்டிருக்
கும் அந்தக்
குரல்.

கனவுகளின் கதவுகளைத் தட்டிக்
கொண்டிருந்த
அதே குரல்.

வைரமுத்து

வயிற்றிலிருந்த பசி நழுவி விட்டது.
பொசுக்கென்று உள்ளே புகுந்தான்.

உள்ளே —

நிலா.
வயதான நட்சத்திரங்களுக்கு
வகுப்பெடுத்துக்
கொண்டிருந்தது.

கழிந்து போன வாழ்க்கை பற்றிக் கவலைப்
படாமல்
கண்களில் மட்டும் நம்பிக்கை சுமந்து
நரைத்த கிழவிகளும் நரைப்பதற்கு
முடியில்லாத
கிழவர்களும் அந்த இரவுப் பள்ளியில்
நிறைந்திருந்தார்கள்.

வகுப்பெடுக்கும் ஒளியாவின் சங்கீத
சாரீரத்தில் அந்த வயதான வண்டுகள்
மயங்கிக் கிடந்தன.

சில கிழங்கள் ஒருவர் தோளில்
ஒருவர் சாய்ந்து
உறங்கிக் கிடந்தன.
சின்னச் சின்ன அறிவுச் செய்திகளை அந்த
வயதான குழந்தைகளுக்குப் பொறுமையாக
அவன் புகட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு மலைவிளிம்பில் உட்கார்ந்து
வைரங்களை
எண்ணுகிற ஓர் உலோபியைப் போல்
அவன் சிக்கனமாகவும் கவனமாகவும்
செலவு செய்தான் வார்த்தைகளை.

பூமி — உருண்டை என்றான்.
அது தன்னைத் தானே சுற்றிக் கொண்டு
சூரியனைச் சுற்றுகிறதென்றான்.
அறுபது நிமிடங்கள் ஒரு மணி என்றான்.
இந்தியாவில் ஒரு நிமிடத்திற்கு
நாற்பத்தெட்டுக்
குழந்தைகள் ஜனனம் என்றான்.

திருஞானம் கைதட்டினான்; திசை
கிழியச் சிரித்தான்.

ஒளியாவின் கண்களும் — அங்கே உறங்காத
கண்களும் அப்போதுதான் முதன் முதலாய்
அவன் மீது மொய்த்தன.

"நிறுத்துங்கள்!

அனுமதியில்லாத உங்கள் சிரிப்பை நாங்கள்
அங்கீகரிக்க முடியாது.

ஏன் சிரிக்கிறீர்கள்?"

அவன் நிதானமாய்க் கேட்டாலும், அதில்
நிந்தனையின்
தொனியிருந்தது.

அவன் சிரிப்பு சிறுகதையில்லை;
தொடர்கதையானது.

"இந்தப் பாமரர்களை மீண்டும் உங்கள்
குமாஸ்தாக்
கூட்டுக்குள்ளேயே அடைத்துவைக்கிறாயே!
அதைப்
பார்த்துச் சிரிக்கிறேன்.

இவர்களின் ஆன்மாவின் கண்களைத்
தைத்துவிட்டுப்
புறக்கண்கள் திறக்கப்
புறப்பட்டிருக்கிறாயே!
உன்னை நினைத்துச் சிரிக்கிறேன்.

இந்த அந்தி மந்தாரைகளின் இதயங்களை
ஆனந்தத்தால் நிரப்புவதை விட்டுவிட்டு
வெறும் தகவல் பலகைகளாய்த்
தயாரிக்கிறாயே!
இவர்களை நினைத்துச்
சிரிக்கிறேன்."

"வேண்டாம் திருஞானம்! இது விவாத
மேடையல்ல.
நீங்கள் கசாப்புக் கடைக் கத்தியோடு
பூந்தோட்டத்துக்குள்
புகுந்திருக்கிறீர்கள்!

இவர்களுக்கு எழுத்தறிவு கூடாது
என்கிறீர்களா?"

"இல்லை! இல்லை! இதய அறிவு வேண்டும்
என்கிறேன்.

இங்கே மனிதன் இன்னும் கண்களைச்
சரியாய்ப்
பயன்படுத்தவில்லை.

காதுகளை இன்னும் திறக்கவே
யில்லை."

"இவர்கள் காண்பார்கள். முதலில் கண்கள்
எவையென்று காட்டுவோம்.

இவர்களின் தேவை இப்போது கண்களுக்கு
மலர்களல்ல;
காயங்களுக்கு மருந்து."

அந்த வயதான மாணவர்கள் மௌனம்
காத்தார்கள்.

● கேதி ரேஜுக்கு ஐந்து வயதாகிறது. டாக்டர்களை அவன் திண்டாட வைத்துக் கொண்டிருக்கிறான். கேதிக்குப் புதுமையான ஒரு நோய். வெயிலை அல்ல, வெளிச்சத்தைப் பார்த்தாலே அலர்ஜியாகி விடுகிறது. erythopoietic porphyria என்று இந்த அபூர்வ நோய்க்குப் பெயர். வெளிச்சம் உடலில் பட்டாலே, சூரிய வெப்பத்தால் எரிந்து கட்டதைப் போல, உடல் கருகி விடுகிறது. கூடவே, வாந்தியும், வயிற்றுப் போக்கும் கேதியைத் துன்புறுத்துகின்றன. பகல் நேரத்தில் திரைகள் மூடியுள்ள ஓர் அறையில் வாழ்கிறான். சூரியன் மறைந்து, நிலவு வெளிப்படும் போதுதான் அவனுக்குப் பொழுது விடிகிறது. இப்போது கேதியின் உடல், இரண்டு மடங்கு வயதானவன் போலக் காணப்படுகிறது. அவனுக்கு இருபது வயதாகும் போது, பாட்டி போலக் காணப்படு

அவன் குரல் உயர்த்தினான்.
இதுவரை எழுதிவந்த சிரிப்புக்கு
'முற்றும்' போட்டான்.

"இந்த வானத்தின்கீழ் மனிதன்
காயப்படாத
காலம் என்று ஏதாவது இருக்கிறதா?

இந்த பூமி உருண்டையில் ஒரே நேரத்தில்
மனிதர்கள் எந்தக் காலத்தில் உறங்கியிருக்
கிறார்கள்?

தன் ரொட்டிக்கு மனிதன் இன்னொருவனின்
ரத்தத்தைத் தொட்டுக் கொள்ளாத வருடம்
என்று
ஏதாவது உண்டா?

அலைகள் ஓய்வது வரைக்கும் நாம் அழுக்கு
ஜென்மமாகவே இருப்பது உனக்குச்
சம்மதமா
ஓவியா?"

ஓவியாவின் கண்களில் குழப்ப ரேகைகள்.

"உங்கள் வார்த்தைகள் அர்த்தத்திற்கு
வெளியே இருக்கின்றன."

"என் வார்த்தைகள் அர்த்தத்திற்குவெளியே
இருக்கலாம்; தாகூரின் வார்த்தைகளுமா?
சொல்கிறேன், கேள்:

'சூரியனின் மரணத்திற்காக வருந்திக்
கொண்டிருந்தால்
உன்னால் நட்சத்திரங்களையும்
ரசிக்க முடியாது.'"

"புரியவில்லை. சொல்ல வந்ததை மட்டும்
சொல்லுங்களேன்."

"இங்கே உடல்களையும் உடைமைகளையும்
வளர்க்கும் ஏற்பாடுகள் உண்டே தவிர
இதயங்களை வளர்க்கிற ஏற்பாடு இல்லை
என்கிறேன்.

இந்த உலகம் அறிவுக்குச் சாணை
பிடிக்கத்தான்
ஆசைப்படுகிறதே தவிர இதயங்களை
ஈரப்படுத்த
எண்ணவே இல்லை என்கிறேன்.

சரித்திரம் எலும்புக் கூடுகளால்கட்டப்பட்ட
காரணம்
இதுதான்.

வல்லரசுகள் ஆயுதங்களால் பல்குத்திக்
கொள்ளும்
காரணமும் இதுதான்.

அலெக்சாண்டருக்கு மட்டும் ஓர் அருவியின்
பாஷையை அறிமுகம் செய்திருந்தால்,
எகிப்தை இடுகாடாக்கி முடிருடி.
தன்னை ஒரு
கடவுள் என்று பிரகடனப்படுத்தி
விருப்பானா?

இட்லருக்கு மட்டும் ஒரு பூவின்
புனிதத்தை
நாம் போதித்திருந்தால் — அவன்
பிணங்களின்
கொழுப்பில் சோப்புத் தயாரித்திருப்பானா?

நெப்போலியனுக்கு மட்டும் ஒரு மேகம்
கடந்து போவதை
நின்று கவனிக்கும் நிதானம்
இருந்திருந்தால் —
மாஸ்கோ எரிக்கப்பட்டு மயானமாகி
யிருக்குமா?

நிலைமை இப்படியே போனால் இந்த பூமி
உருண்டையே
ஒரு மண்டை ஓடாய் மாறிவிடும் ஓவியா!

முதலில் இந்த மனிதர்களுக்கு
எழுத்துக்களை
அல்ல —

இதயங்களை நேசிக்கக் கற்றுக் கொடு
இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடு.

எங்களுக்குப் பூக்களின் லத்தீன் பெயர்கள்
வேண்டாம். பூக்களைப் பூக்களாகவே
பார்க்கக்
கற்றுக் கொடு.

அதோ! வானம் திறந்து கொண்டது:
வெளியே
மழை பெய்கிறது. எல்லோரையும் திரும்பி
உட்காரச் சொல். பாடம் வகுப்புக்கு
வெளியே இருக்கிறது.

வருகிறேன் ஓவியா! வாழ்க்கை
வெளியே
வழிந்து கொண்டிருக்கிறது.

என்னோடு நனைய
எவர் வருவாரோ...? பார்க்கிறேன்."

அவன் ஓடினான்; மழைமுத்துக்கள்
தோரணங்கட்டி
அவனை வரவேற்றன.

— இன்னும் செல்வேன்

வான் என்கின்றனர் மருத்துவர்கள்.

உலக சரித்திரத்திலேயே இப்படிப்பட்ட நோயால் அவதிப்படும் ஐம்பத்தொன்றாவது நோயாளி கேதி.

— இண்டியன் எக்ஸ்பிரஸிலிருந்து.

தகவல்: சேலம் சக்திக்கொடி.



ராஜீவை எதை வைத்து

* வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

? சமீபத்திய பத்திரிகைகளில் வெளியான கார்ட்டூன்களில் தங்களைக் கவர்ந்தது?

! லக்ஷ்மணனை வெல்லக் கூடியவர் யாருமில்லை.

* ஆர். நிலகவதி, சென்னை.

? புதிதாகப் பதவி ஏற்றவுடன் அமைச்சர்கள் காந்தி சமாதிக்கு அல்லது சிலைக்கு மாலை போடப் போவது ஏன்?

! செய்தது, செய்யவிருப்பது எல்லாவற்றுக்கும் சேர்த்து மன்னிப்புக் கோரத்தான் என்று யாரும் எண்ணிவிட வேண்டியதில்லை. சும்மா, ஒரு கண் துடைப்புத்தான்!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சந்திரசேகரின் புதிய அமைச்சரவையில் உங்களைக் கவர்ந்த அம்சம்?

! உடன் கட்டை ஏறுவதைச் சிறப்பித்த ஒருவருக்கும் கொலை வழக்கினைச் சந்தித்த ஒருவருக்கும் மந்திரி பதவிகள் தரப்பட்டிருப்பது கவனத்துக்குள்ளானது. நம்மைக் கவர்ந்த அம்சம் என்று சொல்லும்படி இனி மேல்தான் மந்திரிகள் நடந்து கொள்ள வேண்டும்.

* எஸ். யோகலிங்கம், சென்னை — 82.

? 'காஷ்மீர் மோசமானதற்குக் காரணம் வி.பி.சிங்தான்' என்று ஃபாரூக் அப்துல்லா கூறியிருப்பது குறித்து?

! 'ராஜீவ் காரணம்' என்று நேற்று சொன்னார்; 'வி. பி. சிங் காரணம்' என்று இன்று சொல்கிறார்; 'சந்திரசேகர் காரணம்' என்று நாளை கூறுவார்!

* பி. சிவா, பாளையங்கோட்டை.

? உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாட்டை எப்படி நீக்குவது?

! தரமான, தன்னம்பிக்கை ஊட்டுகிற கல்வி அனைவருக்கும் கிடைக்கும் போது இந்த மனப்பான்மைகள் தன்னால் நீங்கி விடும்.

* எஸ். வெங்கடேசன், கும்பகோணம்.

? 'தி. மு. க. அரசைக் கலைக்க வேண்டும்' என்று சந்திரசேகருடன் அ. தி. மு. க. பேரம் பேசியதாகக் கூறப்படுவது பற்றி?

! கூறப்படுவது உண்மையானால் அந்த பேரத்தில் கிடைத்திருப்பது தோல்வி.

* கே. ஆர். பவானி, சென்னை.

? 'விஞ்ஞானம் மனிதனின் சோம்பல் குணத்தை வளர்க்க உதவுகிறது' என்ற கருத்தை உங்களால் மறுக்க முடியுமா?

! முடியுமே! இத்தனை விஞ்ஞானப் படைப்புக்களுக்கும் காரணமே மனிதனின் சுறுசுறுப்புத்தானே! எழுத்தாணியும் ஓலையும் இல்லை என்பதால் பேனாவும் காகிதமும் பயன்படுத்தி நீங்கள் கேள்வி எழுதி அனுப்பாமலா இருந்து விட்டீர்கள்?

* ச. அருட்செல்வன், புவனகிரி.

? சமயச் சொற்பொழிவுகள் மூலம் பல கருத்துக்களை மக்களுக்குக் கூறிய புலவர் கீரன் மறைவு குறித்து?

! உபந்நியாசம் என்பதே மறந்து போய், ஒரு சுவாரஸ்யமான நாடகம் பார்ப்பது மாதிரி அவையோரைக் கட்டிப் போட்டு விடும், அவர் பாணி. கரகரப்பான கணீர் குரல். இனிய தமிழ். கதை கூறுவது ஒரு புறமிருக்க, ஊடே ஊடே இந்து சமய தத்துவங்களை அவர் விளக்கிய விதம், அற்புதம்.

* ஷாஜஹான், கம்பம்.


? மத்திய மந்திரி சபையின் ஆரம்பத்தி



* வெல்ல யாருமில்லை



* நேற்று இன்று நாளை...



* கதையும் தத்துவமும்



* மனித அசதி

நம்புகிறார் சந்திரசேகர்?

லேயே ஒரு மந்திரி போர்க் கொடி தூக்கி விட்டாரே?

! ஒருவர் போர்க் கொடி தூக்கி அசடு வழிகிறார்; இன்னொருவர் 'பெட்ரோலியப் பொருள்கள் விலை குறைப்பேன்' என்று கூறிவிட்டு அசடு வழிகிறார். பிரதமரோ முதல் நாள் தமிழக அரசை மிரட்டி விட்டு மறுநாள் 'கலைப்பு இல்லை' என்று மொழிகிறார்.

• ஐ. எஸ். வாசு. மாடாம்பிள்ளை தர்மம்.

? மலிவு விலையில் மதுவும் கொடுத்து, அரிசி விலையும் மலியச் செய்த கலைஞர் பற்றி...?

! முன்னது கஜானாவுக்குப் பணம் சேர்க்க; பின்னது அதைக் கரைக்க. இலவச மின்சாரம், அரிசி விலைக் குறைப்பு என்று இவர் மேலே மேலே கஜானாவைக் காலி பண்ணிப் போய்க் கொண்டே இருப்பதைப் பார்த்துப் பயந்துதான் ஆட்சிக் கலைப்பு இல்லை என்று பிரதமர் அபயமளித்து விட்டாரோ என்னவோ!

• த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? சந்திரசேகர் அணியில் ஹெக்டே சேர்ந்து விட்டாரே?

! அடுத்த தாவல் காங்கிரஸுக்கு!

• ச. டி. விஜயகுமார், ஈரோடு.

? குடியரசுத் தலைவர் மாளிகையில் பதவி ஏற்பு விழாவில் பத்திரிகையாளருக்கு அனுமதி மறுப்பு 'பற்றித் தங்கள் கருத்து...?

! மிக எளிதாகத் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய அசம்பாவிதம். கமிஷன் போட்டு விசாரணை நடத்த வேண்டிய அளவுக்கு அதில் என்ன இருக்கிறதோ, புரியவில்லை. பதவி ஏற்பு வைபவத்தின் கண்ணியத்தைக் குறைத்து அதனை வெட்டவெளிக்குக் கொண்டு வந்ததே பிசகு. விசாரணை இந்த அம்சத்தையும் கவனித்தால் நல்லது.

• கே. எஸ். முத்து. கன்னியம்புத்தூர். •

? ராஜீவ் காந்தியை எதை வைத்துச் சந்திரசேகர் நம்புகிறார்?

! போஃபோர்ஸ் விவகார மிரட்டலை வைத்து ராஜீவின் ஒத்துழைப்பைப் பெற முடியும் என்று சந்திரசேகர் நம்புகிறார். ஆதரவு வாபஸ் மிரட்டலை வைத்து போஃபோர்ஸ் விவகாரத்துக்குச் சமாதி கட்டி விடலாம் என்று ராஜீவ் எண்ணுகிறார்!

• ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? "ஆட்சியைக் கவிழ்ப்பது வேறு: ஆட்சியை நீக்குவது வேறு" — வாழப்பாடி தரும் இந்த நுண்ணிய விளக்கம் பிரதமருக்குப் புரிந்திருக்குமா?

! கவிழ்த்தவர் கையில் நீக்கும் அதிகாரம் குவிந்திருக்கும் போது புரியாமல் போய் விடுமா?

• எஸ். ராஜசேகரன், கொளப்பாடு.

? 'மடத்தனத்தின் மேல் மடத்தனம் செய்து வந்தது வி. பி. சிங் அரசு' என்கிறாரே அத்வானி.

! குற்றம் சாட்டச் சுட்டு விரலைப் பயன்படுத்தும் அவர் மற்ற விரல்களையும் நோக்கட்டும்.






அடுத்த தாவல்



• என்னுகிறார்...



• நம்புகிறார்...

• ரூ. 50 பரிசு பெறுபவர்:

கே. எஸ். முத்து,
தோட்டத்துக்காரர் வீடு,
கன்னியம்புதூர் — 638 056
பெரியார் (மா. வ.)




* ஹரிதாஸ் கிரி ஸ்வாமிகள்

இஷ்ட தெய்வத்திடம் ஈடுபாடு ஏன்?



* நம்பியார்



* திருமுருக கிருபானந்த வாரியார்

ஹரிதாஸ் கிரி சுவாமிகள்: என் குரு ஸ்ரீ ஞானானந்த சுவாமிகள். ஸ்ரீ கிருஷ்ண பகவானை என் குருவின் வடிவில் காண்கின்றேன். அவரை ஆராதித்தால் பூரணமான ஞானம் கிடைக்கும். ஏனென்றால் குருவாக இருந்து ஞானத்தை அருளக்கூடிய பகவத்கீதையை இறைவன் உபதேசித்தது கிருஷ்ணாவதாரத்தில்தானே. எல்லா மனிதர்களுக்கும் இறைவன் அறிவை வழங்கியுள்ளார். அதைப் பயன்படுத்தி, பகுத்தறியும் ஆற்றலை பகவத்கீதையைப் படிப்பதன் மூலம் பெற முடியும். ஆதலால் அந்த கீதையை அருளிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை நான் குருவின் இடத்தில் காண்கிறேன்.

நம்பியார்: எல்லா தெய்வங்களும் எனக்கு இஷ்ட தெய்வங்கள்தான். ஆனால் ஐயப்பனிடம் ஈடுபாடு அதிகம். அவனைத் தரிசிக்க 48 மைல் கஷ்டப்பட்டு நடப்பதில் கிடைக்கும் சுகம் அலாதியானது. கஷ்டப்பட்டு இலக்கை அடையும் காரியங்களில் எனக்கு விருப்பம் அதிகம். ஐயப்பன் ஒவ்வொரு வருடமும் எனது இந்த விருப்பத்துக்கு வாய்ப்பு தந்து என்னை வரவழைத்துக் கொள்கிறார்.

ஒரு குழந்தையிடமுள்ள பொருளைத் 'தா' என்று கெஞ்சிக் கேட்டால் உடனே தந்துவிடும். குழந்தை சாமியான ஐயப்பனும் அப்படியே நாம் கேட்கும் வரங்களை அருளிவிடுவார். இந்த நிமிடம் வரை நான் நல்ல நிலையில் இருப்பதற்குக் காரணம், எனது நியாயமான வேண்டுதல்களைச் செவிமடுத்து அவர் எனக்கு உதவியமைதான்.

திருமுருக கிருபானந்த வாரியார்: வழி வழியாக முருக உபாசனை செய்து வரும் குடும்பம் எங்களுடையது.

முருகப் பெருமானை வணங்கினால் செல்வம், அறிவு, முக்தி ஆகியவற்றை அவர் அருள்வார். இதைத்தான் கந்த புராணத்தில்,

'சீரும் போதமும் அறிவில் வீடும்
போற்றினார்க்கு அருள வல்லான்.'

என்று கூறியிருக்கிறது.

இகலோக வாழ்வை வள்ளியம்மை மூலமாகவும், பரலோக வாழ்வை தெய்வானை அம்மை மூலமாகவும், மோட்சத்தை ஞான வேல் மூலமாகவும் குறைவின்றி வழங்குகிறார் கந்தபெருமான்.

— உபேந்திரா.

வாசகர் யோசனை:
சா. கிருஷ்ணசாமி,
இராசேந்திரப் பட்டினம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



புத்துணர்ச்சியும் பொலிவும் வழங்கும் ஹமாம்!
கண்டுகொள்வீர் ஹமாம் புரியும் ஜாலத்தை, இதுவரை காணாத கூடுதல் புத்துணர்ச்சியும் பொலிவும் உமக்கு. புதுமை குன்றாமல் நீடித்துக் கமழும் நறுமணம். சொகுசான நுரைவளம்—வழங்கும் என்றும் புதுமையான ஹமாம். புத்துணர்ச்சியையும் பொலிவையும் உணருவீர்.
ஹமாம்
குடும்ப சோப்
Hamam
THE FAMILY SOAP
हमाम
டாட்டா தயாரிப்பு

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

